நிறுவனர் : நா.மகாலிங்கம்
ஜூலை 2021

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்
₹15/-



கணையாழியின் கதை

The Riddle of the Ring

அன்புடன்...

நேர்மறை சிந்தனைகளே நோய் தீர்க்கும் மருந்தாகும்

மனித மனம் விசித்திரமானது. நொடிக்கு நொடி மாறக்கூடியது. ஒரு நேரம் நல்ல எண்ணம் தோன்றும்; சில நிமிடங்களிலேயே அந்த எண்ணமே எதிர்மறையாகவும் மாறும். இக்கட்டான நேரங்களில் கேட்கவே வேண்டாம். மனம் அதன் இஷ்டப்படி அலைபாயும்; அமைதியின்றி தவிக்கும்.

கொரோனா என்னும் பெருந்தொற்று மனிதகுலத்தை ஆட்டிப் படைக்கும் இந்தத் தருணத்தில் பெரும்பாலான மக்களின் மனங்களை இனம் புரியாத அச்ச உணர்வும், 'நாளை என்ன நடக்குமோ' என்பது போன்ற எதிர்மறையான சிந்தனைகளும் ஆட்டிப் படைக்கின்றன. இந்த இக்கட்டான நேரத்தில்தான் நாம் மனஉறுதியுடன், 'நாளையப் பொழுது நலமாய் விடியும்' என்ற நம்பிக்கையுடன் நேர்மறையாய் சிந்தித்து செயல்படுவோம். அதுவே நோயுற்றவர்களுக்கு மருந்தாகவும், மற்றவர்களுக்கு எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துவதாகவும் அமையும். நம் மனதில் நேர்மறை சிந்தனைகளே பெருகவேண்டும் என்பதை வள்ளலார் பெருமான், மிக அழகாக அறிவுறுத்திச் சென்றிருக்கிறார். 'ஒருமையுடன் நின் திருமலரடி' என்று தொடங்கும் அந்தப் பாடல் இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது.

அருட்செல்வர் நா.மகாலிங்கம், 'தொன்மையான நாகரிகத்தை ஆய்வு செய்யும் சர்வதேச அமைப்பு' என்ற பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் நம் பண்டைய நாகரிகம், இதிகாச, புராண, வரலாறு போன்றவற்றை ஆய்வு செய்து, தக்க ஆதாரங்களுடன் நூல் வடிவில் வெளி வரச் செய்தார். அவற்றுள் ஒரு நூலின் அடிப்படையில் எழுதப்பட்ட 'கணையாழியின் கதை' இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது.

நம்முடைய நிம்மதியான பாதுகாப்பான நாள்களுக்காக, எல்லைப் பகுதியில் உறக்கம் தொலைத்து காவல் இருக்கும் நம் ராணுவ வீரர்களை கௌரவிப்பது நம் கடமை. அந்த வகையில், 'கார்கில் வெற்றி தினம்' கொண்டாடப்படும் இந்த மாதத்தில், கார்கில் யுத்தம் பற்றிய கட்டுரை; 'மக்கள் பணியே மகேசன் பணி' என்று சேவைக்கென்றே சுவாமி விவேகானந்தர் ஏற்படுத்திய ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தென்னிந்திய தூதுவராக சென்னைக்கு வந்து மடத்தை நிறுவி அறப்பணிகளும், அருட்பணிகளும் மேற்கொண்ட சுவாமி ராமகிருஷ்ணானந்தர் பற்றிய கட்டுரை ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன.

ஊரடங்கு காரணமாக வாசகர்களிடமிருந்து படைப்புகளோ, கடிதங்களோ ஓம்சக்தி அலுவலகத்துக்கு வரவில்லை என்பதால் வாசகர் கடிதங்களும், அவர்கள் அனுப்பி தேர்வு செய்யப்பட்ட படைப்புகளும் அடுத்த இதழில் இடம் பெறும்.

– பொறுப்பாசிரியர்

தொடக்கம் நன்று... தொடரட்டும் என்றும்...



தமிழகத்தில் புதிய ஆட்சி மலர்ந்திருக்கிறது. ஐம்பது வருட அரசியல் அனுபவத்துக்குப் பிறகு தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார் மு.க. ஸ்டாலின்.

கொரோனாவின் இரண்டாவது அலை கோரத் தாண்டவமாடும் மிக இக்கட்டான சூழ்நிலையில் பொறுப்பேற்றுக் கொண்டாலும், சற்றும் சோர்ந்துவிடாமல் அதிரடியாகச் செயல்படத் தொடங்கிவிட்டது மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது. ஓர் அரசாங்கம் மக்கள் நலனில் மிகச் சிறப்பாகச் செயல்படவேண்டும் என்றால், அரசுக்கு ஆலோசனை சொல்லும் அதிகாரிகள் நேர்மையாளர்களாக, மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

இதை கவனத்தில் கொண்டு, முதல்வராகப் பதவியேற்ற உடனே நேர்மையான அதிகாரிகளைத் தேர்வு செய்து பொறுப்புகளை ஒப்படைத்தார். தலைமைச் செயலாளராக இறையன்பு, முதல்வரின் தனிச் செயலாளர்களாக உதயசந்திரன், உமாநாத், சண்முகம், அனுஜார்ஜ் ஆகியோரை நியமித்தார். இவர்கள் அனைவருமே நேர்மையானவர்கள் மட்டுமல்ல மிகச் சிறந்த நிர்வாகத் திறமை கொண்டவர்களும்கூட. இங்கே மற்றொன்றையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். ஆட்சி மாறும்போது முந்தைய ஆட்சியில் செல்வாக்குடன் இருந்த அதிகாரிகளை மாற்றுவது வழக்கம். ஆனால், மிகச் சிறப்பாகச் செயல்படுபவர் என்பதால், முந்தைய ஆட்சியில் சுகாதாரத்துறைச் செயலாளராக இருந்த ஜெ. ராதாகிருஷ்ணனை மாற்றாமல் அந்தப் பொறுப்பிலேயே நீடித்திருக்கச் செய்தார்.



அதற்காக உயர்நீதிமன்றத்தின் பாராட்டுகளையும் பெற்றார்.கொரோனா தடுப்பு நடவடிக்கை களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆலோசனைக் குழுவில், முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரையும் பங்கேற்கச் செய்ததில், எதிர்க்கட்சியினரை எதிரிக் கட்சியினராகப் பார்க்காமல், அவர்களின் ஆலோசனை களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண் டும் என்பதில் முதல்வரின் அரசியல் நாகரிகம் பளிச்சிடுகிறது.

அமைச்சர்கள் நியமனத்திலும் முதல்வரின் செயல்பாடு பலரின் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறது. நிதியமைச்சராக பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் நியமனத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பொதுவாக நிதியமைச்சர் பொறுப்பு கட்சியில் சீனியர்களுக்கே கொடுப்பது மரபு. அந்த மரபை மாற்றி, அந்தப் பொறுப்புக்குத் தகுதியானவரை நியமித்ததில், முதல்வரின் துறை சார்ந்த அக்கறையை வெளிப்படுத்துகிறது.

கொரோனா நிவாரண உதவி, பால்விலை குறைப்பு, மகளிர்க்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் என்று தேர்தலை முன்னிட்டு மக்களுக்குத் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதிலும் சரி, ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வேகத்திலும் சரி, முதல்வரின் செயல்பாடுகள் கட்சியினர் மட்டுமல்லாமல் அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறது. தவறுகள் எதுவும் தன் ஆட்சியில் நடந்துவிடக் கூடாது என்பதிலும் முதல்வர் மிக கவனமாகச் செயல்படுகிறார்.

ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துபவர்கள் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர் களையும் எச்சரித்தது போன்ற நடவடிக்கைகள் மூலம் தன்னுடைய ஆட்சிக்கு சிறு களங்கமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் முதல்வருக்கு இருக்கும் கூடுதல் கவனம் பாராட்டத்தக்கது.

குறிப்பாக இந்து அறநிலையத்துறை சார்பில் அத்துறையின் அமைச்சர் தொடங்கியிருக்கும் கோரிக்கையைப் பதிவிடுக திட்டம் உண்மையி லேயே போற்றத்தக்கது. பக்தர்கள், திருக்கோயில்கள் சார்ந்த தம் குறைகளை அறநிலையத்துறை இணையத்தில் பதிவிட்டால் அறுபது நாள்களுக்குள் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருப்பது வரவேற்கத் தக்கது. இப்படி அனைத்துத் துறை சார்ந்தும் மிகச் சிறப்பான தொடக்கத்தை வழங்கியிருக்கிறது தி.மு.க. அரசு. இது அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் தொடரும் பட்சத்தில் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடிக்கும் தலைவராக முதல்வர் ஸ்டாலினும் எப்போதும் மக்களின் அரசாக தி.மு.க. அரசும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தொடக்கம் நன்றாக இருக்கிறது. இதுவே என்றும் தொடரவும், புதிய அரசு வெற்றிநடை போடவும் வாழ்த்துகிறது ஓம்சக்தி!





ஏபிடி சக்தி
குழுமங்களின் தலைவர்
ம.மாணிக்கம்

'வைட்டமின் சி' இன்றைக்கு மிக அதிகமாக உச்சரிக்கப்படும் வார்த்தை. அதற்குக் காரணம் கடந்த ஆண்டு உலகம் முழுவதும் பரவத் தொடங்கிய கொரோனா என்னும் பெருந்தொற்று. வைட்டமின் சி சத்து கொரோனா வராமல் தடுக்கவும், கொரோனா பாதிப்பு ஏற்பட்டால் அதன் வீரியத்தை அடியோடு குறைத்து தொற்றிலிருந்து நிவாரணம் தரவும் செய்கிறது. இதனால்தான் இன்றைக்கு மனிதர்களுக்கு வைட்டமின் சி சத்து தேவைப்படுகிறது.

மனித உடல் சீராகச் செயல்படுவதற்குப் பல வகையான சத்துகள் தேவைப்படுகின்றன. வளர்ச்சி, பழுதுபார்ப்பு, ஆரோக்கியம் பேணுதல், அவற்றுக்குத் தேவையான ஆற்றல் இவைதான் மனித உடலின் அடிப்படைத் தேவைகள். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுப்பொருள்கள் போன்ற பல வகையான பொருள்கள் தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் உண்ணும் உணவுப் பொருள்கள் மூலமாகவே உடலுக்குக் கிடைக்கின்றன. சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை மனித உடலுக்குத் தேவையான சத்துகள் பற்றிய தெளிவு இல்லாமல்தான் இருந்தது. சில குறிப்பிட்ட உணவுகள் உடல் ஆரோக்கியத்துக்கு உதவுகிறது என்பதை மட்டுமே அறிந்திருந்தனர். மற்றபடி அவற்றில் என்னென்ன ஊட்டச் சத்துகள் இருக்கின்றன என்பது பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான், புரதம், கொழுப்பு, தாதுப் பொருள்கள் ஆகிய ஊட்டச்சத்துக்கள் உடல் ஆரோக்கியத்திற்கு தேவைப்படுகின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் மிகவும் திட்டவட்டமாக கண்டறிந்தனர். இவை அனைத்தைக் காட்டிலும் மிக முக்கியமானது வைட்டமின்கள்தான் என்பதை ஆய்வாளர்கள் இறுதியில் கண்டறிந்தனர்.

உயிர் வாழ்வதற்கு மிக முக்கியமான ஒரு அமைனை (Amine)கண்டுபிடித்த அவர்கள் அதற்கு வைட்டமின் (vital+amine) என்று பெயரிட்டனர். ஒவ்வொரு வைட்டமினும் நம் உடலில் உள்ள வெவ்வேறு குறைபாடுகளை நீக்கி உடல் சீராகச் செயல்படுவதற்கு உதவுகிறது. உதாரணத்திற்கு வைட்டமின் ஏ சத்து நிறைந்த உணவு வகைகள் கண் தொடர்பான பிரச்னைகளை குணப்படுத்துகிறது. அதேபோல் வைட்டமின் டி சத்து கால்சியம் குறைபாட்டை நீக்குகிறது.

அந்த வகையில், கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதும் பரவி வரும் இன்றைய காலக்கட்டத்துக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது வைட்டமின் சி ஆகும். வைட்டமின் சி ஊட்டச் சத்து நம் உடலில் ஒரு ஆன்டிஆக்ஸிடன்ட் மாதிரி செயல்படுகிறது. இந்த வைட்டமின் சி தண்ணீரில் கரையக்கூடிய தன்மையுடை யது.வைட்டமின் சி நம் உடலுக்குத் தேவையான நோயெதிர்ப்புச் சக்தியை வழங்குகிறது. வைட்டமின் சி பற்றாக்குறை ஏற்பட்டால் நமது எலும்புகளும், தசைகளும் பலவீனம் அடைந்துவிடும். வைட்டமின் சி சத்து உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரித்து பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமித் தொற்றுகள் நம்மை அண்டவிடாமல் காக்கிறது. உணவிலிருந்து இரும்புச்சத்தை உறிஞ்சவும், கால்சியம் எலும்புகளுக்கு சென்றடையவும் வைட்டமின் சி அவசியம் தேவை. அது மட்டுமில்லாமல் காய்ச்சல்,சளி போன்றவற்றை குறைக்கவும் உதவுகிறது.



‘மிராக்கிள்’
விடாமுயற்சியில் விளைந்த அற்புதம்!



'மிராக்கிள்' பானம் மாம்பழச் சுவையில் சர்க்கரை சேர்க்கப்பட்டு இனிப்பாகவும், சர்க்கரை சேர்க்காமலும் இரண்டு சுவைகளில் கிடைக்கும். சர்க்கரை சேர்க்கப்பட்ட பானம் ரூ.50/ மற்றும் சர்க்கரை சேர்க்காத பானம் ரூ.60/க்கும் கிடைக்கின்றது. அனைத்து வயதினருக்கும் ஏற்ற இயற்கையான பானம். கோவிட் 19 நோயிலிருந்து மீளவும், பரவாமல் கட்டுப்படுத்தவும் மிராக்கிள் உதவுகிறது. குறிப்பிட்ட சில கடைகளில் மட்டுமே கிடைக்கும் மிராக்கிள் பானத்தை www.mirakle.life என்ற இணையதளம் வழியாகவும் வாங்கிக்கொள்ளலாம்.

வைட்டமின் சி சத்தின் அத்தியாவசியத்தை 19 வருடங்களுக்கு முன்பே உணர்ந்திருந்த ஏபிடி சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் சி சத்து நிறைந்த பானத்தைத் தயாரிக்கவேண்டும் என்று நினைத்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். விடாமுயற்சிக்கு என்றுமே வெற்றிதானே?!

விடாமுயற்சியின் பலனாக 'மிராக்கிள்' (Mirakle) என்ற பெயரில் வைட்டமின் சி நிறைந்த ஊட்டச் சத்து பானம் உருவானது. இந்த பானத்தில் 1,000 மி.கி. வைட்டமின் சி, 500 மி.கி. லிசின், 90 மி.கி. புரோலின் மற்றும் 3,000 மி.கி. பாஸ்போலிபிட்ஸ் உள்ளன. இந்த பாஸ்போலிபிட்ஸ் உடலில் உள்ள செல்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சரி செய்யக்கூடிய நுண்ணூட்டச் சத்தாகும். கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பு ஏற்பட்டபோது, கோவையில் உள்ள மருத்துவமனைகளில் கோரோனா பாதித்த நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 20,000-க்கும் மேற்பட்டோர் மிராக்கிள் பானத்தை அருந்தியதன் மூலம் பலனடைந்தனர்.



ஏபிடி சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், அதற்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் கிடைக்கச் செய்வதிலும் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக மிராக்கிள் பானத்தின் பயன்பாடுகளை அறிய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்திய அடிப்படை மற்றும் பயன்பாட்டு மருத்துவ ஆராய்ச்சி இதழில் (Indian Journal of Basic and Applied Medical Research (IJBAMR) மிராக்கிள் பானத்தில் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். நான்கு கட்டங்களாக நடைபெற்ற இந்த ஆய்வுகளின் முடிவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என்பதற்காக, வைட்டமின் சி சிகிச்சையில் சர்வதேச அளவில் முன்னணியில் இருக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த 'ரியோர்டன் வெல்ஸ் கிளினிக்' -கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களும் ஆய்வு செய்து ஏபிடி சக்தி குழுமங்களின் மகத்தான கண்டுபிடிப்பை பாராட்டியதுடன், மக்கள் கொரோனா பாதிப்பிலிருந்து விடுபட, 'மிராக்கிள்' ஒரு நல்ல தேர்வு என்றும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு 'மிராக்கிள்' நோய் தீர்க்கும் மாமருந்தாகும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

மிராக்கிள் பானம் அருந்தி பயனடைந்தவர்கள் சிலரின் கருத்துகள் அடுத்த இதழில் இடம் பெற உள்ளன.

அருட்பிரகாச வள்ளலாரின் பிள்ளைப் பிராயத்தில் பள்ளியில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் சம்பவம் இது. வள்ளலார் சிறுவனாகப் பள்ளிக்குச் சென்றாலும், கல்வியில் ஏனோ அவருக்கு நாட்டம் ஏற்படவில்லை. ஒருநாள் வகுப்பில் ஆசிரியர், 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்; ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்' என்ற உலக நீதிப் பாடலைப் பாடினார். மற்ற சிறுவர்களும் பாடினர். ஆனால், வள்ளலார் மட்டும் பாடவில்லை. காரணம் கேட்டபோது, 'மனித மனங்களில் எதிர்மறையான சிந்தனைகளை வளர்க்கக்கூடாது' என்று கூறிய வள்ளலார், அருமையான பாடல் ஒன்றையும் பாடினார். அந்தப் பாடல்:





ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாது இருக்க வேண்டும்
பெரு நெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும்; நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்
வளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ மணி
சண்முகத் தெய்வமணியே! சண்முகத் தெய்வமணியே!

இந்தப் பாடலில் வேண்டத் தகாதவற்றைக்கூட, 'வேண்டாம்' என்று சொல்லாமல், வேண்டத் தகாதவற்றை விரும்பாத மனம் வேண்டும் என்று சொல்வது போல் அமைந்ததுதான் பாடலின் இரண்டாவது வரியான, 'உள்ளொன்று வைத்து' என்று தொடங்கும் வரி. எந்தக் காலத்திலும் நம் மனதில் எதிர்மறையான எண்ணங்கள் தோன்றாமல் இருக்க- பிள்ளைப் பிராயத்திலேயே எதிர்மறையான எண்ணங்களைத் தவிர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டிருந்த வள்ளலார் பெருமான் அருளிய இந்தப் பாடல் வரிகளை நாளும் சிந்தித் திருப்போம்.




வேண்டாம் என்ற சொல்லே வேண்டாம்










தமிழ்தான் உலகின் முதல் மொழி. அதைப் பல மன்வந்தரங்கள் கண்ட மொழி என்று சொன்னாலும் தவறில்லை.

இரண்டரை சதுர்யுகங்கள் கொண்டது ஒரு மன்வந்தரம். இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகள் கொண் டது ஒரு யுகம். இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது ஏழாவது மன்வந்தரம் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் நிர்ணயம் செய்துள்ளனர்.

சக்தி களஞ்சியம்

நா.மகாலிங்கம்

பல மன்வந்தரங்கள் கண்ட தமிழ்



சத்யயுகத்திலேயே பஹ்ருளி ஆற்றங்கரையில் சங்கக் கொடி ஏற்றி பாண்டிய நாட்டில் தமிழ் வளர்ந்திருக்கிறது.

கடல்கொண்ட அந்தத் தென்னாடே, நம் தாயகம்; அதுவே குமரிக் கண்டம்; அதில் பஹ்ருளி ஆற்றங்கரையில் இருந்த தென்மதுரை என்ற மாநிலத்தில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தைக் கூட்டியவர் முதலாம் நிலம்தரு திருவின் நெடியோன் என்ற பாண்டிய மன்னன்.

அதில் 546 அறிஞர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

கற்றறிந்த ஞானபீடமாக விளங்கிய இந்தத் தமிழ்ச் சங்கம், 16,149 ஆசிரியர்களின் படைப்புகளைச் சோதித்துத் தன் ஒப்புதலை அளித்தது.

ஆனால், நம் தமிழ்மொழியின் முதல் மாணிக்கங்களான இவற்றில் ஒன்றுகூட இப்போது கிடைக்கவில்லை.



இந்தச் சங்கத்தைக் குறித்து நாம் தெரிந்துகொள்வது, நக்கீரர் மூலமேதான். நக்கீரர் இறையனார் அகப்பொருளுக்கு விளக்கம் கூறியவர். இந்த நூல் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையானது.

இந்த நக்கீரர் முதல் சங்க காலத்தைச் சேர்ந்தவர் அல்லர். மூன்றாம் சங்க காலத்தைச் சேர்ந்தவர். ஆனால், அவர் ஓர் அருமையான காரியம் செய்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார். தமக்கு முன்னால் இருந்த மூன்று சங்கங்களைப் பற்றிப் பல அரிய தகவல்களைத் தொகுத்து இறையனார் களவியல் உரையாக அளித்து இருக்கிறார்.

நக்கீரர் ஒரு சரித்திர நாயகர். அவர் மூன்றாவது தமிழ்ச் சங்கத்தில் முக்கியமானவராகவும், நடுநாயக மாகவும் விளங்கினார்.

தம் சொந்தக் கருத்தை அஞ்சாது உரைக்கும் துணிவுள்ளவர் என்கிற புகழ் அவருக்கு உண்டு. இவர் பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தைச் சேர்ந்தவர்.

இந்தச் சங்கத்தை ஆதரித்து வளர்த்த பாண்டிய மன்னர்களில் ஏழுபேர் கவிஞர்களாகவும் விளங்கினார்கள்.

நக்கீரரைப் பாண்டிய மன்னரும், சக அறிஞர்களும் மிகவும் போற்றினார்கள். அவரைப் பற்றிப் பல கதைகள் உலாவுகின்றன. அதில் ஒன்று பரஞ்சோதி முனிவர் இயற்றிய புகழ்பெற்ற திருவிளையாடல் புராணத்தில் வருகிறது.

அகத்தியம் என்ற ஆதாரபூர்வமான தமிழ் இலக்கண நூலை அகத்திய முனிவர் எழுதியதும் அந்தக் காலத்திலேதான். தமிழர் நாகரிக வளர்ச்சிக்குப் பாடுபட்ட முதல்வர் என்ற பெருமைக்கு உரியவர் ஆதி அகத்திய முனிவர்.

முதல் சங்கம் பல தலைமுறைக் காலம் நீடித்துப் பணிசெய்து வந்தது. சுமார் 89 பாண்டிய மன்னர்கள் தலைமுறை தலைமுறையாக இந்தத் தமிழ்ச் சங்கத்தை ஆதரித்து வந்தார்கள்.

சிவன் என்னும் சித்தர் 64 சித்துகள் – திருவிளையாடல்கள் புரிந்த மதுரை பஃறுளி ஆற்றங்கரையில் இருந்த மதுரை.

அந்த மதுரையின் நினைவாகப் பின்னால் உருவாக்கப் பட்டதுதான் இப்போதுள்ள மதுரை மாநகரம் ஆகும்.

இந்த மதுரையில், பஃறுளி ஆற்றங்கரையில் இருந்த மதுரையில் நடந்த பல நிகழ்ச்சிகளை அப்படியே இப்போது இருக்கும் மதுரையிலும் நினைவுச் சின்னங்களாக வைத்து நமது முன்னோர்களின் புகழைப் போற்றி வருகிறார்கள்.

மதுரையில் மேற்கு மாசித் தெருவில் நக்கீரருக்கு ஓர் ஆலயமும் இருக்கிறது. இந்த ஆலயத்தைச் சங்கத்தார் 'நக்கீரர் கோயில்' என்று அழைக்கிறார்கள்.

சக்தி களஞ்சியம்

மதுரைக்கு அருகிலுள்ள திருப்பரங் குன்றத்தில் நடைபெறும் பங்குனித் திருவிழா நான்காம் நாள் அன்று நக்கீரரின் உருவச் சிலையை எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

நக்கீரரின் சிரஞ்சீவி இலக்கியங்கள் : 1. திருமுருகாற்றுப்படை, 2. நெடுநல் வாடை. திருமுருகாற்றுப் படை முருகனின் புகழைப் பாடுகிறது. முருகனின் ஆறுபடை வீடுகளைப் பற்றிப் பேசுகிறது.

நெடுநல் வாடை (நீண்ட பனிக்காலம்) கற்பனை வளம் நிறைந்த 186 வரிகள் கொண்ட அற்புதமான கவிதை.

இரண்டாவது தமிழ்ச் சங்கத்தில் நாடறிந்த உறுப்பினர் பலர் இருந்தார்கள். அவர்களில் அகத்திய முனிவரும், துவாரகைக் கோமானும் (கண்ணன்) குறிப்பிடத்தக்கவர்கள். இந்த அகத்தியர் முன் சொன்ன அகத்தியர் அல்ல. அந்தச் சந்ததியில் வந்தவர்.

துவாரகைக் கோமான் என்பது துவாரகையை ஆண்ட கண்ணன். அவரே வியாச பகவான் இயற்றிய பாரதத்தில் வரும் பகவத் கீதையின் ஆசிரியர்.

இரண்டாவது தமிழ்ச் சங்கம் 3,700 ஆசிரியர்களின் படைப்புகளை ஆராய்ந்தது. அவற்றில் பெரும்பாலான நூல்கள் கடலில் அழிந்துவிட்டன.

நமக்கு இன்று கிடைத்திருக்கிற இலக்கண நூல் தொல்காப்பியம் ஒன்றுதான்.


மாபுராணம், இசை நுணுக்கம், பெரும் கலித்தொகை, குறுகு என்னும் அரிய பல நூல்களையும் அந்தச் சங்கம் சோதித்தது.

இதன் பிறகு தென்பாண்டிய நாடு கடல்கோளுக்குப் பலியாயிற்று.

தென் மதுரையிலிருந்து சற்றே தள்ளி கபாடபுரத்திற்குச் சங்கத்தை மாற்றினான், பாண்டிய வேந்தன் செழியன்.

இரண்டாம் தமிழ்ச் சங்கம் சோதனை செய்த நூல்களில் தொல்காப்பியம் தவிர, இப்போது வேறு எதுவும் இல்லை.

மீண்டும் இன்னொரு கடல்கோள் ஏற்பட்டதால், கபாடபுரத்தையும் கைவிட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. வடக்கே வந்து புதிதாக இப்போது இருக்கும் மதுரை நகரை உண்டாக்கி அங்கே தலைநகரையும், தமிழ்ச்





சங்கத்தையும் மாற்றினான் பாண்டிய மன்னன் செழியன். இதுவே மூன்றாம் தமிழ்ச் சங்கம்.

மூன்றாவது தமிழ்ச் சங்கம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் நீடித்துத் தமிழ்ப் பணி செய்தது. திருமாறனிலிருந்து உக்ரப் பெருவழுதி வரை 49 பாண்டிய மன்னர்கள் இந்தச் சங்கத்தைக் கட்டி வளர்த்தார்கள். இந்தச் சங்கத்திற்குத்தான் முன்சொன்ன நக்கீரர் தலைவராக இருந்தார்.

இந்தச் சங்கத்தில் 49 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் பெரும் குன்றூர் கிழார், நல்லந்துவனார் இருவரும் முக்கியமானவர்கள்.

மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில் சுமார் 449 நூலாசிரியர்களும், கவிஞர்களும் தம் படைப்புகளால் பிரபலமானார்கள்.

நற்றிணை, புறநானூறு, குறுந்தொகை போன்ற சிறந்த நூல்கள் அப்போதுதான் உருவாயின. இவை எல்லாவற்றையும்விட முக்கியமானது முத்தொள்ளாயிரம். இதன் மூன்று பகுதிகள், மூன்று தமிழ் மன்னர்களைக் குறித்துப் பாடுகின்றன.

தமிழ் இலக்கியம் இப்படிப் பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரு முகமாக முனைப்புடன் பல்கலைக்கழக ரீதியில் வளர்ச்சிப் பெற்று வந்திருக்கிறது. அதனாலேயே அதன் சொல் வளமும், கவி வளமும் மிகச் சிறந்தனவாக இருக்கின்றன. அதன் பெருமைக்கு உரிய வேர்க்கால் இவ்வளவு நீண்ட வருஷங்கள் காலத்தரையில் பரவி ஓடியிருக்கின்றன.

தமிழுக்கே உரிய இலக்கண நூலான தொல்காப்பியம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. பெயரிலிருந்தே அதன் பழைமையை நன்கு உணரலாம்.

தொல்காப்பியம் என்றால் தமிழின் தொன்மையைக் காத்து இயம்புகின்ற நூல் என்று பொருள்.

இந்த நூலில் 1,276 பாடல்கள் அடங்கியிருக்கின்றன. நூலின் முதல் பாகம் எழுத்து இலக்கணத்தை விவரிக்கிறது.

இரண்டாவது பாகம் சொல் இலக்கணத்தை விளக்குகிறது.

மூன்றாவது பாகம் பொருள் இலக்கணத்தின் சிறப்பை விவரித்துக் கூறுகிறது.


இந்த நூல் தமிழ் எழுத்துகள் மொத்தம் முப்பத்தி மூன்றுதான் என்று அறுதியிட்டுக் கூறுகிறது.

தமிழ் எழுத்துகளில் முக்கியமான ஆயுதம், குற்றியல் இகரம், குற்றியல் உகரம் என்ற மூன்று எழுத்துகளின் துணையைக் கொண்டு, உலகத்து மொழிகள் அத்தனையும் தமிழ் எழுத்துகளின் மூலமாகவே அதன் ஓசைநயம் கெடாமல் எழுத முடியும் என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்திருக்கிறது.

தூய்மையான தமிழுக்கே உரிய தமிழ் இலக்கணம் தொல்காப்பியம். இந்த இலக்கண நூல் கவிச் சிறப்புடன் அதற்கு முன் இருந்த பல அரிய இலக்கியங்களில் இருந்து எடுத்துக்காட்டுகளுடன் எழுதப்பட்டிருக்கிறது. இது ஒன்றே எவரையும் தமிழ் மொழியின் சிறப்பை உணரச் செய்துவிடும்.

- அடுத்த இதழில்







இலக்கியம்

காயத்ரி கணேஷ்
படங்கள்: கே.எம்.பிரசன்னா

அழகன் முருகனின் ஆற்றுப்படை

ஆற்றுப்படையின் முதல் படைவீடு

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு'

'உலகம்' என்று தொடங்கி விட்டாலே அது உன்னதப் பொருளைப் பாடும் பாட்டுதான். 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்', 'உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்...'என்று பாடியவர்கள் பாடியவை எல்லாம் அந்தப் பரம்பொருளின் திருவிளையாடல்களைத்தானே. நக்கீரர் தாமாக எடுத்தாரா அல்லது அந்தத் தலைமகன் கொடுத்தாரா என்று தெரியவில்லை. 'உலகம் உவப்ப...' என்றே பாடத் தொடங்கி விட்டார். முதல் சொல் உலகம். அடுத்த சொல் 'உவப்ப...'

இது ஆற்றுப்படை.

துன்பத்தில், வறுமையில், வினைகளில் சிக்கி உழல்பவர்களை ஆற்றுப்படுத்தும் படை. வள்ளல் இருக்கும் இடத்தைக் காட்டி வழிநடத்தும் செயல். சென்று தொழுமுன் தேவைகள் தீர வேண்டும். அந்த வழியைச் சொல்லும்போதே மனம் தேற வேண்டும். அதனால்தான் நக்கீரர் இரண்டாம் சொல்லாக உவப்ப... என்று பாடுகிறார்.

'இந்த உலகில் இன்பம் இருக்கிறதா... துன்பமயமானதாக அல்லவா வாழ்க்கை மாறிவிட்டது' என்று புலம்பும் உயிர்களின் வாட்டம் போக்கப் பாடும்போது 'இந்த உலகில் உவப்பும் இருக்கிறது அதை உவப்பச் செய்பவனும் இருக்கிறான்' என்று பாடுகிறார். தூரத்தில் தெரியும் சிறு ஒளியைக் கண்டதும் இருளில் நிற்பவனின் மனம் வெளிச்சம் அடைந்து எப்படி நம்பிக்கை பெறுமோ அதேபோன்று 'உவப்பு' என்னும் சொல் முதல் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும்.

கடலில் இருந்து எழும் சூரியன் எப்படி இந்த உலகில் இருக்கும் உயிர்களை எல்லாம் வளம் கொள்ளச் செய்கிறானோ அதுபோல முருகப்பெருமான் பக்தர்கள் மனதில் தோன்றி ஒளிபெறச் செய்கிறார் என்று பாட ஆரம்பிக்கிறார் நக்கீரர்.

இப்போது படை வீடுகளைப் பாடவேண்டும். பாலமுருகன் அவதரித்ததிலிருந்து பாட வேண்டும் என்றால் பழநி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருச்செந்தூர், பின் திருப்பரங்குன்றம், திருத்தணி என்ற வரிசை முறையில்தான் பாட வேண்டும். ஆனால், நக்கீரர் பாட ஆரம்பிப்பதோ திருப்பரங்குன்றத்தில். இது போர் முடிந்து தெய்வானையை மணம் புரிந்த திருப்பரங்குன்றத்தைத்தான் நக்கீரர் முதலில் பாடுகிறார். அது ஏன்?

மதுரைக்கு அருகே இருக்கிறார் நக்கீரர். அவரோடு தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று

ஒன்பது பேர் இருக்கிறார்கள். அத்தனைபேருக்கும் அப்போது அருள் தேவை. நோய் முற்றியவர்களுக்கு அவசர சிகிச்சை அல்லவா தேவை... அதுவும் உடனே. அதுவும் அருகிலேயே கிடைத்தால் நல்லது. கொஞ்சம் தொலைவில் என்று சொன்னால்கூட கேட்பவர் மனம் துணுக்குறலாம். அதனால்தான் நக்கீரர் அருகிருக்கும் திருப்பரங்குன்றத்தை முதலில் பாடுகிறார். திருப்பரங்குன்றம் துன்பப்படுபவர்களுக்கான அவசர சிகிச்சைப் பிரிவு. அங்கு சென்றுவிட்டால் முற்றிய வினை யாவும் நீங்கிவிடும். காரணம் அது பரங்குன்றம். 'பரம்' என்றால் 'பரம்பொருள்.' அவனே குன்றாகி இருக்கும் மலை. அங்கு உறையும் இறைவனுக்கு 'பரங்கிநாதர்' என்றே திருநாமம்.

நக்கீரர் ஆற்றுப்படையின் முதல் வீட்டுக்குச் செல்லும் வழியினைச் சொல்கிறார். திருப்பரங்குன்றம் எங்கிருக்கிறது என்பது தெரியவேண்டும் அல்லவா? சிற்றூரை அடைய அருகிலிருக்கும் பேரூரைச் சொல்லி வழிகாட்ட வேண்டும். மதுரை, பேரூர். அதன் அருகே அமைந்திருப்பது பரங்குன்றம் என்னும் சிற்றூர். எப்படி சிவனும் முருகனும் வேறு வேறு இல்லையோ அதுபோல மதுரையும் திருப்பரங்குன்றமும் வேறு வேறல்ல. மதுரைக்குள்தான் திருப்பரங்குன்றமும் உள்ளது. ஆனாலும் சிவனிலிருந்து தோன்றியவன் முருகன் என்று சொல்வதைப் போல மதுரையைச் சொல்லி திருப்பரங்குன்றத்தைச் சொல்கிறார் புலவர். மதுரையின் வளத்தை வாயாரப் பாடுகிறார்.

மற்ற படைவீடுகளிலெல்லாம் முருகன் நின்று அருள்பாலிக்க, திருப்பரங்குன்றத்திலோ அமர்ந்து காட்சி தருகிறார். போர் முடிந்துவிட்டது. போரில் சூரன் வீழ்ந்தான். தேவர் குலம் சிறைமீண்டது. 'தன் இனத்தையே காத்த தலைவனுக்கு என்ன பரிசில் தரமுடியும்' என்று யோசித்தான் இந்திரன். தன்னிடம் உள்ளதில் உயர்ந்த ஒன்றைத் தர விரும்பினான். மூவுலகிலும் முருகனுக்கு உகந்த உயர்ந்த பரிசு கிடைக்கவில்லை. கிடைப்பவை அவன் புகழுக்கு இணையாக இல்லை. சோர்வுற்று அமர்ந்த கணத்தில்தான் அழகு மகள் அவன் முன் வந்தாள். அந்தக் கணம் அவன் முகம் மலர்ந்தது. அழகனுக்கு உரிய பரிசு அவள் எனத் தேர்ந்தான்.

மால் மருகனைத் தன் மருமகனாக்கிக் கொள்ளத் தீர்மானம் செய்தான். தேவர் சூழச் சென்று சேனாபதியை வேண்டினான். திருப்பரங்குன்றத்தில் தெய்வத் திருமணம் முடிந்தது. அந்தத் திருமணக் கோலத் திருகாட்சியே பரங்குன்றத்தில் அருட்காட்சி. முருகப்பெருமானின் அருகில் தெய்வானை அமர்ந்திருக்க, அருகில் நாரதர், பிரம்மன், இந்திரன், சரஸ்வதி, சாவித்ரி, சூரியன், சந்திரன் மற்றும் கந்தர்வர்கள் அங்கு கருவறையில் இன்றும் காட்சி கொடுக்கின்றனர்.

அவன் கரமோ 'செறுநர் தேய்த்த செல்லுறழ் தடக்கை.' செறுநர் என்றால் பகைவர். பகைவரை தேய்த்து அழித்த பெரிய கை அவனுடையது. எனவே அவனை நெருங்கும்போது பகையோடு அல்ல அன்போடு அணுக வேண்டும். அப்படி அணுகினால் நம் பகை அவன் பகை . அவனை அண்டிய அடுத்த கணம் அதைத் தேய்த்து





அழித்துவிடுவான் அந்தக் கந்தன்.

அவன் அருகே அமர்ந்திருக்கிறாள், 'மறுவில் கற்பின் வாணுதல் பெண்மணி.' அவனைச் சரண் புகுந்தவர்களுக்குக் குறைகள் ஏதும் இருக்காது என்பதற்கு அவள் திருக்கோலமே சாட்சி. தெய்வானை தேவலோகத்தில் வளர்ந்தவள். அதுவும் அந்த உலக அரசனின் மகள். தேவலோகத்தில் வாழ்ந்தவள் மண்ணுலகில் வந்து மணம் செய்துகொள்கிறாள். திருமணம் முடிந்து மறுவீடு வருவது போல மறு உலகம் வந்த மருமகள் தெய்வானை. ஆனால் மணவாளனோ மண்ணுக்கும் விண்ணுக்கும் இறைவன். அதனால் அவளுக்குக் குறைகள் எதுவுமே இல்லை. அவள் முகம் ஒளி பொருந்திக் காணப் படுகிறது. அவள் மனம் நிறைந்து இருப்பதை அவள் ஒளிபொருந்திய முகம் நமக்குக் காட்டு கிறது. குறைகள் அற்ற அவளைக் கற்பு மணம்



புரிந்துகொண்டு அமர்ந்திருக்கிறான் திருமுருகன். அவன் கோலத்தைக் கண்ட மாத்திரத்திலேயே நம் துன்பங்கள் தீர்கின்றன. மகிழ்ச்சி மேலோங்குகிறது. மனம் அடையவேண்டிய சந்நிதி அதுதான் என்கிற தெளிவு ஏற்படுகிறது.

நக்கீரர் திருப்பரங்குன்றத்தின் பெருமைகளை எல்லாம் சொல்லிக்கொண்டே இருந்தார். அந்த மலையின் மகிமையையும், அதைச் சூழ்ந்த வயலின் பெருமையையும், அங்கு உறையும் பெருமானின் அழகையும் நக்கீரர் உரைக்க உரைக்கக் கேட்கும் அனைவரும் தம்மை மறந்தனர். யம பயம் நீங்கினர். கடம்ப மலர் தாங்கி நிற்கும் அந்தக் குறிஞ்சி வேலனின் திருமுகத்தைக் கற்பனை செய்தனர். அடுத்த கணமே ஆறுதல் பெற்றனர். ஆறுபடைவீடுகளை தரிசித்தால் உண்டாகும் மகிழ்வையும் புண்ணியத்தையும் நக்கீரர் பாடக் கேட்டே மகிழ்ந்தனர். 'குன்று அமர்ந்து உறைதலும் உரியன்' என்ற அவரின் சொல் கேட்டு ஆறுதல் தரும் ஆற்றுப்படை அருந்தமிழ் பாட்டு முடிந்து விட்டதோ என்று கொஞ்சம் முகம் சோர்ந்தனர். அதை அறிந்த நொடியில் அடுத்த வார்த்தையாக அவர்கள் வாட்டம் போக்குமாறு... 'அதா அன்று...' (அது மட்டுமல்ல...) என்று சொல்லிப் பாடி அடுத்த படை வீட்டைப் பாடத் தொடங்கினார் நக்கீரர்.

- சிந்திப்போம்

திருப்பரங்குன்றத்தின் தனிச் சிறப்பு

திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் குடைவரை மூர்த்தியாக அமைந்திருப்பதால் இங்கு அவருக்கு அபிஷேகங்கள் இல்லை. புனுகு மட்டுமே சாத்தப்படுகிறது. அபிஷேகங்கள் எல்லாம் அவன் திருக்கை வேலுக்குத் தான். திருச்செந்தூரில் வெற்றிவேல் கொண்டு சூரனை சம்ஹாரம் செய்து வேலோடு வந்து அமர்ந்த தலம் என்பதால் இங்கு வேல் விசேஷமாகக் கொண்டாப் படுகிறது. அறுபடை வீடுகளில் வேல் கொண்டாடப்படும் தலங்களில் திருப்பரங்குன்றம் முதன்மையானது. புரட்டாசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை இங்கு வேலுக்கு அபிஷேக ஆராதனைகள் நடை பெறுகின்றன. அதன்பிறகு மலைமேல் இருக்கும் காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு வேல் கொண்டு செல்லப்பட்டுத் திரும்பி வரும். இங்கு வேலை வேண்டிக் கொண்டால் தீராத வினைகள் எல்லாம் தீர்ந்துபோகும்.

இங்கு வந்து வேண்டிக்கொண்டால் திருமண வரம் கிடைக்கும். புத்திர பாக்கியமும் உண்டாகும். நக்கீரரின் நோய் தீர்ந்த தலம் என்பதால் தீராத நோய் உடையவர்களும் இங்கு வந்து வேண்டிக் கொண்டால் அவர்களின் நோய்கள் தீரும் என்பது நம்பிக்கை.

இயற்கை

மு.அரி

அமிர்தத்துக்கு நிகரான மூலிகை



"செந்திலும் சீந்திலும் துணையிருக்க, சீண்டுமோ கால பயம்" என்பது சித்தர்கள் வாக்கு. காயமூலி, அமிர்தவல்லி, சோமவல்லி, சாகாமூலி, சஞ்சீவி, ஆகாசவல்லி, அமிர்தை, குண்டலி, அமிர்தக்கொடி என்றெல்லாம் போற்றப்படும் சீந்தில் கொடி தன்வந்திரி பகவானின் அரைஞாண் அணியாக விளங்குகிறது. மூலிகை மார்க்கண்டேயன் என்று போற்றப்படும் சீந்தில் எல்லா காலங்களிலும் எளிதில் கிடைக்கும் விலை மலிந்த அமிர்த மூலிகை. அழியாத தன்மையைக் கொடுக்கும் சஞ்சீவி, சீந்தில். அகத்தியர் தனது மாணாக்கர்களுக்கு உரைத்த பாடத்தில் 'ஆயுளை நீட்டிக்கும் அதிசயப் பொருள் ஒன்று இந்த பூவுலகில் உண்டென்றால், அது சீந்திலே' என்கிறார் ஆணித்தரமாக. நீண்ட நாள் மனிதனை இந்தக் கொடி வாழ்விப்பதால் இது கற்ப மூலிகை என்றும் குறிப்பிடப்படுகிறது.

கடுமையான வறட்சியையும் தாங்கக் கூடிய இந்த கொடி பொதுவாக மரத்தில் படரும். தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் இந்த சீந்தில் கொடியின் தண்டை தடித்த தோல் மூடி இருக்கும். தோலுக்கு மேல் மெல்லிய படலம் சூழ்ந்திருக்கும். இதன் இலைகள் இதய வடிவில் நரம்புகள் தெளிவாகத் தெரியும்படிக் காணப்படும். முற்றிய இந்தக் கொடியிலிருந்து ஆலமரம் போன்று விழுதுகள் தொங்கும். அதில் காய்கள் பச்சையாக உருண்டு காணப்படும். இவை பழமாகும்போது சிவப்பாக மாறும். முதிராத சீந்தில் கொடியை விட முற்றிய கசப்பு அதிகம் கொண்ட சீந்தில் கொடியே மருத்துவக் குணங்கள் அதிகம் கொண்டது. படரும் இந்தக் கொடியை அறுத்து விட்டாலும் வாழும் தன்மை கொண்டது. பூமியின் நீரை உறிஞ்சி வாழும் தன்மை கொண்டவை இந்தக் கொடிகள். மஞ்சள் நிறத்தில் கொத்துக் கொத்தாக பூக்கும் பூ, ஆண் பூ என்றும் தனித்து பூக்கும் பூ பெண் பூ என்றும் கூறப்படுகிறது.



இதில் பொற்சீந்தில் என்ற ஒரு வகை உண்டு. இது அரிதானது. பொற்சீந்தில் தங்க பஸ்பம் உடலுக்கு உறுதியும் தேஜஸும் அளிக்கக் கூடியது. சீந்தில் கொடியை சிறிது கிள்ளி எண்ணெயில் வறுத்து அந்த எண்ணெயோடு சேர்த்து தலையில் தேய்த்து குழந்தைகளைக் குளிப்பாட்டுவது

தெய்வ மூலிகைகள் 2

இன்றும் கிராமத்தில் வழக்கம். இதனால் சளி, காய்ச்சல் பிடிக்காது என்பதே இதன் சூட்சுமம்.

கொடி வகையைச் சேர்ந்த சீந்தில் உடலுக்கு அமிர்தமான ஆரோக்கியத்தைத் தரக் கூடியது. வஞ்சிக்கொடி என்று போற்றப்படும் இந்த சீந்தில் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்றுநோய்க்கு சிறந்த மருந்தாகும். சர்க்கரை நோய்க்கும் இந்தக் கொடி சிறந்த மருந்தாகும். சீந்தில் கொடிகளை சுத்தம் செய்து நிழலில் காயவைத்து நன்கு வற்றியதும் பொடி செய்து காலை மாலை அரை தேக்கரண்டி பாலுடன் சாப்பிட்டு வர உடலுக்கு தேவையான உறுதியை பெற்றுத் தரும்.

சீந்திலில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் சிறுநீரகச் செயல் இழப்பு, ஆண்மைக் குறைவு, கல்லீரல் பிரச்னைகள், மலச்சிக்கல், வயிற்றுக் கோளாறுகள், காய்ச்சல், சீதபேதி, வெட்டை நோய் ஆகிய நோய்களை குணமாக்கும். சீந்தில் கொடியின் இலை, தண்டு, வேர் என அனைத்துமே சமூலமாய் மருந்தாகிப் பயன்தரக்கூடியது. அஜீரணம், உடல்வலி, சோர்வுக்கும் சீந்தில் கொடியின் பொடி பலன் தரும். மேலும் இது தாது விருத்தியை உண்டாக்கும். மூட்டு வலிகளுக்கு சிறந்த மருந்தும்கூட. கல்லீரலைப் பலப்படுத்தும்.

சீந்தில் கொடியில் இருந்து உருவாகும் வெண்மை நிற சீந்தில் சர்க்கரை, கல்லீரல், மண்ணீரல் உறுப்புகளை பலமடையச் செய்கிறது. மேலும் நீரிழிவு, மஞ்சள் காமாலை, ரத்த சோகை, பல் வீக்கம், இருமல், சளி, வாந்தி பிரச்னைகளுக்கும் நிவாரணம் அளிக்கும். நோய் எதுவும் இல்லாதவர்கள் கூட சீந்தில் பொடியை உள்ளுக்கு எடுத்துக் கொண்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து உடல் ஆரோக்கியம் பெருகும். சீந்தில் கொடியை இடித்து ஊற வைத்து நீரைப் பிரித்து எடுத்தால் அடியில் தேங்கும் வெண்மை நிறப் பொடியே சீந்தில் சர்க்கரை எனப்படுகிறது. இது உடல் வலிமைக்கு நல்ல மருந்து.

சாகாமூலி எனும் இந்தக் கொடியை காயவைத்து பொடியாக்குவதே சிறந்தது. இந்தப் பொடியை பசும்பாலில் கற்கண்டுத்தூள் சேர்த்து குடித்து வந்தால் ஆயுள் அதிகரிக்கும். உடல் வலிமை ஏறும். இன்சுலின் போதும் அளவுக்கு சர்க்கரை வியாதி உள்ளவர்கள்கூட இந்தப் பொடியை எடுத்துக் கொண்டால் சர்க்கரை அளவு கட்டுப்படும். காலையும் மாலையும் இந்தப் பொடியை பாலில் கலந்து குடித்து வந்தால் ரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும். மேலும் இது வயிற்றில் அமிலத் தன்மையை நீக்கி வயிற்றுப் புண்களையும் ஆற்றும்.

வெகுநாளாக செரிமானப் பிரச்னை கொண்டவர்கள் பச்சை சீந்தில் கொடியுடன் அதிமதுரப்பொடி கொஞ்சம், சோம்பு, பன்னீர் ரோஜா சேர்த்து நீர் விட்டு ஊற வைத்து ஒரு



மணி நேரம் கழித்து அந்த நீரை வடிகட்டி தினமும் காலை 50 மில்லி அளவு குடிக்க வேண்டும். இதனால் வயிறு உப்புசம், செரிமானமின்மை, பெரும் தொப்பை ஆகிய பிரச்னைகளில் இருந்து விடுபடலாம்.

எலும்பு உறுதி, நாவறட்சி, காயம் ஆறுதல் போன்றவற்றுக்கும் இந்த மூலிகை பயன்படும். மாந்தத்துக்கும் இது நல்ல மருந்தென ”சீந்திற் கிழங்கருந்த தீபனமா மேகவகை...என்ற பாடல் தெரிவிக்கின்றது. இப்படி தனது எல்லா பாகங்களாலும் மருந்தைக் கொடுத்து சமய சஞ்சீவியாக விளங்கும் இந்த சீந்தில் கொடியை முறையாக தக்க ஆலோசனையுடன் பயன்படுத்தி நலமும் வளமும் பெறுவோம்.●

ரசித்து ருசிப்போம்



தானியங்களில் அதிக சத்து மிக்கது கேழ்வரகு. இதில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து மற்றும் பல உயிர்ச் சத்துக்களும் இருக்கின்றன. இது உடல் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்கும். குடலுக்கு வலிமை அளிக்கும். நீரிழிவு நோயாளிகள் கூட கேழ்வரகால் செய்த பண்டங்களைச் சாப்பிடலாம். கேழ்வரகு உடலுக்கு நல்ல உறுதியைக் கொடுப்பதுடன் உடல் எடையைக் குறைக்கும் குணமும் கொண்டது. நீரிழிவு நோயாளிகளுக்கு மிகமிக நல்லது.

கேழ்வரகு இனிப்பு அடை

தேவை: கேழ்வரகு மாவு - ஒரு கப், வெல்லம் - முக்கால் கப், தேங்காய் - அரை மூடி, ஏலக்காய்த்தூள் - அரை டீஸ்பூன், நெய் - 3 டீஸ்பூன்.

செய்முறை: தேங்காயைத் துருவிக்கொள்ளவும். கால் கப் தண்ணீர் ஊற்றி வெல்லத்தைக் கொதிக்க வைத்து வடிகட்டிக் கொள்ளவும். வாணலியைச் சூடாக்கி கேழ்வரகு மாவைச் சேர்த்து இரண்டு நிமிடங்கள் வறுத்துக்கொள்ளவும். கேழ்வரகு மாவில் வெல்லப் பாகு, தேங்காய்த் துருவல், ஏலக்காய்த்தூள் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் தெளித்து, அடை தட்டும் பதத்துக்குப் பிசைந்துகொள்ளவும். தோசைக்கல்லில் நெய் தடவி, மாவை அடையாகத் தட்டவும். ஒருபுறம் வெந்ததும் திருப்பிப் போட்டு மறுபுறம் வேகவிட்டு எடுக்கவும்.

கேழ்வரகு இடியாப்பம்

தேவை: கேழ்வரகு மாவு - ஒரு கப், தேங்காய் - அரை மூடி, நாட்டுச் சர்க்கரை - 3 டீஸ்பூன், தண்ணீர் - ஒரு கப், எண்ணெய் - 2 டீஸ்பூன், தூள் உப்பு - ஒரு டீஸ்பூன்.

செய்முறை: தேங்காயைத் துருவி வைக்கவும். வாணலியைச் சூடாக்கி கேழ்வரகு மாவைச் சேர்த்து இரண்டு நிமிடங்கள் வறுத்துக்கொள்ளவும். தண்ணீரை உப்பு போட்டுக் கொதிக்கவிடவும். மாவில் வெந்நீரை ஊற்றி கரண்டியால் நன்கு கலக்கவும். ஆறியதும் ஒரு டீஸ்பூன் எண்ணெய் சேர்த்துக் கலந்து, பிழியும் பதத்தில் இருக்கும்படி சிறிது தண்ணீர் சேர்த்து பிசைந்துகொள்ளவும். இட்லிப் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவிடவும். தண்ணீர் கொதித்ததும் மாவை இடியாப்ப அச்சில் போட்டு, இட்லித் தட்டில் துணியை விரித்து அதில் பிழிந்து, பத்து நிமிடங்கள் ஆவியில் வேகவைக்கவும். வெந்த இடியாப்பத்தை உதிர்த்து தேங்காய்த் துருவல், நாட்டுச் சர்க்கரை சேர்த்து பரிமாறலாம். குழந்தைகளுக்கு மிகவும் சத்தான உணவு.



புவனா தியாகராஜன்

பாரதி திருமகனுடன் நேர்காணல்

வில்லிசை இந்த மண்ணின் மெல்லிசை. உழைத்துக் களைத்த மக்களின் உள்ளம் மகிழ்விக்கும் நல்லிசை. 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்ட பாரத'த்தை வாழ்விக்க காந்தி மகான் தோன்றியதுபோல் நலிவுற்று ஆதரிப்போர் இல்லாமல் அழிவுக்குப் போக இருந்த வில்லிசையை வாழ்விக்கத் தோன்றியவர் வில்லிசைக் கலைஞர் சுப்பு ஆறுமுகம் என்றால் மிகையாகாது. அந்த மாபெரும் கலைஞனின் மகள், மருமகன், பேரன் என்று பரம்பரையே அந்த வில்லிசையை ஆதரித்து வருகிறார்கள். அதிலும் அவரின் மகள், பாரதி திருமகன் கலைத்தாயின் திருமகள் என்று சொல்லுமளவுக்குத் தன்னை வில்லிசைக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். உலகெங்கும் சென்று வில்லிசையின் பெருமையைப் பரப்பி வரும் பாரதி திருமகனுடன் ஒரு நேர்காணல் நிகழ்த்தினோம். சுவாரஸ்யமாக, சிலிர்ப்பூட்டும் விதமாக, சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்த அந்த உரையாடல் இதோ உங்களுக்காக...

4 வில்லிசையில் நான்கு தலைமுறை



➔ வில்லிசை என்றாலே சுப்பு ஆறுமுகம் ஐயாதான். அவர் மகளாக வளரும் பாக்கியம் பெற்றவர்கள் நீங்கள். எந்த வயது முதல் மேடையில் அப்பாவோடு இணைந்து பாடுகிறீர்கள்?

தாயாக திருமதி மகாலட்சுமி சுப்பு ஆறுமுகம், தந்தையாக பத்மஸ்ரீ கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களைப் பெற்றோராக அடைந்ததுதான் நான் செய்த பாக்கியம். கலைப்பணி, கவிப்பணி, திரைப்பணி என்ற அயராத கலைவாழ்க்கை அப்பாவோடது. கலைவாணரோடு திரைப்பணி, அவருக்குப் பின் பல படங்களில் வசனம், பாடல் என்ற நிலை... எப்போதும் வீட்டில் தமிழ் இசை ஒலிக்கும். சங்கீதம்... கவிதை... வில்லிசைப் பயிற்சி இதுதான் நான் இளம் வயதில் சுவாசித்த காற்றில் கலந்திருந்தது.

7 வயதில் என்னை அப்பா மேடைக்கு அழைத்துச் சென்றார். ‘இதுதான் மேடை’ என்று தெரியாத வயசு. ஆனால், ‘இளங்கன்று பயமறியாது’ என்று தெரிந்ததைத் தெளிவாகப் பாடினேன். பாவாடை போட்ட உருவம், இரட்டைப் பின்னல், கையில் ஜால்ரா, ஒரே பாட்டு இப்படித்தான் ஆரம்பித்தது என் இசைப்பயணம்.



➔ என்ன மாதிரியான பாடல்கள் உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்?

ஆரம்பத்தில் பக்திப் பாடல்கள். அப்பாவுக்கு தேசபக்தி, தெய்வபக்தி இரண்டும் இரு கண்கள். அப்பாவின் தேசிய, தெய்விகப் பாடல்களை, சமூக சீர்திருத்தப் பாடல்களை என் சகோதரர் காந்தி தாளம் போட நான் இசையமைத்துப் பாடுவது மிகவும் பிடிக்கும். அதனால்தான் இப்போதும் அவற்றைப் போன்ற பயனுள்ள பாடல்களையே பாடப் பிடிக்கிறது. வில்லிசையில் தமிழிசைக் கீர்த்தனைகள், மகாகவி பாரதியார், பாரதிதாசனார் போன்றோரின் பாடல்கள், மும்மூர்த்திகளின் பல மொழி கீர்த்தனங்கள், வள்ளல் பெருமானின் சன்மார்க்க பாடல்கள், மக்கள் வரவேற்பைப் பெற்று பிரபலமாகிய பல மேதைகள் பாடிய பக்திப் பாடல்கள் என்று வில்லிசை மேடையை ஓர் அரிய கலைக்களஞ்சியமாக மாற்றிவிடுவோம். அப்பா அடிக்கடி சொல்வார். ‘ஒருவர் போட்ட பாதையிலே எத்தனை நாள் பயணிப்பது? புதுப்பாதை நீ ஒன்று போடு’ என்பார்! அந்த சூத்திரத்தை நான் அவரிடமே கற்றேன்.

➔ உலகெங்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருப்பீர்கள். அதில் மறக்க முடியாத நிகழ்ச்சி என்று எதைச் சொல்வீர்கள்?

அப்பாவோடு நான் வில்லிசை நடத்தியபோது நடந்த மறக்க முடியாத சம்பவங்களை பல பேட்டிகளில் பதிவு செய்துள்ளேன். தற்போது பல ஆண்டுகளாக அப்பா தந்த வில்லை ‘வில் பவரை’ - சொல் ‘பவரை’ துணையாகக் கொண்டு நான் என் குழுவினருடன் உலகெங்கும் நிகழ்ச்சிகள் நடத்தி வரும்போது நிகழ்ந்த சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். அசாம் மலைச்சாரல். இந்திய அரசாங்க நிறுவன வழி தேசபக்தியைப் போற்றும் வில்லிசை நிகழ்ச்சி. நான் தமிழோடு சற்று பெங்காலி மொழியும் சேர்த்துப் பேசினேன். முப்பது நிமிட நிகழ்ச்சிதான்! ஒரு கான்செப்ட் (concept) கொடுத்தேன். ‘ஐந்து விரல் ஐந்து குரல்!’ . அதாவது ஒவ்வொரு மனிதனும் ஐந்து விஷயங்களை மறக்கக்கூடாது. நாலு நமக்கு

தெரிந்ததே. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லி, அஸ்திவாரமாய் கட்டை விரலை காண்பித்து அதுவே 'தேஷ்' தேசம் என்று சொன்னேன்!

பாடி வெற்றி பெறுவதைவிட அன்று எனது அபிநயங்கள் வெற்றி பெற்றது. நிகழ்ச்சி முடிந்து டீ கொண்டு வந்த சிறுவனிடம், 'வில்லுப்பாட்டு புரிந்ததா, பிடித்ததா' என்று ஆங்கிலத்தில் கேட்டேன். ஒருவர் பெங்காலியில் அதை மொழி பெயர்த்தார். அவன் உடனே தன் வலது கையை காட்டி மாதாஜி, பிதாஜி, குருஜி, பகவான் என்று சொல்லி 'தேஷ்' என்று கட்டை விரலைக் காண்பித்தான்! ஆஹா... என் கண்களில் பெருமிதக் கண்ணீர். வில்லிசை 'கலைமொழி' மட்டுமா... அது மலை மொழி... மலைவாசிக்கும் புரியும் மொழி என்பது புரிந்தது!

மலேசியாவில் ஒரு சிவன் கோயில். மூன்று நாள் தொடர் நிகழ்ச்சி. மனதோடு ஒன்றிவிட்ட மக்கள். நிகழ்ச்சி முடிந்தது. ஓர் இளம் பெண் எழுந்தாள். 'அம்மா! நீங்கள் ஏதேனும் பக்தி சம்பந்தமான சந்தேகம் இருந்தால் கேட்கச் சொன்னீர்கள். நான் சிவனை வழிபடுபவள். தேவாரம் ஓதுபவள். எனக்கு எப்போது முக்தி கிடைக்கும்?' என்றாள்.

நான் ஆடிப்போய்விட்டேன். அவளுக்கு வயது பதினாறு கூட இருக்காது. ஆனால் தோற்றமோ மிகவும் தெய்விகம். நெற்றியில் திருநீறு. மத்தியில் குங்குமம். பாவாடை - தாவணி அணிந்த பாரம்பர்ய உருவம். அவளுக்கு நான் என்ன வழிகாட்டுவது... நான் சொன்ன பதில் 'தாயே! நீதான் சக்தி!' என்றேன்! பக்தியும், பாரதமும், சக்தியும், முக்தியும் சந்தித்த வில்லிசை நிகழ்வாக அது மாறிப்போனது.

➔ உங்கள் இஷ்ட தெய்வம் எது?

யாதுமாகி நின்ற காளி, எங்கள் அசோக் நகரில் நவசக்தி காளி அம்மனாகக் கோயில் கொண்டிருக்கிறாள். மிகவும் சக்தி வாய்ந்த சுயம்பு. இஷ்ட தெய்வம். என் அப்பா, அம்மாவைக் காப்பாற்றித் தந்த தெய்வம். வேண்டுபவை நல்லவையாக மட்டுமே இருப்பதினால் அவற்றை அமுதசுரபியாய் அள்ளித் தரும் அன்னை 'ஓம் சக்தி' அவள்!

➔ அப்பா வித்தியாசமான வில்லிசைப் பாடல்களை இசை அமைத்துப் பாடியிருக் கிறார்கள். நீங்கள் எழுதி இசை அமைத்துப் பாடிய பாடல்களில் உங்களுக்கும் ரசிகர்களுக்கும் பிடித்தமான பாடல் எது?

"வில்லிசை மேடைகளில் இசை அமைத்துப் பாடுவது ஒரு சுவாரஸ்யம். ஏனெனில் எழுதப்பட்ட அந்த கவிதைகளில், மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய விஷயங்கள் இருப்பதனால் வார்த்தைகள் புரியும்படி இசை அமைத்தல் அவசியம். சமீபத்தில் நான் 'மரங்கள் வெட்டக் கூடாது' என்ற தலைப்பில் ஒரு வீடியோவில் பாடிய பாடல்கள் மக்கள் வரவேற்பைப் பெற்றது. தற்போது கொரோனா காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், தடுப்பூசிகள் பற்றி எழுதிய பாடலை மக்கள் மிகவும் ரசித்தனர்.









"கோவாக்சின், கோவிஷீல்ட் போடுங்க!

கொரோனா இல்லா உலகம் பாருங்க"

நான் எழுதிப் பாடும் பாடல்கள் தற்போதைய காலச் சூழலில் விழிப்புணர்வுப் பாடல்களாகவே அமைகின்றன. இவை தவிர மகான்களின் பாடல்களுக்கு அடியேன் இசை அமைத்தது வில்லிசை ரசிகப் பெருமக்கள் உலகில் பிரசித்தம். மகாகவி பாரதியின் - 'வாழ்க நிரந்தரம்,' பாரதிதாசனாரின் - 'எங்கெங்கு காணினும் சக்தியடா,' வள்ளல் பெருமானின் 'ஒருமையுடன் நினது', 'அன்பெனும் பிடியுள்' என்பது போலப் பலப்பல!

நான் ஒரு பெண்ணாக இருப்பதனால் வில்லிசையில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் மிகவும் பிடிக்கும். அப்படித் தாலாட்டுப் பாடல்களை இசையமைத்துப் பாடும் பாக்கியம் கிடைத்தது. மும்மூர்த்திகள், மகான்கள், மகாத்மா காந்தி உள்ளிட்ட தேசபக்தி தலைவர்கள், திருமுருக கிருபானந்தவாரியார், நமது ஐயா, சன்மார்க்க வள்ளல் பொள்ளாச்சி மகாலிங்கம் ஐயா (அவருடைய 80 - வது, 90 - வது பிறந்த தின விழாவில்) எனப் பலரின் சரிதங்களைப் பாடும்போது அவர்களுக்குத் தாலாட்டுப் பாடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவை எல்லாமே அடியேனின் இசையில் அப்பாவின் எழுத்தில் அமைந்த சிறப்பு பெற்ற பாடல்கள். (இதை மிகுந்த தன்னடக்கத்துடனே கூறினார் என்பது குறிப்பிடத் தக்கது)

> "மலேசியாவில் மூன்று நாள் தொடர் நிகழ்ச்சி. மனதோடு ஒன்றி விட்ட மக்கள். நிகழ்ச்சி முடிந்தது. ஓர் இளம் பெண் எழுந்தாள். 'அம்மா! நீங்கள் ஏதேனும் பக்தி சம்பந்தமான சந்தேகம் இருந்தால் கேட்கச் சொன்னீர்கள். நான் சிவனை வழிபடுபவள். தேவாரம் ஓதுபவள். எனக்கு எப்போது முக்தி கிடைக்கும்?' என்றாள்"

➔ அப்பா - மகாபெரியவா..?

ஆசார்யாள் பரிபூரண ஜகத்குருவாக இன்றும் அப்பாவிற்கும், எங்கள் குடும்பத்திற்கும், வில்லிசைக் கலைக்கும் ஆசி பொழிந்து கொண்டிருக்கிறார் என்பது சத்தியம். 1964 - ல்



வில்லிசை விளக்கேற்றி வைத்ததில் இருந்து பாமர மக்கள் மத்தியில் மட்டுமே இருந்த கலை, பல்கலைக் கழகங்களிலும் வளர்ந்து, பலவித சபாக்களிலும் இடம்பெற்று, பரந்த உலகம் முழுவதும் வலம் வந்து இன்று அப்பா பத்மஸ்ரீ விருது வென்றிருக்கும்வரை அனைத்தும் ஆசார்யாள் அனுக்கிரகம்! இன்று தலைமுறை தலைமுறையாக வில்லிசை வளர்வதும் அப்பாவுக்கு ஆசார்யாள் தந்த அனுக்கிரகத்தினால்தான்! எங்களுக்கு இதைவிட வரம் வேறென்ன வேண்டும்?

➔ திருமகன் பற்றி சில வார்த்தைகள்...

திரு'மகன்' மாமாவுக்கு 'ஆமாம்' போடும் பரந்த மனம் கொண்ட மருமகன். கணக்கில்லாத கலைரசனை. கணக்கான கல்லூரி முதல்வர்! ஈகோ இல்லாத இணையர் நாங்கள்! நான் மேடையிலே அடிக்கடி சொல்வேன். 'காலையிலே கல்லூரி முதல்வர் 'கோட்டுக்காரர்...! மாலையிலே மேடையிலே பாட்டுக்காரர்...! மொத்தத்தில் என் வீட்டுக்காரர் 'He is my best half'.

➔ உங்க குழந்தைகள் இதே துறையில் ஆர்வமா இருக்காங்களா? அறிமுகப்படுத்துங்க...

"ஒரே மகன். பெயர் கலைமகன்! வாரியார் சுவாமிகள் தலைமையில் எங்கள் திருமணம் நடந்தது. திருமண நாளில், 'பாரதிக்கும், திருமகனுக்கும் ஞானசம்பந்தன் பிறப்பான்' என்றார். தெய்வத் திருவுள்ள வாக்கு பலித்தது. குழந்தை பிறந்தவுடன் காஞ்சி பரமாசார்யாளிடமும் ஆசீர்வாதம் பெற்றோம். வாரியார் சுவாமிகளும் மடியிலிட்டு விபூதி பூசினார். கபாலீஸ்வரர் கோயில் மேடையில் 3 வயதில் சுருதி சேர்ந்தது கலைமகனுக்கு. இசைப்பயிற்சி ஆரம்பித்தேன். தற்போது அவர் இசையில் M.A. சென்னைப் பல்கலைக்கழகத்தின் தங்கப்பதக்கம் பெற்றவர். M.phil, NET முடித்தவர்! சென்னை கலாக்ஷேத்திராவின் இசை ஆசிரியர். இதெல்லாம் செய்துகொண்டும் மாலை நேரங்களில் கர்நாடக சங்கீதம், தமிழிசை, வில்லிசை எனப் பல மேடைகளில் கச்சேரி செய்கிறார். யுவகலாபாரதி, இசைமணி, 'பொற்றாமரை' தங்கப் பதக்கம் போன்ற பல விருதுகள் பெற்றவர். அகில இந்திய வானொலியில் கிரேடட் கலைஞர். அப்பா,90 - வது வயதில் ஆரம்பித்த 'டி.வி. சுப்பு ஆறுமுகம் நுண்கலை மைய'த்தின் செயலாளர். இணையவழி உலகெங்கும் இருக்கும் மாணவர்கள் பலருக்கும் இசை வகுப்புகள் எடுப்பவர். இதெல்லாம் பெரியவா ஆசிதான். என்ன சொல்கிறீர்கள்..."

என்று கேட்டுவிட்டு முகம் மலரச் சிரித்தார் பாரதி திருமகன். அவர் 'வில்'பவரும் 'சொல்'பவரும் இன்னும் பல நூறு ஆண்டுகள் நிலைத்திருக்க வேண்டும் என்று வாழ்த்தி விடைபெற்றோம். ●

ஆங்கில மூலம் : ஸ்வாமி தபஸ்யானந்தர்
தமிழில்: எஸ்.கே

குருவருள் பெற்ற திருவருட்செல்வர்!

வங்கம் தந்த தனிப்பெரும் தவஞானி ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். தக்ஷிணேஸ்வரத்து தவயோகியான அவரை பாமரர் முதல் பண்டிதர் வரை அனைவரும் நாடிவந்து தரிசித்து அருள் பெற்றனர். குருமகராஜ் என்று அனைவராலும் பக்தியுடன் அழைக்கப்பெறும் ஸ்ரீராம கிருஷ்ணரின் திவ்ய சரிதம் போலவே, அவருடைய சர்வ சமய சமரச நெறிகளை உலகமெங்கும் பரவச் செய்த அவருடைய சீடர்களின் தரிசனமும் திவ்வியமானது மட்டுமல்ல. படிப்பவர்களின் சகல பாவங்களையும் போக்கவல்லது. குருமகராஜின் சீடர்களில் முதன்மையானவர் சுவாமி விவேகானந்தர். அவர், குரு மகராஜின் பிரதிநிதியாகச் சென்னைக்கு அனுப்பி வைத்த சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் திவ்விய சரிதத்தின் சில பகுதிகள் இங்கே உங்களுக்காக...

-பொறுப்பாசிரியர்

1863 இந்து சமய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு!

அந்த ஆண்டில்தான் வங்கம் தந்த சர்வ சமய சமரசஞானி ஸ்ரீராமகிருஷ்ன பரமஹம்சரின் பெருமையையும், இந்து தர்மத்தின் அமரத்துவத்தையும் அகிலமெல்லாம் பரப்பிய சுவாமி விவேகானந்தர் அவதரித்தார். அதே ஆண்டில்தான் சுவாமி விவேகானந்தர், பரமஹம்சரின் தென்னிந்தியத் தூதராக அனுப்பிய சுவாமி ராமகிருஷ்ணானந்தரும் அவதரித்தார்.


1863-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் நாள் ஆசாரமான அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்த ஈஸ்வர் சந்திர சக்கரவர்த்திக்கும், பவசுந்தரி தேவிக்கும் முதல் மகனாகப் பிறந்தார். சிறுபிராயத்திலிருந்தே ஆன்மிகத்தில் நாட்டம் அதிகம் கொண்டிருந்த சசிபூஷண் (சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் இயற்பெயர்) படிப்பிலும் முதல்தர மாணவனாக விளங்கினார்.

படிப்பிற்காகக் கல்கத்தாவில் மருந்துக்கடை வைத்திருந்த, தன் தந்தையின் ஒன்றுவிட்ட சகோதரரான கிரீஷ் சந்திரா என்பவர் வீட்டிற்கு அனுப்பப்பட்ட சசிபூஷணும், கிரீஷ் சந்திராவின் மகன் சரத்சந்திரரும் ஒன்றாகப் பழகினர். சரத்சந்திரரும், சசிபூஷணைப் பின்பற்றி தம்மை ஆன்மிகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார்.

கல்லூரி நாள்களில், பெரும்பாலான அன்றைய கல்கத்தா கல்லூரி மாணவர்களைப் போலவே சசிபூஷணும், சரத் சந்திரரும் கேசவ சந்திர சென்னின் பிரம்ம சமாஜத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். பல மதங்களின் நூல்களைப் படித்து, அவை எல்லாவற்றிலும் சிறிது சிறிது சேர்த்து பிரம்ம சமாஜம் என்ற புதிய ஸ்தாபனத்தைத் தொடங்கினார் ராஜாராம் மோகன்ராய். பிரம்ம சமாஜத்தின் பிரதான மாணவராகத் திகழ்ந்தவர் கேசவசந்திர சென்.

சசிக்கும் சரி, சரத்துக்கும் சரி, பிரம்ம சமாஜத்தின் கோட்பாடுகளில் அவ்வளவாக ஆர்வம் ஏற்படவில்லை. இந்நிலையில்தான் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த பதினைந்து பேர்கள், சமாஜத்தின் ஆண்டு விழாவை தட்சிணேசுவரத்தில் கொண்டாட வேண்டும் என்று சசியையும், சரத்தையும் அழைத்து வந்தனர். சசியின் மீதும், சரத்தின் மீதும் பரமஹம்சரின் அருட்பார்வை பட்டுவிட்டது. சசி, சுவாமி ராமகிருஷ்ணானந்தராகப் பரிமளித்தார்; சரத், சுவாமி சாரதானந்தராகப் பரிணமித்தார்.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஆரம்பக் காலத்தில் பரமஹம்சரைத் தரிசித்த அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்:



ஜூலை - 13 பிறந்த தினம்

“குரு மகராஜை தரிசித்த முதல்நாள் நான் நிறைய பேசினேன். அடுத்தடுத்த நாள்களில் நான் பேசுவதே இல்லை. நான் ஒவ்வொரு முறையும் அவரை தரிசிக்கச் செல்லும்போது, மனம் நிறைய சந்தேகங்களைச் சுமந்தபடி செல்வேன். நான் ஏதும் கேட்காமலே, குருமகராஜின் வார்த்தைகள், என்னைக் கரையான் போல் அரித்துக் கொண்டிருக்கும் சந்தேகங்களை போக்குவதாகவே அமைந்துவிடும்!”

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் குருபக்தியில் சிறந்தவர். எதற்காகவும் தமது குருபக்தியை விட்டுக் கொடுக்க மாட்டார். ஒரு கோடைக்கால தினத்தில் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் குருமகராஜைக் காண்பதற்காக கல்கத்தாவிலிருந்து ஆறு மைல் தொலைவில் இருந்த தட்சிணேசுவரத் துக்குப் புறப்பட்டார். குருமகராஜிற்காக ஒரு பேப்பரில் சுற்றப்பட்ட ஐஸ் துண்டை எடுத்துச் சென்றார். (ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்குக் ஐஸ்கட்டி என்றால் மிகவும் விருப்பம்) குருபக்தி மிகவும் கொண்டிருந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தர், தட்சிணேசுவரம் சென்று குருமகராஜை தரிசித்தபோது, பரமஹம்சர் உடல் உபாதையால் வருந்துவதுபோல் ‘ஓ...ஓ..’ என்று அரற்றிக் கொண்டிருந்தார். சுவாமி ராமகிருஷ்ணானந்தர், “குரு மகராஜ்! தங்களுக்கு என்ன செய்கிறது? ஏன் இப்படி அரற்றுகிறீர்கள்?” என்று கேட்டார்.


தம் பக்தர்களிடமும், சீடர்களிடமும் தாயினும் சாலப்பரிவு காட்டும் அந்த பரமதயாளர் ராமகிருஷ்ணானந்தரின் உடலை நோக்கியபடி... “நீ தகிக்கும் வெயிலில் வந்ததால்தான் என் உடல் தகிக்கிறது” என்றார். இதில் வியக்கத்தக்க ஒரு விஷயம். அந்தத் தகிக்கும் வெயிலில் சுமார் ஆறு மைல்தூரம்நடந்தும்சுவாமிராமகிருஷ்ணானந்தரின் கையில் இருந்த ஐஸ்கட்டி கொஞ்சம் கூட உருகிக் கரையாமல் அப்படியே இருந்தது.

இறைவனுக்கும், குருவுக்கும் செய்யும் சேவை, மற்ற சமய நூல்களையும் தத்துவங்களையும் படிப்பதை விடவும் மிகவும் முக்கியமானது மட்டும் அல்ல அவசியமானதும் கூட. கடவுள் தொண்டும், குரு சேவையும்தான் ஆன்மஞானம் பெறுவதற்கான சுலபமான மிகச் சரியான வழிமுறை ஆகும். சுவாமி ராமகிருஷ்ணானந்தர் தட்சிணேசுவரத்தில் இருந்த சமயத்தில், இதை உணர்த்தும் வகையில் ஒரு சம்பவம் நடைபெற்றது.

ஒருமுறை சுவாமி ராமகிருஷ்ணானந்தர் பெர்சிய மொழியிலான சூஃபி பாடல்களை, அந்த மொழியிலேயே படிப்பதற்கு ஆர்வம் கொண்டு, அதற்காக முறைப்படி பெர்சிய மொழியைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். ஒருநாள் அவர் அப்படி படித்துக் கொண்டிருந்தபோது பரமஹம்சர் அவரை அழைத்தார். ஆனால், படிப்பில் ஆழ்ந்துவிட்ட அவருக்கு, குருமகராஜ் மூன்றாவது முறையாக சற்று சத்தமாக அழைத்தபோதுதான் குரு மகராஜின் அழைப்பு கேட்டது. உடனே குருமகராஜிடம் ஓடினார். பரமஹம்சர், “ஏன் இத்தனை தாமதம்? என்ன செய்து கொண்டிருந்தாய்?” என்று கேட்டார். சுவாமி ராமகிருஷ்ணானந்தர் தமது புதிய முயற்சியைப் பற்றிச் சொன்னார். அதற்கு பரமஹம்சர், “நீ உன்னுடைய எண்ணத்தைப் படிப்பின் மீது செலுத்துவதன் மூலம் உன்னுடைய கடமைகளை மறந்து விடுவாயானால், அதனால் உன்னுடைய ஆழ்ந்த பக்தியை இழந்துவிடுவாய்” என்றார். குருமகராஜின் வார்த்தைகளில் இருந்த உண்மையைப் புரிந்துகொண்ட சுவாமி ராமகிருஷ்ணானந்தர் தாம் வைத்திருந்த பெர்சியன் புத்தகங்களையெல்லாம் கங்கையில் வீசி எறிந்துவிட்டார்.

குருமகராஜின் மறைவிற்குப் பிறகு சுவாமி ராமகிருஷ்ணானந்தர், தமது துறவிச் சகோதரர்களுக்குச் சேவை செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சுவாமிஜி மகராஜ் என்று அழைக்கப்பெற்ற சுவாமி விவேகானந்தர் மேலை நாடுகளுக்குச் சென்று, நமது சமயப் பெருமைகளைப் பறைசாற்றி, ஜகத்குருவாகப் போற்றி வணங்கப் பெறுவதற்கு பல ஆண்டுகள் முன்பு, ஒரு வேளை உணவிற்கும் வழியின்றி இருந்த நாள்கள் அவை.

ஒருநாள் உணவு சமைக்க எதுவும் இல்லை. ஆனால், அதைப் பற்றிய சிந்தனையே அற்றவர்கள்போல் பரமஹம்சரின் அந்த இளம் சீடர்கள் யாவரும் தியானத்திலும், ஜபத்திலும் ஆழ்ந்து விட்டனர். ஆனால் சுவாமி ராமகிருஷ்ணானந்தரால் மட்டும் அப்படி இருந்துவிட இயலவில்லை. தினசரி குருமகராஜின் திருவுருவப் படத்திற்கு நிவேதனம் செய்வதை ஒரு யக்ஞமாகச் செய்து வந்தார். எனவே அவர் அண்டை வீடுகளுக்குச் சென்று உணவுப் பொருள்களை கேட்டுப்பெற முயற்சித்தார். ஆனால், அவர்களுக்கு ‘வேலைவெட்டி இல்லாமல் சுற்றித் திரிபவர்கள்’ என்று இந்த இளம் துறவிகளின் மீது கோபம். யாரும் எதுவும் தரவில்லை. இறுதியாக சுவாமி ராமகிருஷ்ணானந்தருக்குத் தெரிந்த ஒருவர் கொஞ்சம் அரிசியும், நெய்யும் மற்றும் காய்கறியும் கொடுத்து உதவினார். அதைப் பெற்றுக்கொண்டு வந்து, சர்க்கரைப் பொங்கல் போல் தயாரித்து குருமகராஜிற்கு நிவேதனம் செய்த சுவாமி ராமகிருஷ்ணானந்தர், தியானத்தில் மூழ்கிவிட்ட தமது துறவிச்



சகோதரர்களை எழுப்பி, அவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்தார்.

சில காலத்திற்குப் பிறகு சுவாமி விவேகானந்தர் உள்பட பரமஹம்சரின் சீடர்கள் தனித்தனியாகவும் குழுக்களாகவும் புனித யாத்திரை மேற்கொண்டனர். ஆனால், சுவாமி ராமகிருஷ்ணானந்தர் மட்டும் அங்கேயே தங்கியிருந்து, குருமகராஜுக்கு நித்திய பூஜைகள் செய்து வந்தார். கடுமையான கோடைக் காலங்களில் தமது குருமகராஜிற்கு வியர்க்குமே என்று எண்ணி, நாளெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் திருவுருவப் படத்திற்கு விசிறிக்கொண்டே இருக்கும் அளவிற்கு ஆத்மார்த்தமான பக்தி அவருடையது.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் கடைசிவரை அங்கேயே இருந்து விடவில்லை. மேலைநாடுகளில் வெற்றி முரசு கொட்டி வந்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமகிருஷ்ணானந்தரை, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் சென்னைக்கு அனுப்பி வைத்து விட்டார்.

சென்னைக்கு 1897-ம் வருடம் மார்ச் மாதம் வந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தரை அளசிங்கரும், டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்களும் வரவேற்றனர். சுவாமி ராமகிருஷ்ணானந்தர் 1907 வரை சென்னை திருவல்லிக்கேணியில் தங்கியிருந்தார். பின்னர் தற்போது மயிலாப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் உள்ள இடத்திற்கு வந்துவிட்டார்.

சென்னை வந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தர், ஆரம்ப காலத்தில் பல்வேறு இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். பொருளாதார ரீதியில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்ட காலத்திலும், குருமகராஜின் கருணையினால் அனைத்தையும் எதிர்கொண்டார். சென்னைக்கு வந்து ஆறு ஆண்டுகள் குருமகராஜின் பிறந்த நாளையும், சுவாமிஜி மகராஜின் (சுவாமி விவேகானந்தர்) பிறந்த நாளையும் மிகவும் எளிமையாகக் கொண்டாடிய சுவாமி ராமகிருஷ்ணானந்தர், முதல் முறையாக 1902-ம் வருடம் மார்ச் மாதம் 16-ம் தேதி ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறந்த தினத்தை வெகுவிமர்சையாக அழைப்பிதழ்கள் விநியோகித்து, ஒரு பொது விழாவாகக் கொண்டாடினார். அன்று காலை முதல் ஜபம், ஹோமம் போன்ற சமயச் சடங்குகள் சம்பிரதாயப்படி நடத்தப்பெற்றன. சுவாமி ராமகிருஷ்ணானந்தரே அவற்றை முன்னிருந்து நடத்தினார். சுமார் ஏழாயிரம் ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது. சுவாமி ராமகிருஷ்ணானந்தர், ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற தலைப்பில் மிக அழகாக, ஆழ்ந்த கருத்துக்களுடன் கூடிய ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் திருவல்லிக்கேணியில் தங்கியிருந்த சமயம் அவர் செய்த முதல் பணி ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வியறிவு தர மேற்கொண்ட முயற்சிகள்தான். ஆரம்பத்தில்

இது சற்று கடினமாக இருந்தாலும் நாளடைவில், எப்படி ஒரு நல்ல விதையானது. அதற்கேற்ற மண்ணில் தகுந்த பருவத்தில் விதைத்தால் நல்ல பலனைத் தருமோ அதுபோல், அவரது முயற்சிக்கும் நல்ல பலன் கிடைத்தது. அவர் தூவிய அந்த விதைதான், இன்று ஆல்போல் தழைத்து, விழுது விட்டிருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் கல்வி நிறுவனங்கள்.



பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையிலும் சுவாமி ராமகிருஷ்ணானந்தர், சென்னை மயிலாப்பூரில் ஒரு நிரந்தர இடத்தில் மடம் நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஒரு வழியாக 1907-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் தேதி மயிலாப்பூரில் அமைந்துள்ள மடத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது அவர் சொன்னார்:

“என் குருமகராஜை ஒரு சிறந்த இடத்தில் சேர்ப்பித்து விட்டேன். இதுவரை நான் திருவல்லிக்கேணியில் இருந்தேன். அங்கு என்னுடைய முயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாகப் பார்த்தசாரதிப் பெருமாள் இருந்தார். இப்பொழுது கபாலீஸ்வரர் என்னைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். உங்களுக்குத் தெரியுமா, அவருடைய பெயருக்கேற்றபடி அவர்தான் துறவிகளின் தெய்வம் என்று! இனி என்றும் அவர் என்னைப் பாதுகாப்பார்.”

பின்னர், சுவாமி ராமகிருஷ்ணானந்தர் கர்நாடகம், கேரளம் போன்ற தென்மாநிலங்களில் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களை ஏற்படுத்தினார். ஓய்வில்லாது பணியாற்றியதன் காரணமாக உடல்நலம் குன்றி, பெங்களூரில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தர், சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கல்கத்தா திரும்பினார். என்றாலும்கூட அவர் உடல் நலம் சீர்படவில்லை. நாளுக்கு நாள் நலிவுற்று வந்தது.

அந்த நிலையில் ஒருநாள் அவர் கண்மூடி படுத்துக்கொண்டிருக்கையில், குருமகராஜும், தூய அன்னையும், சுவாமிஜியும் நடந்து வருவது கண்டு திடுக்கிட்டெழுந்து, தமக்கு உதவியாக இருந்த ஒரு சீடரை அழைத்து, அவர்கள் அமர பாய் விரிக்கச் சொன்னார். சீடருக்கு ஒன்றும் புரியவிலை. மறுபடியும் அதேபோல் சொல்லவே, சீடர் மனம் குழம்பியவராக, மறுக்கவியலாது தயக்கத்துடன் ஒரு பாயை எடுத்து கீழே விரித்தார்.


பின்னர், சுவாமி ராமகிருஷ்ணானந்தர், தமது மனவெளிக்கு மட்டுமே புலனாகித் தோற்றம் தந்த அவர்களைக் கண்மூடியிருந்த நிலையிலேயே கரம் கூப்பி வணங்கினார். சற்றுப் பொறுத்து அந்தச் சீடரிடம் “அவர்கள் சென்றுவிட்டார்கள். நீ அந்தப் பாயை மடித்து வைத்துவிடு” என்றார். நிகழ்ந்ததை ஓரளவு உய்த்துணர்ந்து அறிந்துகொண்ட அந்தச் சீடர் அப்படியே செய்தார்.

1911 ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி பகல் ஒரு மணிக்கு தமது பணி முடிந்த நிறைவுடன் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் மகாசமாதியில் மூழ்கினார்.

“சசி (ராமகிருஷ்ணானந்தர்)தான் இந்த மடத்தின் முக்கியஸ்தர். தூண் போன்றவர். மற்ற துறவிகளெல்லாம் தியானமும், ஜபமும் செய்வதில் மூழ்கிவிட, சசி மட்டும் குருமகராஜுக்குப் பூஜை செய்துவிட்டு, மற்ற துறவிச் சகோதரர்களுக்கு உணவு படைப்பதிலும், மற்றும் அவர்களுக்குத் தேவையான பணிவிடைகள் செய்வதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.”

சுவாமி ராமகிருஷ்ணானந்தர் பற்றி சுவாமி விவேகானந்தர் சொல்லிய வார்த்தைகள் இவை.

மக்கள் நலனுக்கென்றே தமது வாழ்நாள் இறுதிவரை ஆன்மிக வழியிலும், சமூகப் பணியிலும் உழன்று, தம்மை அதற்காகவே தியாகம் செய்துகொண்ட அந்த மகான் சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் அருளாசிகள் நம்மை என்றும் நல்வழி செலுத்திட வேண்டுவோம். ●







தம்பதி ஒற்றுமைக்கு அருளும் கோகிலேஸ்வரர்!

மீனாட்சி ரவிகுமார்

உலக மக்களுக்கு அருள் புரியவேண்டும் என்பதற்காகப் பல தருணங்களில், பல வடிவங்களில் அம்பிகை உலகில் தோன்றுவது உண்டு. அப்படி அம்பிகை பசுவின் வடிவில் வழிபட்ட தலங்களில் ஒன்றுதான் இதோ நாம் இப்போது தரிசித்துக்கொண்டிருக்கும் திருக் கொளம்பியம் கோகர்ணேஸ்வரர் திருக்கோயில்.

மயிலாடுதுறை – கும்பகோணம் வழித்தடத்தில் ஆடுதுறையில் இருந்து, தெற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருக்கொளம்பியம். தற்போது திருக்கொழம்பியம் என்று அழைக்கப்படுகிறது.

இயற்கை எழில் நிறைந்த அமைதியான சூழலில் ஆலயம் அமைந்திருக்கிறது. நுழைவாயில்



மண்டபத்தின் மீது விநாயகர், உமையுடன் சிவபெருமான், வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். ஆலயத்தின் எதிரில் பிரம்மதேவர் ஏற்படுத்திய பிரம்ம தீர்த்தம் என்ற திருக்குளம் அமைந்திருக்கிறது. தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதம் பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் இடையே ஏற்பட்டது. அப்போது சிவபெருமான் அசரீரியாக. 'யார் எம் திருவடியையும் திருமுடியையும் காண்கிறாரோ அவரே பெரியவர்' என்று கூறினார். அதன்படி பிரம்மா ஈசனின் திருமுடியைக் காண அன்னப் பறவையின் வடிவில் ஆகாயத்தை நோக்கிப் பறந்து சென்றார். ஆனால், அவரால் முடியவில்லை. அப்போது ஈசனின் திருமுடியில் இருந்து வந்த தாழம்பூவை சாட்சியாகக் கொண்டு ஈசனின் திருமுடியை தரிசித்துவிட்டதாகப் பொய் கூறினார். அதனால் ஏற்பட்ட தோஷத்தின் காரணமாக பூமிக்கு வந்த பிரம்மதேவர், இந்தத் தலத்தில் தன் பெயரில் பிரம்ம தீர்த்தம் ஏற்படுத்தி, ஈசனை வழிபட்டு பேறு பெற்றார் என்று சொல்லப்படுகிறது.

முகப்பு மண்டபத்தைக் கடந்து சென்றதும் பலிபீடமும் நந்தி மண்டபமும் அமைந்திருப் பதைக் காணலாம். பசுவாகி வந்து ஈசனை வழிபட்டு அம்பிகை விமோசனம் பெற்ற இந்தத் தலம், பசுக்களின் இனத்துக்கே நோய் தீர்க்கும் தலமாகத் திகழ்கிறது.

ஈசனுக்கு எதிரில் உள்ள நந்திதேவரின் திருமுன், ஒரு குவளை தண்ணீரும் அறுகம்புல்லும் வைத்து, அர்ச்சனை செய்து மனமுருக வேண்டிக் கொள்ள வேண்டும். பிறகு புல்லையும் தண்ணீரையும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பசுவுக்குக் கொடுத்தால், எத்தகைய நோயாக இருந்தாலும் நீங்கி விடும் என்பது ஐதீகம்.

அடுத்து மூன்று நிலைகளுடனும் ஐந்து கலசங்களுடனும் கூடிய கோபுரம் அமைந்திருக்கிறது. கோபுரத்தில் பஞ்சவர்ணத்தினால் ஆன சிவபெருமான், உமையம்மை, விநாயகர், கந்தக் கடவுள், துவார பாலகர்கள் போன்றோரின் சுதைவடிவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கோபுரத்துக்கு நேரெதிரில் அருள்மிகு கோகனேஸ்வரர் சந்நிதி அமைந்திருக்கிறது. சந்நிதி வாயி லின் இருபுறங்களிலும் துவார பாலகர்கள் காட்சி அருள்கின்றனர். சந்நிதிக்கு எதிரில் நந்திமண்டப மும்

பலிபீடமும் அமைந்திருக்கின்றன. கருவறை மண்டபத்தில், பசுவின் வடிவில் பூவுலகில் தோன்றிய அம்பிகை, சிவலிங்க மூர்த்தத்துக்கு பால் சொரிந்து வழிபடும் ஓவியம் மிக நேர்த்தியாக வரையப்பட்டு இருப்பதைக் காண்கிறோம்.

ஆலயத்தை வலம் வருகிறோம். தெற்குப் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஆலயத்தின் தல விருட்சமான வில்வம் விண்ணை எட்டும் அளவுக்கு செழித்து வளர்ந்திருக்கிறது. தெற்குப் பிராகாரத்தில் ஏகதந்த மூர்த்தியாக, வலக் கரத்தில் ஒடித்த தந்தமும் இடக் கரத்தில் மோதகமும் ஏந்திய விநாயகர், நடராஜப் பெருமான், அகத்தியர், கோயிலுக்குத் திருப்பணிகள் செய்த செம்பியன்மாதேவி சிவலிங்கத்தை வழிபடும் புடைப்புச் சிற்பம், சட்டைநாதர் சந்நிதி, வண்ணமயமான விமானத்தின் கீழ் தட்சிணா மூர்த்தி சந்நிதி ஆகியவை அமைந்திருக்கின்றன. திருவாவடுதுறை ஆதீனத்துக்கு உட்பட்ட இந்தக் கோயிலுக்கு ராஜராஜசோழன், செம்பியன்மாதேவி போன்றோர் திருப்பணிகள் செய்திருக்கின்றனர்.

மேற்குப் பிராகாரத்தில் கஜபிருஷ்ட வடிவில் அமைந்திருக்கும் கருவறை விமானத்தின்கீழ் கோஷ்ட மூர்த்தியாக இரண்டு புறங்களிலும் பிரம்மாவும் திருமாலும் இருக்க லிங்கோத்பவ மூர்த்தி திருக்காட்சி தருகிறார். விமானத்தில் மகாவிஷ்ணுவின் வண்ணச் சுதை வடிவம் அமைந்திருக்கிறது. வடக்குப் பிராகாரத்தில் முதல் கோஷ்ட மூர்த்தியாக பிரம்மா காட்சி தருகிறார். மற்றும் அர்த்தநாரீஸ்வரர், துர்கை ஆகியோரும் கோஷ்ட மூர்த்தங்களாகக் காட்சி தருகின்றனர். துர்கை சந்நிதிக்கு எதிரில் சண்டகேஸ்வரர் சந்நிதி அமைந்துள்ளது. பிராகாரச் சுவற்றில் ஆலயத்தின் தொன்மைச் சிறப்பை எடுத்துக் கூறும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

மேற்குப் பிராகாரத்தின் கன்னிமூலையில் கன்னிமூல விநாயகர், நாவுக்கரசர் பெருமான், ஆகியோருடன் வள்ளி - தேவயானை சமேத முருகப்பெருமான் வர அபய ஹஸ்தம் காட்டி, வினை தீர்க்கும் வேலுடன் காட்சி அருள்கிறார். அடுத்த சந்நிதியில் சோழலிங்கம் என்ற பெயரில் சிவலிங்க மூர்த்தம் அமைந்திருக்கிறது. அடுத்த சந்நிதியில் இருபுறங்களிலும் யானைகள் வழிபட அன்னை மகாலட்சுமி அருள் காட்சி தருகிறாள். மேலும் பைரவர், சூரியன் ஆகியோரும் உள்ளனர்.

இருபத்தியேழு யோகங்களில் வியதிபாத யோகமும் ஒன்று. ஆனால், இந்த யோகம் வரும் நாளில் சுபகாரியங்களைச் செய்யக்கூடாது என்பது சாஸ்திரம். எப்படி அஷ்டமி, நவமி ஆகிய தினங்கள் கிருஷ்ணர், ராமர் வழிபாட்டுக்கு உகந்தவையாக உள்ளனவோ அதேபோல் வியதிபாத யோகமும் சிவபெருமானை வழிபடுவதற்கு உகந்த நாளாகும். அதேபோல் வியதிபாதயோகம் வரும் நாளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதும் சிறப்பானது.



இந்த வியதிபாத யோகத்துக்கு அதிதேவதை சிவபெருமான். அதனால் அன்று சிவபெருமானை வழிபடுவது சிறப்பு. சூதசம்ஹிதையில் வியதிபாத யோகத்தைப் பற்றி பல விஷயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. மாதத்துக்கு ஒருநாள் என்று வருடத்துக்கு சுமார் 13 வியதிபாதயோகம் உள்ள நாள்கள் வரும். அன்றைய தினங்களில் சிவாலயத்துக்குச் சென்று வழிபடுவதும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதும் மிகச் சிறப்பான நன்மைகளைத் தரக்கூடியதாகும்.


வியதிபாதயோகம் வரும் நாள்களில் சிவாலயங் களில் யாகம் வளர்த்து, பின்னர் யாகத்தில் வைத்து

மந்திர சக்தி ஊட்டப் பெற்ற கலச தீர்த்தத்தால் சிவபெருமானுக்கு அபிஷேகம், ஆராதனை செய்து வழிபட்டால், அனைத்து தோஷங்களும் நீங்கி, மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இந்த வியதிபாத வழிபாட்டுக்கு மிகவும் விசேஷமான தலங்கள் பல இருந்தாலும், காவிரிக்கரையில் அமைந்திருக்கும் சிவாலயங்களில் திருகொழம்பியம் மிகுந்த புண்ணிய பலன்களைத் தரக்கூடியது என்ற விவரம் சித்தர்களின் நூல்களில் குறிப்பிடப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மிக பிரம்மாண்டமான பாணத்துடன் கூடிய சிவலிங்கத்தின் மீது பசுவின் குளம்படித் தழும்பு காணப்படுகிறது. இந்தக் குளம்படித் தழும்பின் பின்னணியில் ஆலயத்தின் தலவரலாறு அமைந்திருக்கிறது.







“மாதத்துக்கு ஒருநாள் என்று வருடத்துக்கு சுமார் 13 வியதிபாதயோகம் உள்ள நாள்கள் வரும். அன்றைய தினங்களில் சிவாலயத்துக்குச் சென்று வழிபடுவதும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதும் மிகச் சிறப்பான நன்மைகளைத் தரக்கூடியதாகும்.”


கயிலையில் சிவபெருமானும் உமையன்னையும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அம்பிகையின் மனதில் உலகத்தில் தோன்றி, மண்ணுலக மக்களாகிய தன் குழந்தைகளைக் காணவேண்டும்; அவர்களுக்கு அருள்புரியவேண்டும் என்பதாக ஒரு விருப்பம் ஏற்பட்டது. ஈசனின் சாபம் இருந்தால் தானே அன்னை பூமியில் தோன்ற முடியும்? எனவே, சொக்கட்டான் விளையாட்டில் ஈசனுக்குக் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் ஒவ்வொரு ஆட்டத்திலும் தானே வெற்றி பெற்று வந்தாள்.

அம்பிகையின் விருப்பத்தைத் தெரிந்துகொண்ட சிவபெருமான் அதை நிறைவேற்றவேண்டி, ”தேவி, கணவன் - மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை இனிமையாக இருக்கும். எம்முடன் சொக்கட்டான் விளையாடும் நீ, ஒருமுறைகூட எமக்கு விட்டுக் கொடுக்காமல் நீயே வெற்றி பெறுகிறாய். எனவே, நீ பூமியில் பசுவாகப் பிறந்து எம்மை பூஜித்து பிறகு எம்மை அடைவாயாக” என்று சாபம் கொடுத்து விட்டார்.


இதைத்தானே அம்பிகையும் எதிர்பார்த்தாள்? சிவபெருமானின் சாபத்தின்படி பூமியில் பசுவாகத் தோன்றினாள் அம்பிகை. பூமியில் உள்ள பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டு விட்டு, உரிய காலத்தில் திருகொழம்பியம் தலத்தை அடைந்தாள். அங்கிருந்த பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, இறைவனின் திருமேனியில் பால் சொரிந்து வழிபட்டு வந்தாள். ஒருநாள் பசுவின் குளம்படி சிவலிங்கத் திருமேனியில் பட்டுவிட்டது. பசுவின் வடிவில் இருந்த அம்மனின் ஸ்பரிசம் பட்டதுமே சிவபெருமான் மனம் நெகிழ்ந்து பசுவின் வடிவில் இருந்த அம்பிகைக்குக் காட்சி தந்து ஆட்கொண்டார். இதையொட்டி, இங்குள்ள சிவபெருமான் கொளம்பநாதர் என்று திருப்பெயர் ஏற்றார். கொளம்பநாதருக்கு அருள்மிகு கோகர்ணேஸ்வரர் என்ற திருப்பெயரும் உண்டு; சாபத்தின் காரணமாக குயிலாக மாறித் திரிந்த கந்தர்வன் ஒருவனுக்குச் சாப விமோசனம் அளித்ததால், கோகிலேஸ்வரர் என்றொரு பெயரும் இந்த ஸ்வாமிக்கு உண்டு. அம்பிகை சௌந்தரநாயகி என்னும் திருப்பெயர் கொண்டாள். ஊர் திருக்கொளம்பியம் என்று அழைக்கப்பட்டது. திருக்கொளம்பியம் என்ற பெயரே மருவி, தற்போது திருக்கொழம்பியம் என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயிலின் தலவிருட்சம் மல்லிகை. பிரதோஷ நாள்களில் இங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, மல்லிகை மலரைக் கொண்டு ஈசனை அர்ச்சித்து வழிபட்டால், கருத்துவேறுபாடு காரண மாகப் பிரிந்திருக்கும் கணவன் - மனைவி ஒன்று சேருவர் என்பது ஐதிகம்.

எஸ்.லலிதா



உயிர் காக்கும் உதிரக் கொடை



"மருத்துவம் முன்னேறி விட்டது என்று பெருமையடிக்கிறோம். ஆனால், நம் கண் முன்னே நோயாளிகள் இறக்கிறார்கள். போர்முனையில் காயமுற்ற வீரர்கள் ரத்தமிழந்து உயிர் துறக்கிறார்கள். பெண்களின் நிலையோ பரிதாபம். பிரசவத்தின்போது மிகையாக ரத்தம் வெளியேறி இறக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க முடியாத நாம் எல்லாம் நம்மை மருத்துவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன பெருமையிருக்கிறது?"

அமெரிக்காவின் புகழ்பெற்ற மருத்துவ ஆய்வாளர் கார்ல் லாண்ட்ஸ்டெய்னர் (Karl Landsteiner) தன் சக

நண்பனான இர்வினிடம் தன் மனச்சுமையைப் பகிர்ந்துகொண்டார்.



"கவலைப்படாதே கார்ல்... சீக்கிரம் நாம் ரத்த இழப்பை சரிசெய்யும் மருத்துவத்தையும் கண்டுபிடிப்போம்."

"கண்டுபிடித்துதான் ஆகவேண்டும் நண்பா. ஒரு மனிதனின் ரத்தம் ஏன் மற்றொரு மனிதனுக்கு ஒவ்வாமை யாகிறது... ஏன் உடன்பிறந்தவர்களின் ஒருவரின் ரத்தம்கூட மற்றவருக்கு சேர்வதில்லை. இதைக்கண்டுபிடிப்பதுதான் இனி என் வாழ்நாள் லட்சியம்." கார்ல், சோதனைக் கூடங்களுக்குள் புகுந்து கொண்டார். பல மனிதர்களிடம் சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரிகளைக் கொண்டு ஆய்வைத் தொடங்கினார். அதற்கு முன்பு இப்படியான சோதனை களைச் செய்து பார்த்து ரத்தம் ஏற்றும் வழக்கம் மருத்துவ நடைமுறைகளில் இல்லை. அதனால் உயிரிழப்புகள் அதிகம் நிகழ்ந்தன. கார்ல், ரத்தம் ஏற்றுவதற்கு முன்பாகவே சோதனை செய்துவிட வேண்டும் என்றும் அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தார். பல நாள்கள் அவர் ஆய்வு தொடர்ந்தது.ரத்தம் தேவைப்படுபவரின் ரத்தத்தையும் ரத்ததானம் செய்பவரின் ரத்தத்தையும் எடுத்துக் கொண்டார். தேவைப்படுபவரின் ரத்தத்தோடு கொடையாளியின் ரத்தத்தைச் சேர்த்துக் கலக்கினார். இந்த சோதனை பல சுவாரஸ்யமான முடிவுகளைக் கொடுத்தது.

ஒரு சிலரின் ரத்தமாதிரிச் சேர்க்கைகளில் ரத்தம் உறைந்துபோனது. சில வித்தியாசம் தெரியாமல் ஒன்றோடொன்று கலந்துபோயின. சில வகை ரத்தங்களோ அனைத்து ரத்த வகைகளோடு ஒத்துப்போனது. கார்ல் மனதுக்குள் யுரேகா என்று கத்திக்கொண்டார். தன் ஆய்வை விரிவுபடுத்தி சில முடிவுகளை வெளியிட்டார். அதில் ரத்தங்கள் மூன்று வகைப்படும் என்றார். அவை, ஏ, பி, சி (A,B,C) ஆகியன. இது மருத்துவத் துறையில் பெரும் சாதனையாக மாறியது. அதன்பின், ரத்த வகைகளை அறிந்து தேவைப்படுபவர்களுக்கு ரத்தம் ஏற்றுவதன் மூலம் உலகம் முழுவதும் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.


கார்ல் கண்டுபிடித்த 'சி' வகைதான் பிற்காலத்தில் 'ஓ' வகை எனப்பட்டது. கோடு போட்டால் ரோடு போடுவோம் என்பதைப்போல இந்தக் கண்டுபிடிப்புக்குப் பின் இந்தத் துறையில் ஆய்வு பெரிதாக வளர்ந்தது. இவரே 'ஏபி' என்னும் ரத்தவகையைக் கண்டுபிடித்தார். மருத்துவ உலகம் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி மனித உயிர்கள்

"கண்டுபிடித்துதான் ஆகவேண்டும் நண்பா. ஒரு மனிதனின் ரத்தம் ஏன் மற்றொரு மனிதனுக்கு ஒவ்வாமையாகிறது... ஏன் உடன்பிறந்தவர் களின் ஒருவரின் ரத்தம்கூட மற்றவருக்கு சேர்வதில்லை. இதைக் கண்டுபிடிப்பதுதான் இனி என் வாழ்நாள் லட்சியம்."

பலவற்றைக் காப்பாற்றியது. இவரது மருத்துவக் கண்டுபிடிப்புகளைப் பாராட்டி 1930 - ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

உலகின் உயர்ந்த பரிசைப் பெற்ற பின்னும் ஆய்வை விட்டுவிடவில்லை கார்ல். 1937 - ம் ஆண்டு இதே துறையில் ஆய்வை மேற்கொண்டு ஆர்.ஹெச் (RH) என்னும் ரத்தவகை இருப்பதையும் கண்டுபிடித்தார். இன்று மொத்தம் 36 வகை ரத்த மாதிரிகள் இருப்பதை மருத்துவ உலகம் கண்டு அடையாளப் படுத்தியிருக்கிறது என்றால் அதற்கு வித்திட்ட பெருமை கார்ல் லாண்ட்ஸ்டெய்னரையே சாரும். அதனால்தான் அவருடைய பிறந்தநாளை உலக ரத்தக் கொடையாளர்கள் தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

ஒவ்வொரு நாளும் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவில் சில நேரம் நின்றிருந்தால்போதும் நம் காதுகளில் சில வார்த்தைகள் விழும். அவற்றில் ஒன்று, "உடனடியா, இந்த வகை ரத்தம் தேவை. ஏற்பாடு பண்ணுங்க" என்பதுதான். மருத்துவர் கேட்கும் குறிப்பிட்ட ரத்த வகையைத் தேடி நோயாளியின் உறவினர்கள் அலைவார்கள். அவசரக் காலத்தில் இப்படி ரத்தத்தைத் தேடி அலைவதைத் தவிர்க்கவும் உரிய நேரத்தில் தேவைப்படும் ரத்தம் கிடைக்கவும் மருத்துவ உலகம் ரத்த வங்கிகளையும் ரத்ததான முகாம்களையும் அடிக்கடி நடத்துகிறது.



குறிப்பிட்ட இடைவெளியில் (ஆண்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறையும் பெண்கள் 4 மாதங்களுக்கு ஒருமுறையும்) தொடர்ந்து ரத்ததானம் செய்தவர்கள் தங்களை மிகவும் ஆரோக்கியமாக உணர்கிறார்கள். மேலும் தானம் தேவைப் படும் ஒரு மனிதருக்கு ரத்தம் அளித்து உயிரைக் காப்பாற்றிய புண்ணியமும் கிடைக்கிறது. வாழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட முறை ரத்ததானம் செய்து வரும் நல்ல உள்ளங்கள் பலர் உள்ளார்கள். ஆரோக்கியமும் மனநிறைவும் தரும் இந்த நற்காரியத்தை வாய்ப்பிருக்கும் அனைவரும் மேற்கொள்ளலாம். ஆனால், நம்மில் எத்தனைபேர் ரத்ததான முகாம்களுக்குச் சென்று ரத்தக் கொடை அளிக்கிறோம்?

ஜூன் 14-ம் தேதி உலக ரத்த தான தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தக் கொரோனா காலத்தில் ரத்ததான முகாம்கள் நடக்க வாய்ப்பில்லை என்றாலும் அவசரத் தேவைக்காக வரும் அழைப்புகள் எதுவானாலும் உடனே அதை ஏற்றுக்கொள்வோம். ரத்தக் கொடை மனிதம் போற்றும் அருட்கொடை. இணையில்லாத உயிர்க்கொடை. உயர்ந்த கொடையான ரத்தக் கொடையினை நாம் அனைவரும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் மேற்கொள்வோம்.


SIVOHAM

சிவோஹம் ஆசிரமம்

திருவண்ணாமலை திருமூலர் அறக்கட்டளை, சுமங்கலி நகர், நல்லவன்பாளையம், திருவண்ணாமலை, 606603



சிவோஹம்' ஆசிரமம் ஸ்ரீ விஜயானந்த சரஸ்வதி சுவாமிகள் அருளாசிகளுடன் உலக மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படவும், அமைதியும், சாந்தமும் நிலைத்திருக்கவும், திருவண்ணாமலை, நல்லவன் பாளையம் சுமங்கலி நகர் திருமூலர் ஆசிரமத்தில் 'சிவோஹம்' சார்பில் பிரதான பாணலிங்க பிரதிஷ்டையுடன், அறுபது வருடங்கள், இருபத்தியேழு நட்சத்திரங்கள், பன்னிரண்டு ராசிகள், ஒன்பது கிரகங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும் வகையில், நூற்றியெட்டு பாணலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. மேலும், இறைவனின் சக்தியுடன் ஆன்மசக்தி சங்கமிக் கும் வகையில் ஒரு தியான மண்டபமும் அமைக்கப்பட உள்ளது. சுற்றுப்புற கிராம மக்களுக்கு சமூக நலப்பணிகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.



திருவண்ணாமலையில் அமைய இருக்கும் பாணலிங்க க்ஷேத்திரத்தின் சிறப்புகள்...

- சிவபெருமானின் சிவலிங்க வடிவங்களில் பாணலிங்க வழிபாடு மிகவும் விசேஷமானது.
- ஸ்கந்த புராணத்தின்படி சிவபெருமானுடைய சக்தியாகப் போற்றப்படும் பாணலிங்கங்கள் மிகுந்த தெய்விக ஆற்றல் கொண்டவை.
- சிவபெருமானின் திருநாமங்களில் ஒன்றான 'பாணா' என்ற பெயரில் வழிபடப்பெறும் பாணலிங்கம் இருக்கும் இடத்தில் நல்லிணக்கம், மனஅமைதி, செல்வச்செழிப்பு, பாதுகாப்பு ஆகியவை நிலைத்திருக்கும்.
- பஞ்சாட்சர ஜபத்துடன் பாணலிங்கத்தை வழிபட ஆன்மிக ஆற்றல் மேம்படும்; கர்மவினைகள் குறையும்.
- அதிகாலையில் பாணலிங்கத்தை மனதில் சிந்தித்து தியானிப்பதன் மூலம் அனைத்து காரியங்களிலும் வெற்றி பெறலாம் என்கிறது யோக சாரம்.

திரு.ஸ்ரீராம்: +91 99405 80649; திரு.ராஜேந்திரன்: +91 95388 90011; திரு.கண்ணன்: +91 91762 10462. வங்கிக் கணக்கு விவரம்: A/c Name: Thiruvannamalai Thirumoolar CharitableTrust; Bank Name: ICICI; A/c no: 619605027541; RGTS?NEFT?IFS Code: ICIC0006196

‘சிவோஹம்’

சுவாமி விஜயானந்த சரஸ்வதி (யு.எஸ்.ஏ)



’சிவோஹம்’ சுவாமி விஜயானந்த சரஸ்வதி, அமெரிக்காவில் ஆசிரமம் அமைத்து கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக சைவமும் தமிழும் வளர்த்து வருகிறார். அனைவரும் தங்களுக்குள் சிவபெருமான் இருப்பதை உணர்வுபூர்வமாக உணரும் வண்ணம், திருமூலர் அருளிய சிவ யோகத்தை ஆன்மிக நாட்டம் கொண்டவர்களுக்குப் பயிற்றுவித்து வருகிறார். இந்தியாவில் திருவண்ணாமலை, உடுப்பி ஆகிய இடங்களில் பாணலிங்க க்ஷேத்திரத்தை நிர்மாணித்து வருகிறார். ஞாயிறுதோறும் இந்திய நேரப்படி மாலை ஆறு மணிக்கு அமெரிக்காவில் உள்ள ஆசிரமத்தில் ஸ்ரீருத்ர ஜபம் மற்றும் ருத்ராபிஷேகம் நடத்தி வருகிறார். ஸ்ரீருத்ரம் பற்றி சிறு கட்டுரைத் தொடர் உங்களுக்காக...

-பொறுப்பாசிரியர்

ஸ்ரீ ருத்ரம்

ஓர் அறிமுகம்

ரிக், யஜுர், சாம வேதங்களில் நடுநாயகமாக அமைந்துள்ளது, சுக்ல, கிருஷ்ண என்று இரண்டு பிரிவுகளைக் கொண்ட யஜுர்வேதம். கிருஷ்ண யஜுர் வேதத்தின் மையமாக அமைந்திருப்பது ஸ்ரீ ருத்ரம். பதினொரு அநுவாகங்களைக் கொண்ட ஸ்ரீ ருத்ரத்தின் மையத்தில்தான் பஞ்சாட்சரம் என்னும் 'நமசிவாய' மந்திரம் அமைந்துள்ளது. அந்த மந்திரத்தின் மையமாகத் திகழ்வது 'சிவா' என்னும் திருநாமம். 'சிவா' என்ற நாமத்தை பக்திபூர்வமாக உச்சரிக்கும்போது வேதம் முழுவதையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும். வேதம் முழுமையையும் பாராயணம் செய்ய முடியாதவர்கள், ருத்ர ஜபத்தையாவது பாராயணம் செய்யவேண்டும் என்பதாக முன்னோர்கள் சொல்லியிருக் கிறார்கள். சிவபெருமானின் தோற்றம் மற்றும் குணங்களை விவரிப்பது ஸ்ரீ ருத்ரம். 'ஓம் நமோ பகவதே ருத்ராயா...' என்று தொடங்கும் ருத்ரம், சிவபெருமானின் குணத்தையும் அவர் தரித்திருக்கும் வில் மற்றும் அஸ்திரங்களையும் வணங்குகிறது. அவருடைய தோற்றத்தையும், ஆபரணங்களையும், வர்ணித்துச் செல்லும் ருத்ரம், முக்கியமான ஒரு தத்துவத்தினை உணர்த்துவதாக அமைந்துள்ளது.



சிவபெருமானுக்கும் இந்த உலகத்துக்குமான பந்தத்தைப் பேசுவது ஸ்ரீ ருத்ரம். இந்த உலகம் முழுவதும் அவர்தான். அண்டசராசரங்களும், தேவாதிதேவர்களும், அத்தனை தேவர்களின் அந்தராத்மாவாக இருக்கும் அவரே பக்தர் களுக்கு அருள்பவர். ஞானியும் அஞ்ஞானியும் அவரே; பானையும் குயவரும் அவரே; வேடரும் வேட்டையாடப்படும் பொருளும் அவரே என்று உலகத்தில் இருக்கும் அனைத்துமாக இருப்பவர் அவர்தான். ஜடாதரியான அவரே மழித்த தலையுடனும் இருக்கிறார். வேதத்தின் ஆதியாகவும், அந்தமாகவும் இருக்கும் அவரே வேதத்தின் சாரமாகவும் இருக்கிறார். சுருக்கமாகக் கூறினால் உலகத் தோற்றமாக மட்டுமல்லாமல், உயர்வு, தாழ்வு, ஏற்றம், இறக்கம் என்று அனைத்துமாக இருப்பவர் அவரே.

இறைவன், இந்த உலகம் முழுமையும் வியாபித்திருக்கிறவன். இந்த உலகில் இருக்கும் அசையும் அசையாப் பொருள்கள், ஜந்துக்கள், மானுடர்கள் அனைவரும் ஈஸ்வர வடிவமே என்பதுதான் ருத்ரம் விளக்கும் தத்துவம். உயிர்களில் பேதமில்லை என்பதே வேதம் வெளிப்படுத்தும் ஞானம். இதை அறிந்துகொள்ளும் போது, சக மனிதர்களை நேசிக்கக் கற்றுக் கொள்வோம். மனதில் அன்பு பிரவாகமெடுக்கும். பகைமை, பொறாமை போன்ற குணங்கள் இல்லாமல் போகும்.

ருத்ரஜபம் செய்வதன் மூலம், சகலவிதமான லௌகிகமான பலன்களையும் பெறலாம் என்கின்றன ஞான நூல்கள். ருத்ரத்தின் 'நமக'த்தைத் தொடர்ந்து வரும் சமகம் மனிதர்களுக்கு, இந்த உலகில் வாழத் தேவையானவற்றைப் பட்டியலிடுகிறது. வேதத்தைப் பாராயணம் செய்வதன் மூலம் சகல நன்மைகளையும் அடையமுடியும் என்பதே இதன் பொருள். ருத்ரத்தின் கடைசியாக, 'ம்ருத்யுஞ்சய ஸ்தோத்திரம்' அமைந்துள்ளது. 'ம்ருத்யு' என்றால் 'யமன்'. யமனை வெல்வதற்கான மந்திரம் இது. இதைச் சொல்வதன் மூலம் யமபயம் நீங்கும்.

ஞாயிறுதோறும் இந்திய நேரப்படி மாலை 6 மணிக்கு இங்கே கொடுக்கப்பட்டுள்ள QR code - ஐ ஸ்கேன் செய்து, சுவாமி விஜயானந்த சரஸ்வதி நடத்தும் ருத்ர ஜபம் மற்றும் ருத்ர அபிஷேகம் தரிசித்து இறையருள் பெறலாம்.

நமது நிருபர்















குமரகுரு கல்வி நிறுவனங்கள் சார்பில்

கொரோனா சிகிச்சை மையம்





இந்தியா முழுவதிலும், கொரோனா பெருந் தொற்றின் இரண்டாவது அலை மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற நிலையிலும், பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இந்த நோயுடன் போராடிவரும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நமது அரசாங்கத்தின் வேண்டு கோளுக்கு இணங்க, குமரகுரு கல்வி நிறுவனங்கள் சார்பில் 800 படுக்கை வசதிகளுடன் கொரோனா சிகிச்சை மையம் குமரகுரு கல்லூரி வளாக விடுதியில் அமைக்கப்பட்டுள்ளது.மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற முன்களப் பணியாளர்கள் என ஒரு பிரத்யேக குழு கல்லூரி வளாகத்தினுள் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா சிகிச்சை மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு மு. க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். அவருடன் குமரகுரு கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் மாணிக்கம், தாளாளர் பாலசுப்ரமணியம், இணைத்தாளாளர் சங்கர் வாணவராயர், சக்தி குழுமங்களின் நிர்வாக இயக்குனர் தரணிபதி ராஜ்குமார், மாநில அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர். இந்த 800 படுக்கை வசதிகள் கொண்ட மையத்தில் , நோயாளிகளுக்கு 24X7 மணிநேரமும் மன நல ஆலோசனை வழங்குதல், உள்விளையாட்டு அரங்கம், பிரத்தியேக யோகா மற்றும் தியானக் கூடம், வளாகத்தை தூய்மைப்படுத்த புறஊதாக் கதிர்வீச்சுத் தானியங்கிக் கருவி மற்றும் இணைய வசதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. நமது அரசின் வழிகாட்டுதலின்படி, அரசு அதிகாரிகளுடன் இணைந்து, தேவையான வசதிகளுடன், இந்த மையமானது திறம்படச் செயல்படும்.





தெய்வ தரிசனம்

எஸ்.கண்ணன்கோபாலன்

ஓவியம்: **ஸ்யாம்**
படங்கள்: **கே.எம்.பிரசன்னா**

பொருட்செல்வம்–

இந்த ஒன்றை மட்டுமே தேடித்தான் இன்றைய உலகில் எல்லோருமே ஆலாய்ப் பறக்கிறார்கள். அதனால் அல்லல்படுகிறார்கள்.

பொருள் தேடி அலையும் அதே நேரத்தில் இறையருளையும் வேண்டி முயற்சித்தால் இன்னல்கள் ஏது?

ஏனோ இது பலருக்குப் புரிவதில்லை. ஆனால் –



மெய்ப்பேடு (மப்பேடு)

சத்தியத்தில் தோன்றிய திருக்கோயில்!

தாம் எப்போதோ - யாருக்கோ கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டி, தாம் பெற்ற பெரும் செல்வத்தில் சரிபாதியைத் திருப்பித் தர யாருக்கு மனம் வரும்?

அப்படி மனம் வந்து கொடுத்தாலும் அதை வேண்டாம் என்று மறுத்து, அதைக் கொண்டு மகத்தான ஆலயம் அமைக்கச் சொல்லும் எண்ணம்தான் யாருக்குத் தோன்றும்?

தோன்றத்தான் செய்திருக்கிறது அந்த மனமும்; எண்ணமும் இருவருக்கு. அந்த இருவருக்குத் தோன்றிய அந்த மனதிற்கும், எண்ணத்திற்கும் நிதர்சன சாட்சியாகத் திகழ்கிறது அந்த மகேஸ்வரனின் ஆலயம்!

அந்த ஆலயம்தான் சென்னை - அரக்கோணம் சாலையில் சென்னையிலிருந்து சுமார் ஐம்பது கி.மீ. தொலைவில் இருக்கும். தற்போது மப்பேடு என்று அழைக்கப் பெறும் மெய்ப்பேடு திருத்தலம்.

அந்தத் திருத்தலத்தைத் தரிசிக்கச் செல்கிறோம். செல்லும்போதே அந்த ஆலயம் தோன்றியது பற்றி நாம் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்த வரலாற்றினைச் சிந்தனைத் திரையில் படரவிட்டோம்.

அந்த அற்புதமான வரலாறு..

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம். அந்தக் காலத்தில் மெய்ப்பேடு என்னும் ஊரில் தொண்டை மண்டல சைவ வேளாளர் மரபில் வந்த காளத்தியப்பர் என்பவர் தம் மனைவி சிவகாமி அம்மையாருடன் வறுமையிலும் செம்மைநெறி தவறாது வாழ்க்கை நடத்தி வந்தார்.

கொடிய வறுமையிலும், அறநெறி தவறாமல் வாழ்ந்து வந்த அந்தத் தம்பதியர் அதன் பயனாக கி.பி.1501-ல் அழகான ஆண்குழந்தையைப் பெற்றனர். அந்தக் குழந்தைக்கு அரியநாதன் என்று பெயரிட்டு வளர்த்தனர். ஒருநாள் காளத்தியப்பர் வயலுக்குச் சென்றிருந்தார். அவ்வேளையில் சிவகாமி அம்மையார் குழந்தையை வீட்டில் தனியே படுக்கவைத்துவிட்டு, தண்ணீர் எடுக்கச் சென்றார். அவர் திரும்பி வரும்போது, கூரையின் வழியாக வீட்டினுள் நுழைந்த வெங்கதிரவனின் வெப்ப ஒளி குழந்தையின் முகத்தில் படாமல் இருக்கும் விதத்தில் ஒரு நாகம் படம் எடுத்து மறைத்துக் கொண்டிருந்தது. சிவகாமி அம்மையார் திடுக்கிட்டு நின்றார். அவருடைய காலடி ஓசை கேட்டதுமே நாகம் அங்கிருந்து சென்று விட்டது. பிரமித்து நின்ற சிவகாமி அம்மையார் கணவர் வீடு திரும்பியதும் அவரிடம் நடந்ததைத் தெரிவித்தார். அதைக் கேட்ட அவர், “உண்மையில் நம் மகன் தெய்வ அருள் பெற்றவன். அவனுக்கு நிச்சயம் ஒளிமயமான எதிர்காலம் உண்டு” என்று கூறினார்.

அரியநாதருக்கு ஐந்து வயது ஆனது. கல்வி கற்க எவ்வித வசதியும் இல்லை. எனவே அவர்மீது இரக்கம் கொண்ட, அவ்வூர் விநாயகர் ஆலயத்தில் பூஜை செய்து கொண்டிருந்த வேதிய நம்பி என்னும் அந்தணர் அரியநாதரின் கல்விப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொண்டார். அரியநாதருக்கு அவர் கல்விப் பயிற்சியும், மற்போர், சிலம்பம், வாள்போர் போன்ற பயிற்சிகளும் அளித்தார்.

ஒருநாள் சிறுவன் அரியநாதன் தெருவில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவ்வழி வந்த ஜோதிடம் கற்ற வேதியர் ஒருவர் அரியநாதனின் அழகிய தோற்றத்தில் கவரப்பட்டவராய். அவனருகில் சென்று, அவன் தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்தபடி, அவன் கையை நீட்டச் சொல்லி கூர்ந்து பார்த்தார். பின் அவர் அரியநாதனிடம், “தம்பி! உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. உன் முகத்தில் அரச களை ததும்புகிறது. நீ அரசர்களால் பாராட்டப்படுவாய். உன்னால் தமிழகம் சீரும் சிறப்பும் பெறப்போகிறது! நீ விஜயநகரம் செல்வாயாக!” என்று கூறினார்.

ஆனால், சிறுவன் அரியநாதன் அவர் கூறிய விஷயங்கள் குறித்துச் சந்தேகம் கொண்டான். அரியநாதனின் முகத்தில் சந்தேகக் கோடுகள் கோலமிடுவது கண்ட அந்த ஜோதிடர், “தம்பி! நான் சொல்வது நிச்சயம் நடக்கும். அப்படி நடை



பெற்று, நீ பெரும் செல்வந்தனாக ஆகிவிட்டால், எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டார்.

சிறுவன் அரியநாதன் சற்றும் தயங்காமல், தன் சொத்தில் பாதியையே அவருக்குத் தருவதாகக் கூறி, அதை உறுதிமொழியாக ஓர் ஓலையில் எழுதிக் கொடுத்தார்.

பின்னர் சிறுவன் அரியநாதனின் உள்ளத்தில் விஜயநகரம் செல்வது குறித்த எண்ணமே நிறைந்திருந்தது.

விஜயநகரம் செல்ல வேண்டுமென்றால் தெலுங்கு மொழி நன்றாகக் கற்றிருக்க வேண்டும். எனவே சிறுவன் அரியநாதன் சில ஆண்டுகள் தெலுங்கு மொழியைக் குறைவின்றி கற்றான்.

சிறுவன் அரியநாதன் இளைஞன் அரியநாதர் ஆனார். ஆசிரியர் வேதியநம்பி மற்றும் பெற்றவர்களின் ஆசிகள் பெற்று ஒரு நல்ல நாளில் அரியநாதர் விஜயநகரம் புறப்பட்டுச் சென்றார்.

விஜயநகரம் சென்ற அரியநாதர் முதலில் நாகம நாயக்கர் மாளிகையை அடைந்தார். வாயிற்காவலனிடம் உத்தரவு பெற்று நாகம நாயக்கரைச் சந்தித்தார். அரியநாதரின் தோற்றத்தால் கவரப்பட்ட நாகம நாயக்கர், கணிதத்தில் அவருக்கு இருக்கும் திறமையைக் கண்டு வியந்து அவரைக் கணக்கராகப் பணியமர்த்தினார். ஏற்றுக்கொண்ட செயலை செம்மையுடன் செய்யும் அரியநாதரின் பண்பையும், அயராத உழைப்பையும் கண்ட நாகமநாயக்கர், அரியநாதரைத் தமது மகன் போலவே கருதி அன்பு செலுத்தியதுடன் தம் மகன் விசுவநாதரை அரியநாதருடன் தோழமை கொண்டு பழகச் செய்தார்.

ஒருமுறை விசுவநாதர், அரசர் கிருஷ்ண தேவராயரிடம் அரியநாதரைப் பற்றிக் கூறினார். அதைக் கேட்ட அரசர், அரியநாதரை அரசவைக்கு அழைத்து வருமாறு பணித்தார். அரசவைக்குச் சென்று அரசரைச் சந்தித்த அரியநாதர், அரசரிடம் சுந்தரத் தெலுங்கில் உரையாடினார். அரியநாதரின் தெலுங்கு மொழி அறிவு கண்டு வியந்த அரசர் கிருஷ்ணதேவராயர் அவரை அரண்மனைக் கணக்கராக நியமித்தார்.

நாகமநாயக்கரின் மாளிகையில் கணக்கராக இருந்த அரியநாதர், அரசரின் அரண்மனையில் கணக்கராக ஆனார். மிகச் சிறப்பான முறையில் அரியநாதர் அரண்மனைக் கணக்குகளை நிர்வகித்து வந்தார்.

நவராத்திரி விழா வந்தது.

விஜயநகரப் பேரரசில் நவராத்திரி விழா வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம். அதிலும் இறுதிநாள் சிறப்பானது. அன்றைய தினம் விஜயநகரத்தில் உள்ள ஆலயத்தில் அரசரின் முன்னிலையில் ஓர் எருமைக் கடாவை பலி கொடுப்பார்கள். அதேபோல் அன்றைய தினம் பலி கொடுப்பதற்காக ஓர் எருமைக் கடாவை காவலர்கள் பிடித்து வந்தனர். தலைக்கு மேல் பின்புறமாக நீண்ட கொம்புகளைக் கொண்டிருந்த அந்தக் கடாவைப் பார்த்து அரசர் உள்ளிட்ட அனைவரும் திகைத்தனர். அத்துடன் கலக்கமும் கொண்டனர். காரணம், எருமைக்கடாவின் கழுத்தை ஒரே வெட்டில் வெட்டி தலையைத் துண்டிக்க வேண்டும். இல்லை யென்றால் கேடுகள் விளையும் என்பது அவர்களின் நம்பிக்கை. அப்படி ஒரே வெட்டில் வெட்டுவதற்கு அந்த எருமைக் கடாவின் நீண்ட கொம்புகள் தடையாக இருந்தது. அரசருக்கும் மற்றவர்களுக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை.

அவ்வேளையில் அரியநாதர் அரசரிடம், "அரசே! ஒன்றும் பிரச்சினையே இல்லை. பலிபீடத்திற்கு முன்னால் ஒரு குழியை ஆழமாக வெட்டி, அதனுள் புல்லை நிரப்பிவிட வேண்டும். அதன் பக்கத்தில் எருமைக்கடாவை நிறுத்தினால் அது புல்லைத் தின்னும் ஆசையில் உந்தப்பட்டு, தலையைக் குனியும். அப்போது அதன் கொம்புகள் மேல்நோக்கி அமைந்து விடும். உடனே கழுத்தில் கத்தியைச் செலுத்தி, ஒரே வெட்டில் தலையைத் துண்டித்து விடலாம்" என்றார். அதன்படியே செய்யப்பட்டு எருமைக்கடா பலியிடப்பட்டது.

அரசர் கிருஷ்ணதேவராயர், அரியநாதரின்



அறிவுத் திறனைப் பாராட்டி அவரை அரண்மனை யின் தலைமைக் கணக்கராக நியமித்தார்.

அரண்மனையின் தலைமைக் கணக்கராக அரியநாதர் நியமிக்கப்பட்ட பின்னர் ஒருநாள் கிருஷ்ணதேவராயரின் அரண்மனைக்கு வடநாட்டிலிருந்து மல்லன் ஒருவன் வருகை தந்தான். அவன் கிருஷ்ண தேவராயரிடம், “நான் வடநாட்டில் இருந்து வந்திருக்கும் மல்யுத்த வீரன். நான் மற்போரில் பலவீரர்களை வெற்றி கொண்டு வருகிறேன். என்னுடன் மல்யுத்தம் செய்வதற்குத் தங்கள் நாட்டு வீரர்களில் எவரேனும் தயாராக இருக்கிறார்களா?” என்று சவால் விட்டான்.

அரசவையில் இருந்த எந்த வீரனுக்கும் அவனுடன் மல்யுத்தம் செய்யத் துணிவில்லை. அது கண்ட அரசர் வெட்கமும், வேதனையும் கொண்டார். அரசரின் வெட்கத்தையும் வேதனையையும் அகற்றுவது போலவும், அகந்தை, ஆணவம் கொண்டு திரியும் அந்த மற்போர் வீரனுக்குப் பாடம் புகட்டுவது போலவும், “நான் மல்யுத்தம் செய்யத் தயார்” என்று ஒரு குரல் வந்தது. குரல் வந்த திசையை அரசரும். மற்போர்வீரனும் மற்றவர்களும் நோக்கினர். அங்கே மல்யுத்தத்திற்குத் தயார் நிலையில் அதற்கேற்ப ஆடை உடுத்திக் கொண்டு நின்றார் அரியநாதர்.

இருவரும் மல்யுத்தத்தில் இறங்கினர். வடநாட்டு மல்லன் அரியநாதரைக் கடுமையாகத் தாக்கும்படி வந்தான். ஆனால் அரியநாதரோ அவனை ஒரே பிடியில் அழுத்தி உயரே தூக்கிக் கீழே போட்டு மிதித்தார். அரியநாதரின் இந்த ஆவேசத் தாக்குதலில் நிலைகுலைந்து நின்ற அவனுக்கு அரியநாதரைத் திரும்பத் தாக்கும் சக்தியே இல்லாமல் போய்விட்டது. மல்யுத்தத்தில் வெற்றி பெற்று, விஜயநகரப் பேரரசிற்குப் பெருமை சேர்த்த அரியநாதருக்கு, அரசர் வீரக்கழலும், வாளும் அளித்து அவரைத் தளபதியாக நியமித்தார்.

சில காலத்திற்குப் பின்னர் அரசர் கிருஷ்ண தேவராயர் நோய்வாய்ப்பட்டார். மருத்துவர்கள் எவ்வளவு முயற்சித்தும் அரசரின் நோய் தீரவில்லை. அரண்மனை ஜோதிடர் அரசரின் ஜாதகத்தைப் பார்த்து விட்டு, ஒன்றுமே சொல்லாமல் தலை குனிந்தபடி சென்றுவிட்டார். அனைவரும் வேதனையில் மூழ்கினர். ஆனால், அரியநாதர் அரசரின் ஜாதகத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்துவிட்டு, “அரசருக்கு எந்த ஆபத்தும் இல்லை. இன்னும் ஒரு வாரத்தில் அவர் நலம் பெறுவார். பின்னர் வெற்றி வீரராக பவனி வருவார்” என்றார்.

அதன்படியே ஒரு வாரத்தில் பூரண நலம் பெற்ற கிருஷ்ணதேவராயருக்கு, அரியநாதர், “தாம் வெற்றி வீரராக பவனி வருவோம்” என்று குறிப்பிட்டது நினைவிற்கு வந்தது.

அவருக்கு வெகுநாளாகவே ஓர் ஆசை. அதை ஆசையென்று கூறுவதைவிட



தந்தையிடம் பட்ட கடன் என்றே சொல்லலாம். ஆம்! அவரது தந்தை நரசிம்மராயரின் காலத்தில் விஜயநகரப் பேரரசின் மீது படையெடுத்த பிஜப்பூர் சுல்தான், பேரரசிற்குச் சொந்தமான ராய்ச்சூர், மூக்கல் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். பின்னர் நரசிம்மநாயக்கர் எவ்வளவோ முயற்சித்தும் அந்தப் பகுதிகளை மீட்க முடியாமலே போய்விட்டது. இறக்கும் நேரத்தில் தன் மகன் கிருஷ்ணதேவராயரிடம் எப்படியேனும் அந்தப் பகுதிகளை மீட்டு விஜயநகரப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டு உயிர் துறந்தார்.

அரியநாதர் வார்த்தையில் அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்த கிருஷ்ணதேவராயர் பிஜப்பூர் சுல்தானுடன் போருக்குப் புறப்பட்டார்.

இரு தரப்பினருக்கும் படு உக்கிரமாகப் போர் நடைபெற்றது. போரின்போது, கிருஷ்ணதேவராயரை அழிக்கும் ஆவேசத்துடன் பிஜப்பூர் தளபதி சலபத்கான் கிருஷ்ண தேவராயருக்குப் பின்புறமாக வந்து போரிட்டபடி அவரைப் பின்னிருந்து கொல்வதற்கு முயற்சி செய்தான். தூரத்தில் இருந்தே இதை கவனித்துவிட்ட அரியநாதர் ஆவேசத்துடன் இடையில் வந்து படு உக்கிரமாக சலபத்கானுடன் போரிட்டு அவனைச் சிறைப்பிடித்து, அரசரின் முன் கொண்டு சென்று நிறுத்தினார். நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்ட கிருஷ்ண தேவராயர், ''தளபதி அரியநாதர் அவர்களே! நீர் என் உயிரையே காப்பாற்றி விட்டீர். உமக்கு நான் மிகவும் கடன்பட்டவனாவேன். இன்றிலிருந்து உம்மை நான் அமைச்சராக நியமித்து பல்லக்கில் செல்லும் உரிமையை வழங்குகிறேன்'' என்று உள்ளம் மகிழ்ந்து கூறினார்.

தளபதி அரியநாதர் அமைச்சர் அரியநாதராக ஆனார். சில ஆண்டுகளில் கிருஷ்ணதேவராயர் மறைவுக்குப் பின் அவருடைய இளவல் அச்சுதராயர் பேரரசர் ஆனார். அவர் பாண்டிய நாட்டைப் பாதுகாக்க வேண்டி நாகமநாயக்கர் குமாரர் விசுவநாதரையும், பேரமைச்சர் அரியநாதரையும் மதுரைக்கு அனுப்பினார்.

மதுரைக்கு விசுவநாத நாயக்கருடன் வந்த அரியநாதர், விசுவநாத நாயக்கரை அரசராக்கி, தாம் அமைச்சராக இருந்து சிறப்பான முறையில் ஆட்சி செலுத்தி வந்தார்.

நாகமநாயக்கர் மாளிகையில் கணக்கராக இருந்த அரியநாதர் –

கிருஷ்ணதேவராயரின் அரண்மனைக் கணக்கராக ஆனார்;

தலைமைக்கணக்கராக உயர்ந்தார். தலைமைக்கணக்கர் அரியநாதர் தளபதி அரியநாதராகப் புகழ்பெற்றார். தளபதி (தளவாய்) அரியநாதர் அமைச்சராகவும், பேரமைச்சராகவும் சிறப்புற்றார்.

அரியநாதர் மதுரையில் சிறப்புடன் இருக்கும் வேளையில் ஒருநாள் காலை அவரிடம் வந்த காவலாள், "ஐயா, தங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்!" என்று கூறினார். அவரை உள்ளே விடச் சொன்ன அரியநாதர் உள்ளே வந்தவரிடம், "ஐயா! தாங்கள் யார்? என்னைத் தாங்கள் பார்க்க வந்த நோக்கம் யாது?" என்று கேட்டார்.

அதற்கு அவர், "என் சொந்த ஊர் தொண்டை மண்டலத்தில் உள்ள மெய்ப்பேடு ஆகும். என் தந்தை ஒரு ஜோதிடர். நான் சிறுவயதிலேயே என் தந்தை இறந்ததும் கல்வி கற்க வேண்டி காசிக்குச் சென்றேன். அண்மையில்தான் நான் ஊர் திரும்பினேன். கலைமகள் விழாவிற்காக நான் பூஜையில் வைக்க வீட்டில் இருந்த சுவடிகளையெல்லாம் சீர்படுத்த முனைந்தேன். அப்பொழுது இந்த ஓலை எனக்குக் கிடைத்தது" என்று கூறி ஓலையை அரியநாதரிடம் கொடுத்தார்.

அந்த ஓலையைப் பார்த்ததுமே அரியநாதருக்குத் தெரிந்துவிட்டது. 'அது தாம், நாற்பது வருடங்களுக்கு முன்னர் தமக்கு கைரேகை பார்த்து பலன் சொன்ன வேதியருக்கு எழுதிக் கொடுத்த ஓலை' என்பது. உடனே அரியநாதர் வந்தவரை ஆசனத்தில் அமர்த்தி, அன்புடன் உபசரித்தார். பின்னர் தம் சொத்துகள் பற்றிய விவரங்களை அவரிடம் கூறி அவற்றில் சரிபாதியை அவருக்கு அளிக்க முன்வந்தார்.

ஆனால், அந்த அந்தணரோ, "ஐயா! தங்களது பொருள் எதுவும் எனக்கு வேண்டாம். தாங்கள் எனக்கு ஏதேனும் செய்யத்தான் வேண்டும் என்றால், தாங்கள் நம் சொந்த ஊரும், மெய்யே எப்பொழுதும் பேசும் அன்பர்கள் வாழ்வதால் மெய்ப்பேடு என்று பெயர் பெற்றதுமான மெய்ப்பேடில் சிதிலமடைந்திருக்கும் ஒரு சிவாலயத்தைப் புதுப்பித்துக் கட்ட வேண்டும். அதுவே எனக்கும், தங்களுக்கும் பெருமை சேர்க்கும்" என்றார்.

வந்தவர் தமக்கென எதுவும் கேட்காமல், மக்கள் வழிபட்டுப் பயன்பெறுவதற்காக ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்று கூறியது கேட்டு மனம் மகிழ்ந்த அரியநாதர். அதன்படி கட்டி முடித்த அந்த ஆலயத்தைத் தரிசிக்கச் செல்கிறோம்.

ஆன்மிகம்

வனவாசம் வந்த ராமனிடம் கணையாழி வந்த கதை

அருட்செல்வர் நா.மகாலிங்கம் தொழிலதிபர், தேசியவாதி, எழுத்தாளர், பேச்சாளர் என்று பன்முகத்திறமை கொண்டவர். அத்துடன் நின்றுவிடாமல், தான் பிறந்த தன் தேசத்துக்கு உலகப் பெருமை சேர்க்க வேண்டும் என்பதற்காக, இன்னும் ஒரு படி மேலே சென்று அவர் செய்த மிக மிக முக்கியமான பணி ஒன்றும் இருக்கவே செய்கிறது. நம்முடைய தொன்மையான வரலாற்றுச் சிறப்புகள், நாகரிக வளர்ச்சி போன்றவற்றை உலகறியச் செய்யவேண்டும் என்பதற்காக, பண்டைய நாகரிகத்தை ஆராய்ச்சிபூர்வமாக அணுகும் வகையில், 'International Society For Investigation Of Ancient Civilization' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். வானியல் சாஸ்திரம், வரலாறு, புவியியல், ஜோதிடம் போன்ற பல துறைகளில் நிபுணர்களான பேராசிரியர் ஸ்ரீநிவாசராகவன், திரு.ஜி.எஸ். சம்பத் ஐயங்கார், திரு.சேஷகிரி போன்றவர்களை அந்த அமைப்பில் பங்கேற்கச் செய்து, அவர்கள் ஆய்வு செய்து வழங்கிய பல கட்டுரைகளை பிரசுரித்ததுடன், தானும் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறார். அந்த வகையில் திரு.ஜி.எஸ்.சம்பத் ஐயங்கார் எழுதிய 'The Riddle of The Ring' என்ற நூலின் அடிப்படையில் இந்தக் கதை பிறந்தது.

ராமாயண காவியத்தில் கணையாழியின் கதை படிப்பவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒன்று. ராமனின் தூதுவனாக வந்த அனுமன், தான் ராமனின் தூதுவன் என்பதற்கு அடையாளமாக ராமபிரான் தன்னிடம் கொடுத்தனுப்பிய கணையாழியைக் கொடுத்தான். அப்போதுதான் சீதையின் மனதில் நம்பிக்கை துளிர்விட்டது. இல்லையென்றால் அதுவும் ராவணனின் சூழ்ச்சிதான் என்று நினைத்து உயிர்த் தியாகம் செய்திருப்பாள். எனவே, ராமகாவியத்தில் கணையாழிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கைகேயி, ராமனிடம் வனம் செல்லக் கூறினாள். அதன்படி ராமன் தவமேற்கொண்டான். மரவுரி தரித்தான். பொன் அணி முதலியவற்றை அகற்றினான். இந்நிலையில் அனுமனிடம் கொடுத்து அனுப்பிய ராமநாமாங்கிதமான கணையாழி ராமனிடம் வந்தது எப்படி?



கதை பிறந்த கதை பற்றி
பத்ம.கிருஷ்ணசாமி

அதற்கும் ஒரு வரலாறு உண்டு. ராமன் காட்டிற்குக் கிளம்பும் முன்பு தன்னுடைய பொருள்கள் அனைத்தையும் நண்பர்களுக்கும் சான்றோர்களுக்கும் குற்றேவல் புரிபவர்க்கும் அளித்துச் சென்றான். பிறகு தண்டகவனத்திற்கு சிங்கபேரபுரத்தின் வழியாக கங்கையைக் கடந்து செல்வதென முடிவு செய்தான். அருமை நண்பன் குகனோடு அளவளாவி





தலைநகரத்திலிருந்து உல்லாசப் பொழுது போக்கிற்காகவும், வீர விளையாட்டுப் பயிற்சிகளுக்காக வும் கங்கைக் கரைக் காடுகளை ராமன் அடைந்த பொழுது, குகனுடன் அளவளாவி அவனது நட்பைப் பெற்றான். இந்த நட்பு பெரிதும் வளர்ந்து; அவனை ராமன் உயிரினும் இனியவனாக நினைத்து 'குகனோடும் ஐவரானோம்' எனப் பேசச் செய்தது

ஆத்மசாந்தி பெற எண்ணினான். இங்கு குகனைப் பற்றி சற்று அறிதல் வேண்டும். குகனைப் பற்றிக் கூறும்பொழுது அவன் ராமனுடைய 'ஆத்மசகா' என்றும், ஆயிரமாயிரம் ஓடங்களை உடையவன் என்றும், கோசல நாட்டு கப்பற்படைத் தலைவன் என்றும் கூறப்பட்டுள்ளது. செல்வச் சிறப்பினாலும், காவல் சிறப்பினாலும் சிறப்புற்றிருந்த கோசல நாட்டுப் பகுதிகள் பெரிய அகலமான நிழல் பொருந்திய சாலைகளால் தலைநகருடன் இணைக்கப்பட்டிருந்தது.

பகைவர்களால் வெற்றி கொள்ள முடியாதபடி கோட்டை கொத்தளங்களால் சிறந்திருந்த தலைநகரான அயோத்தி, உண்மையில் பகைவரால் வெற்றிகொள்ள அரியதாய் விளங்கிற்று. தசரதன் இந்த நாட்டை ஆண்டுவந்த எழுபத்தி ஒன்றாவது அரசன். அவனுடைய நாடு மேற்கில் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியிருந்தது. மேற்குக் கோடியில் ஓடிய இந்தப் பெருநதியை தசரதன் தன்னுடைய அன்னை இந்துமதியின் பெயரால் இந்து என்று அழைத்தான். அதுவே நாளடைவில் சிந்துவென மாறிற்று. தசரதனுடைய வெற்றிக்கும் ஆட்சித் திறமைக்கும் ஊற்றுவாயாக இருந்தவள் இந்துமதியே. அவளுடைய அறிவாற்றலே கோசல நாட்டை ஆர்யவர்த்தம் முழுவதும் பரவச் செய்தது.

இம்மாபெரும் நிலப்பரப்பை ஆள்வதில் தசரதனுக்கு நால்வகைப் படைகளுடன் கடற்படையும், சான்றோரான மந்திரிகளும் உதவினர். கப்பற் படைக்கு குகனின் தந்தையார் சிறப்பான தொண்டுகள் புரிந்தார். ராஜ்ய விஸ்தரிப்பில் அவர் பங்கும் கணிசமாகவே இருந்திருக்க வேண்டும். அவருடைய புதல்வனான குகன் தந்தையைப் போலவே சிறந்த கப்பலோட்டியாகவும், வில்லாளியாகவும், கடற் சண்டையில் திறமை மிக்கவனாகவும் விளங்கியிருந்தான்.

தலைநகரத்திலிருந்து உல்லாசப் பொழுது போக்கிற்காகவும், வீர விளையாட்டுப் பயிற்சிகளுக்காகவும் கங்கைக்கரைக் காடுகளை ராமன் அடைந்தபொழுது, குகனுடன் அளவளாவி அவனது நட்பைப் பெற்றான். இந்த நட்பு பெரிதும் வளர்ந்து; அவனை ராமன் உயிரினும் இனியவனாக நினைத்து 'குகனோடும் ஐவரானோம்' எனப் பேசச் செய்தது.

இந்திய கண்டம், வட இந்தியா, தக்காணம் என இரு இயற்கைப் பிரிவுகளை உடையது. விந்திய மலைக்குத் தெற்கிலும், அதைச் சுற்றிலும் கந்தர்வர்களும், வானரர்களும், அசுரர்களும் வசித்து வந்தனர். இவர்களை வட இந்தியாவிலிருந்து தக்காணத்திற்கு குடியேற்றினார் அகத்தியர். அவர்கள் ஒற்றுமையின்றி உட்பூசலில் ஈடுபட்டனர். கந்தர்வர்களை ஆர்யாவர்த்தத்தி லிருந்து (வட இந்தியாவிலிருந்து) வைவஸ்வத மனுவின் செல்வக் குமாரர்களான நர நாராயணர்கள் அடித்து தெற்கே விரட்டினர். மீண்டும் ஒரு முறை சுப்ரமண்யனால் தக்காணத்தின் தென்கோடி வரையில் விரட்டப்பட்டு, தென் மேற்கில் இருந்த தீவுக் கண்டத்தில் குடியேறினர். பிறகு இவர்கள் மற்ற இனத்தவர்களையும் துணை கொண்டு மீண்டும் தக்காணத்தின் மீது படையெடுத்து தென்கோடியில் கொஞ்ச இடத்தை ஆக்ரமித்தனர்.

ஆர்யாவர்த்தத்திலிருந்து தக்காணத்திற்கு வர மூன்றே பாதைகள் இருந்தன. முதற்பாதை கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும், கடலுக்கும் இடையே மஹாநதி கழிமுகப் பகுதியில் தெற்கு நோக்கிச் செல்லும் சமவெளிப் பாதை. இரண்டாவது பாதை நாகபுரி வழியாக தெற்கு நோக்கி வருவது. மூன்றாவது பாதை நர்மதை முகத்துவாரத்திலிருந்து மேற்குக் கரைச் சமவெளி மூலமாகச் செல்வது. இந்த மூன்று வழிகளையும் விந்திய மலைக்குக் குறுக்கே அடைப்பதற்கு கந்தர்வர்களையும், மற்றவர் களையும் அண்டை கொண்டு ராணுவத் தளங்களை அமைத்திருந்தனர்.

அனைவரும் கலந்த இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே பெயரில் ராக்ஷசர்கள் என்றே வழங்கலாயினர். இந்த மூன்று வழிகளுமே மிக முக்கியமானவை. இந்த வழிகளின் மூலமாக கலாசாரங்கள் வளர்ந்தன. வியாபாரம் தொடர்ந்து பெருகிற்று. ஆகையால்தான் இந்தப் பாதைகளை வழிமறிக்க ராக்ஷசர் கூட்டம் ஏற்பாடு செய்தது.

மத்திய வழியை மறித்து அமைக்கப்பட்ட தளம் இருந்த பிரதேசத்தை 'ஜனஸ்தானம்'

என வழங்கலாயினர். தண்டகாரண்யத்திலிருந்து ராக்ஷஸர்கள் விரட்டப்பட்டாலும் மூன்று பாதைகளையும் வழி மறிக்கும் இடங்களில் ராக்ஷஸர்கள் பெருகி இருந்தனர். மத்திய தளத்தில் ஜனஸ்தான பிரதேசத்தில் ராணுவத் தலைவியாக சூர்ப்பனகை நியமிக்கப்பட்டிருந்தாள். ராக்ஷஸர்களிலேயே மிக பயங்கரமானவள் சூர்ப்பனகை. ஒழுக்கம், இரக்கம் இரண்டும் அற்ற காமப்பேய். ஜனஸ்தானத்திற்குத் தெற்கே வனவெளிகளில், ஆற்றங்கரைகளில் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு ரிஷிமுனிவர்கள் தவம் செய்து வந்தனர். இந்த ரிஷி முனிவர் கூட்டங்களுக்கு அகத்தியரே தலைவர். அகத்தியர் வட இந்தியாவிலிருந்து தண்டகாரண்யத்தின் தென்பகுதிக்கு யாதவ குடும்பங்களை அழைத்து வந்து குடியேற்றினார். சுப்ரமணியனாலே ராக்ஷஸர்கள் முழுவதும் முன்னமேயே விரட்டப்பட்டிருந்ததால் எவ்வித தொல்லையுமின்றி யாதவர்கள் இங்கு வசித்து கல்வி, கலாசாரங்களைப் பெருக்கினர்.

கங்கைச் சமவெளியைக் காட்டிலும் தென்னாடு யாதவர்கள் கையில் செழிப்புடன் சிறந்து விளங்கிற்று. நாகரிகம், மொழி, வாணிபம், கலைகள், கைவினைகள் இவையனைத்தும் அகத்தியரால் விருத்தி செய்யப்பட்டன. பாண்டியர்களுடைய மீனக் கொடியுடன் வாணிபக் கப்பல்கள் கடலிலே சஞ்சரிக்கலாயின. மேற்குச் சமவெளிப் பாதையை காத்து வந்தவர்கள் தாடகை, மாரீசன், சுபாகு ஆகியவர்கள் அடங்கிய ராக்ஷஸ ராணுவப்படை. தாடகையும் ராவணனால் நியமிக்கப்பட்டவளே. இவளுக்கு ரிஷிகளைக் கொல்வது, நரமாமிசம் தின்பது இவற்றில் விருப்பம் அதிகம். இவள் சந்தோஷம் வந்தபொழுது சில ஆஸ்ரமங்களுக்குத் தீயிட்டு வேடிக்கை பார்ப்பதும் உண்டு. ஆகையினால் ராவணனுடைய கூட்டுறவிலும், தலைமையிலும் இருந்த இந்த அரக்க ராணுவத் தளங்களை ஒழித்தாலொழிய வாழ முடியாது என்ற நிலை ரிஷிகளுக்கு ஏற்பட்டது. இதை அழிப்பது எனில் ராவணனும் அழிய வேண்டும்.

முனிவர்கள் விசுவாமித்திரரிடம் சரண் புகுந்து இவர்களை ஒழித்துத் தரும்படி வேண்டிக் கொண்டனர். விசுவாமித்திரரும் ஆவன செய்ய வாக்களித்தார். ராமனை அழைக்க அயோத்தி வந்தார். அவனுடைய உதவியால் அரக்கர்களை ஒழிக்க திட்டமிட்டார். அப்பொழுது ராமனுக்கு வயது பன்னிரண்டு. வசிஷ்டருடைய சிபாரிசினால் ராம - லக்ஷ்மணர்களை அழைத்துச் சென்றார். ராமனுக்கு உதவியாக குகனும் உடன் சென்றான். வழி திருத்தி இவர்கள் இனிது செல்ல வழி வகுத்தான். தாடகா வதத்திலும், சுபாகு வதத்திலும் குகன் நேரே பங்கு கொள்ளாவிடினும் உடன் சென்றது நிகழக் கூடியது. அநுமானிக்கவும் கூடியது. பிறகு தாடகா வதம் முடிந்து முனிவர்கள் பயம் ஒழிந்தனர். விசுவாமித்திரர் ராம - லக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு ஜனகன் இயற்ற இருக்கும் யாகத்தைக் காணச் செல்ல முற்பட்டார். குகன் ராமனை ஆரத் தழுவி அயோத்திக்கு விடைபெற்றான். விடைபெறு முன்பு ராமன் குகனுடைய அன்புக்கு மனம் நெகிழ்ந்து, அவனுக்குத் தன் நன்றியுணர்வின் அடையாளமாகத் தன் விரலில் அணிந்திருந்த ராமநாமாங்கிதமான அரசு முத்திரை கூடிய மோதிரத்தை, குகனின் விரலைப் பிடித்து தானே அணிவித்து மகிழ்ந்தான். குகன் சிருங்கபேரபுரத்திற்கும், ராம - லக்ஷ்மணர்களும், கௌசிகரும் மிதிலைக்கும் சென்றனர். மிதிலையில் வேள்வியைக் கண்டு, வில்லறுத்து சீதையைப் பெற்றான். திருமண ஓலை பெற்று தசரதன் சதுரங்க சைனியம் புடைசூழ தேவியர்களுடன் மிதிலை சென்றான். மணவிழா இனிது முடிந்தது. அயோத்தி திரும்பினர். கப்பற்படைத் தலைவனான குகனும், ராமனுடைய மணவிழாவைக் காண மிதிலை வந்திருந்தான். திரும்பும்பொழுது ராமன், சீதை, லட்சுமணன், பரதன், சத்ருக்கணன் தம்பதிகளையும் படகேற்றி கங்கையைக் கடக்க உதவினான். ராமன் சீதைக்கு குகனை அறிமுகம் செய்து வைத்தான். சீதை அவன் கையில் தன் கணவனின் பெயர் பொறித்த அரச மோதிரத்தைக் கண்டு, விவரம் கேட்டதும், ராமன் அவளிடம் ''இவன் என் நண்பன். உயிரினும் இனியவன். உண்மையான நட்புரிமை கொண்டவன்'' என அறிமுகம் செய்து வைத்தான்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. அயோத்தி மன்னர் தென்னாட்டுத் தொடர்பை அதிகரிக்கவும் வாணிபத்தைப் பெருக்கவும் கிழக்கு, மேற்கு வழிகளில் பயத்தை நீக்கவும்



தசரதனுக்கு ராமன் பெரிதும் உதவி செய்தான்.

ராமனுடைய பட்டாபிஷேகம் அயோத்தியில் தடைப்பட்டது. கைகேயியினால் ராமன். லட்சுமணன், சீதை முதலியோர் வனத்திற்கு அனுப்பப்பட்டனர். காட்டுக்கு அப்பொழுதே செல்லவேண்டும் என்றும், அணிமணிகள் எதையும் ராமன் அணியலாகாதென்றும், முனிவர் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும், கங்கையைக் கடந்ததும்தான் உணவு கொள்ளவேண்டும் என்றும் கூறினாள். ராமன் தன் உடைமைகளை நண்பர்களுக்கும் சான்றோர்களுக்கும் அளித்து காட்டுக்கு விடைகொண்டான். கங்கையை குகன் உதவியால் கடந்தான். நடந்த செய்திகளைக் கேட்டறிந்து மனம் வருந்தினான் குகன். அன்றிரவு குகனுடன் ராமன் தங்கினான். மறுநாள் வைகறைத் துயிலெழுந்து மூவரும் விடைபெற்றனர். அப்பொழுது குகன், ராமனுடைய கையைப் பற்றி அவன் தனக்களித்த ராமநாமாங்கிதமான மோதிரத்தை மீண்டும் அவன் விரலிலேயே அணிவித்தான். ராமனும் மறுக்கவில்லை.

ராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையின் இருப்பிடத்தை அறிந்து வர தெற்கு நோக்கி அனுமனை அனுப்பினான் ராமன். அனுமனிடம் சீதைக்கு அடையாளம் கூற தன் நாமாங்கித மோதிரத்தையும், அந்தரங்கமாக நடந்த சில நிகழ்ச்சிகளையும் கூறி அனுப்பினான். அனுமனும் சீதையிடம் ராமபிரான் தன்னிடம் கூறிய அந்தரங்கச் செய்திகளைக் கூறி, ராமநாமாங்கிதமான கணையாழியையும் சீதையிடம் கொடுத்தான். தன்னை ராமனின் தூதுவன் என்பதை நம்பவும் செய்தான். குகனின் உதவி தக்க தருணத்தில் சீதைக்கு நம்பிக்கை ஏற்படச் செய்தது. கணையாழியைப் பெற்ற சீதை, தான் ராமனையே அடைந்துவிட்டது போன்று மகிழ்ச்சி அடைந்தாள்.

ஆதாரம்: Riddle Of The Ring by G.S.Sampath Iyengar, Published by International Society For The Investigation Of Ancient Civilization

●

நிவேதிதா



கார்கில் யுத்தமும் உலகக் கோப்பை கிரிக்கெட்டும்

1999-ம் வருடம் ஜூலை மாதத்தின் இறுதி வாரத்தில் ஒரு நாள். அன்றைய தினம் அப்போதைய பிரதமர் வாஜ்பாய், 'உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில்கூட வெற்றி பெற முடியாதவர்கள் எந்த நம்பிக்கையில் இந்தியாவுடன் போரிடத் துணிந்தார்கள்?' என்று பாகிஸ்தானை சாடினார். கார்கில் போரில் வெற்றி பெற்ற பிறகு உதிர்த்த வார்த்தைகள் அவை.

உலகக் கோப்பைக்கும் கார்கில் யுத்தத்துக்கும் என்ன தொடர்பு?

அதற்கு முன்பு கார்கில் யுத்தம் பற்றித் தெரிந்துகொள்வோம்.

கார்கில், இந்தியா - பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகிலுள்ள உயர்ந்த மலைப் பகுதி. இந்த நகரத்தின் வழியாகச் செல்லும் சாலை ஸ்ரீநகரையும் - லே நகரையும் இணைக்கும் 1-ம் எண் தேசிய நெடுஞ்சாலை மட்டுமே. வெண்பனி சூழ்ந்திருக்கும் நகரம் கார்கில். மிகவும் கரடு முரடான அந்த மலைப் பிரதேசத்தில் சுமார் 16 ஆயிரம் முதல் 18 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள இந்தப் பகுதியில்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அமைந்துள்ளது. அந்தக் கோட்டுக்கு இந்தப் புறம் இந்திய வீரர்களும், அந்தப் பக்கத்தில் பாகிஸ்தானிய வீரர்களும் தங்கள் தங்கள் எல்லையைக் கண்காணித்தபடி இருப்பார்கள்.

குளிர்காலத்தில் வெப்பநிலை மைனஸ் டிகிரிக்குக் கீழாக இறங்கிவிடும் என்பதால், இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் இருக்கும் இரு நாட்டு ராணுவ வீரர்களும் செப்டம்பர் மூன்றாவது வாரம் மலைச் சிகரங்களில் இருந்து கீழே இறங்கிவிடுவார்கள். மறுபடியும் ஏப்ரல் மூன்றாவது வாரத்

கார்கில் வெற்றி தினம்

ஜூலை - 26





தொடக்கத்தில்தான் தங்கள் பாசறைகளுக்குத் திரும்பி பாதுகாப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

******

1999-ம் வருடம் மே மாதத்தின் தொடக்கத்தில் ஒருநாள் ஆடு மேய்க்கும் இரண்டு சிறுவர்கள், தாங்கள் ஆடு மேய்க்கச் சென்ற இடத்தில், அந்நியர்கள் சிலர் பெரிய பெரிய துப்பாக்கிகளுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்ததாகவும், தங்களைத் துரத்த வந்தவர்களிடமிருந்து தப்பித்து வந்ததாகவும் கூறினர். அவர்கள் கூறியது உண்மைதான்.

அந்த வருடக் குளிர்காலத்தில் பாகிஸ்தானிய படைகள் கீழே இறங்குவதற்கு பதில் அங்கேயே முகாமிட்டுக்கொண்டு, ராணுவ தளவாடங்களை கொண்டு வந்து குவித்தனர். இந்தியப் படைகள் கீழே இறங்கி விட்டதால் காலியாக இருந்த இந்திய ராணுவ நிலைகளை பாகிஸ்தான் ராணுவம் கைப்பற்றிக் கொண்டது. கார்கிலில் ஊடுருவி எல்லை கட்டுப்பாட்டு கோட்டை தாண்டி முஷ்கோ பள்ளத்தாக்கு, டிராஸ் அருகில் உள்ள மார்போலா மலை முகடுகள், கார்கிலுக்கு அருகிலுள்ள கக்சர், சிந்து நதியின் கிழக்கு பகுதியில் உள்ள படாலிக் பகுதி, எல்லையோரத்தில் உள்ள சோர் பாட்லா பகுதி, சியாசின் பனி மலைக்கு தெற்கே அமைந்துள்ள துர்தோக் ஆகிய பகுதிகளை தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

கார்கில் பகுதிக்குள் ஊடுருவி ஸ்ரீநகர் - லே நெடுஞ்சாலையைத் துண்டித்துவிட்டால், அங்கிருந்து இந்தியாவை எளிதில் தாக்க முடியும்; அதன் மூலம் காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்ற எண்ணமே அவர்களை அப்படிச் செய்யத் தூண்டியது.

தகவல் அறிந்துகொண்ட ராணுவ உயர் அதிகாரி ஒருவர், கேப்டன் சௌரவ் காளியாவிடம், பஜ்ரங் சேக்டர் ஏரியாவில்





அந்நியர்கள் நடமாட்டம் இருப்பதைக் கூறி, அவருக்குக் கீழ் உள்ள அதிகாரி ஒருவரை அனுப்பிப் பார்த்து வரச் சொல்கிறார். ஆனால், தானே ஐந்து வீரர்களுடன் செல்வதாகக் கூறி உத்தரவு பெற்று கிளம்பினார் சௌரவ் காளியா.

கார்கில் பகுதியில் உள்ள மலைச் சிகரங்கள் இயற்கையாகவே இந்தியாவுக்கு எதிராக அமைந்திருப்பது. பாகிஸ்தான் பக்கமுள்ள பகுதி சிறிது சிறிதாக மேலேறும். ஆனால், இந்தியா பக்கமுள்ள பகுதி செங்குத்தாக மேலேறும். இதன் காரணமாக இந்தியப் படைகளுக்கு மேலே ஏறிச் செல்வது கடினம்தான். கடினமான அந்தச் சூழ்நிலையைச் சற்றும் பொருட்படுத்தாமல், எதிரிகளை நோக்கி முன்னேறி தாக்குதல் தொடுக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் நம் ராணுவ வீரர்கள்!

அப்படித்தான் சௌரவ் காளியா ஐந்து வீரர்களுடன் மேலே ஏறிச் செல்லத் தொடங்கினார். ஓரடி வைத்தாலே மூச்சுத் திணறல் ஏற்படும் அளவுக்கு ஆக்ஸிஜன் குறைவான பகுதி. போதாதென்று துப்பாக்கிகள், உணவு, குண்டுகள் என்று பல கிலோ எடை கொண்ட சுமை.



சௌரவ் தன் வீரர்களுடன் மேலேறி வருவதைக் கண்ட பாகிஸ்தானிய வீரர்கள் சரமாரியாக சுடுகிறார்கள். எதிர்பார்த்ததை விடவும் பல நூறு பேர் கொண்ட வீரர்கள் இருப்பதைக் கண்ட சௌரவ் காளியா, வயர்லெஸ் மூலம் கூடுதல் வீரர்களை அனுப்பும்படி உயரதிகாரிகளுக்குத் தகவல்

சொல்லும்போதே குண்டு பாய்ந்து வயர்லெஸ் செட் பயனற்றுப் போய்விட்டது.

கையறு நிலையில் இருந்த சௌரவ் காளியா மற்றும் அவருடன் இருந்த ஐந்து வீரர்கள் பாகிஸ்தான் ராணுவத்தினரால் சிறைப் பிடிக்கப்பட்டனர். இது நடந்தது 1999-ம் வருடம் மே மாதம் 15-ம் தேதி. பின்னர் ஜூன் மாதம் 9-ம் தேதி ஆறு பேரும் சடலங்களாக இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். சடலங்களைப் பார்த்த ராணுவ உயரதிகாரிகள் அப்படியே உறைந்துபோய் நின்று விட்டனர். ஜெனிவா ஒப்பந்தத்தில் கூறியிருக்கும் அனைத்து யுத்த தர்மங்களும் அப்பட்டமாக மீறப் பட்டிருந்தன. யுத்தத்தில் பிடிபட்ட வீரர்களை நடத்தவேண்டிய அடிப்படைப் பண்பை பாகிஸ்தான் அடியோடு காற்றில் பறக்கவிட்டிருந்தது. விசாரணை என்ற பெயரில் சிகரெட்டால் சுட்ட வடுக்கள், கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைக்கப்பட்ட கை, கால்கள், ஈயம் காய்ச்சி ஊற்றிய காதுகள் என்று கற்பனையில்கூட நெஞ்சை பதறச் செய்யும் அளவுக்கு அந்த வீரர்கள் சித்திரவதை செய்யப்பட்டு இறுதியில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இந்த அளவுக்கு சித்திரவதை செய்தும்கூட, இந்திய ராணுவத்தின் வலிமை மற்றும் பாதுகாப்புத் திறன் குறித்து எந்தத் தகவலையும் கடைசி வரை சொல்லவேயில்லை. பாகிஸ்தான் ராணுவத்தினரே ஒப்புக்கொண்ட உண்மை இது.

கார்கில் யுத்தத்தின் தொடக்கம் இதுதான். பல சாகசங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் ராணுவம் கைப்பற்றிய அனைத்து இந்தியப் பகுதிகளும் மீட்கப்பட்டன. இறுதியாக ஜூலை மாதம் 26-ம் தேதி கார்கில் போரின் வெற்றி, அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அவர்களால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

கார்கில் போரில் ஈடுபடத் துணிந்த பாகிஸ்தானின் துணிச்சலை, உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியுடன் வாஜ்பாய் தொடர்புபடுத்திக் கூறியதற்குக் காரணம் இருக்கவே செய்கிறது.

கார்கில் போருக்குச் சில வாரங்களுக்கு முன்புதான் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை இந்தியா வெற்றி கொண்டது.

கார்கில் யுத்தத்தில் இரண்டு இளம் வீரர்களின் வீரதீர சாகசம் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவர்கள் இருவரைப் பற்றிய கட்டுரைகள் அடுத்தடுத்த இதழ்களில் இடம் பெறவிருக்கின்றன.

தகவல் உதவி: மேஜர் விட்டோபா (பணி நிறைவு)



காயத்ரி பிரசன்னா

அளவற்ற நன்மைகள் அருளும் கோமாதா வழிபாடு

'பசு இருக்கும் வீட்டில் பஞ்சம் இருக்காது' என்பார்கள். அந்த அளவுக்கு பசு இருக்கும் இடத்தில் சகல ஐஸ்வர்யங்களும் நிறைந்திருக்கும். பசுவுக்கு 'கோமாதா' என்ற சிறப்பான பெயரும் உண்டு. 'கோ' என்னும் சொல்லுக்கு இறைவன் என்றும் அரசன் என்றும் பொருள் உண்டு. இறைவனுக்கு நிகராகப் போற்றப்படும் கோமாதாவின் சிறப்புகளை விவரித்துக் கூற இயலாது.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது நந்தா, சுசீலை, பத்திரை, சுரபி, சுமனை என்னும் ஐந்து பசுக்கள் தோன்றின. இவற்றின் சந்ததிகளே இன்றளவும் கோமாதாவாக நமக்குச் சகல செல்வங்களையும் அளித்து வருகின்றன.



கோ பூஜை செய்வதால் கிடைக்கும் நன்மைகள்:

கோமாதாவைத் தெய்வமாக நினைத்து விரதமிருந்தால், கோலோகத்தை அடையும் பாக்கியம் உண்டாகும்.

கோ பூஜை செய்து பசுவிற்கு உணவு அளித்தால் நம் கர்மவினைகள், சாபங்கள் யாவும் நீங்கும்.

எந்தக் கிரகத்தால் நமக்குத் துன்பங்கள் ஏற்படுகின்றதோ அந்த கிரகத்துக்கு உரிய கிழமையில் கோ பூஜை செய்து, பொங்கல் வைத்துப் படைக்க, கிரக பாதிப்புகள் விலகும்.

கோமாதாவுக்கு வாழைப்பழத்துடன் வெல்லம் சேர்த்துப் படைக்க பித்ரு தோஷம் நீங்கி புத்திர பாக்கியம் உண்டாகும்.

சனி ஆதிக்கத்தால் பாதிக்கப் பட்டோர் சனிக்கிழமைதோறும் பசுவுக்கு அகத்திக்கீரை கொடுத்துவர, பாதிப்புகள் குறையும்.

மகாலட்சுமியின் உறைவிடமான பசுவின் பிருஷ்ட பாகத்தை வழிபட்டால் பூர்வஜன்ம பாவங்கள் விலகும்.



பசுவுக்குப் புல் கொடுத்தால், பஞ்ச மகா பாவங்களும் விலகும் என்றனர் முனிவர்கள். ஜாதகத்தில் சுக்கிரன் நீச்சம் அடைந்தோ, தோஷமுள்ளவராகவோ இருந்தால், பசுவின் சாபம் இருக்கக் கூடும். அவர்கள், இந்தப் பாவங்கள் விலக, இந்த ஸ்லோகத்தைச் சொல்லி, பசுவுக்கு புல் கொடுத்துவர, தோஷங்கள் விலகும்; குலம் தழைக்கும்!


ஸௌரபேப்ய ஸர்வஹிதா

பவித்ரா புண்யராசய|

ப்ரதிக்ருண்ணம் த்விமம் க்ராஸம்

காவஸ் த்ரைலோக்ய மாதர||

'காமதேனு வம்சத்தைச் சேர்ந்தவையும், எல்லோருக்கும் நன்மை செய்பவையும், பரிசுத்தமானவையும், புண்ணியக் கூட்டங்களுமான... மூவுலகத்துக்கும் தாயான பசுக்கள், இந்தப் புல்லைப் பெற்றுக்கொண்டு அருள்புரியட்டும்'



பசுவின் உடலில் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும் வீற்றிருக்கிறார்கள். மேலும் சகல விதமான தெய்வங்களும், பார் போற்றும் முனிவர்களும், நவகிரகங்களும் பசுவின் உடலில் உறைவதாக ஐதிகம். கோமாதாவின் நான்கு கால்கள் நான்கு வேதங்களாகவும் நான்கு யுகங்களாகவும் கருதப் படுகிறது. அதனால்தான் கோமாதாவுக்குப் பூஜை செய்தால், நமக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கிறது. அனைத்து விதமான தோஷங்களும் நீங்குகிறது.


ஆலயங்களில் தினமும் கோபூஜை நடைபெறுவது மிகவும் சிறப்பான பலன்களைத் தரவல்லது. எந்த ஆலயத்தில் தினமும் கோபூஜை செய்யப்படுகிறதோ அந்த ஆலயத்தில் தெய்வ சாந்நித்யம் பரிபூரணமாக நிறைந்திருக்கும் என்கின்றன சாஸ்திரங்கள்.

கோமாதா என்று அழைக்கப்படும் பசு பூவுலகில் லௌகீக ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் பலப் பல நன்மைகளைத் தருகிறது. கேட்ட வரத்தை நல்கும் பசுவை எவ்வாறு பராமரித்து போற்ற வேண்டும் என்பது பற்றி சிவதருமோத்தரம் கீழ்கண்டவாறு கூறுகிறது.

அஷ்டமிதோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் ஜலமும்ஊட்டி, தீப தூபம் காட்டி வணங்க வேண்டும். வேனிற்காலத்தில் பசுக்களை சோலைகளிலும், மழைக்காலத்தில் மலைச்சாரல் வனங்களிலும், பனிக் காலத்தில் வெயில் மிகுந்த வெளிகளிலும் மேய்க்க வேண்டும்.

பசு மடத்திலுள்ள பசுக்களுக்கு அகத்திக் கீரை, பசும்புல், பழங்கள் உள்ளிட்ட தீவனங்களை அளிக்க வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு சிகிச்சைக்கான செலவினையும் ஏற்றுக் கொண்டால் நாமும் ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம்.

ராசிபலன்



மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

இம்மாதம் முழுவதும் பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி சூரிய பகவான் 3–ம் வீடான மிதுன ராசியில் பலம் பெறுவதால் தங்களின் முயற்சிகள் பலிதமாகும். ஜூலை 7–ம் தேதியிலிருந்து 25–ம் தேதி வரை சூரியனுடன் சேர்ந்து புதனும் பலம் பெற்று அதிசார குருவின் பார்வையும் 3–ம் பாவத்திற்குக் கிடைப்பதால் மிகவும் அதிர்ஷ்டம் நிறைந்த மாதம் ஆகும். இளைய உடன் பிறப்புகளுக்கு குருவின் பார்வையினால் அதிர்ஷ்டம் வந்து சேரும்.

அரசு வேலை செய்பவர்களுக்கு சுபச் செய்தி வந்து சேரும். தந்தைக்கு செல்வாக்கு அதிகரிக்கும். தன ஸ்தானாதிபதியும் 7–ம் அதிபதியுமான சுக்கிர பகவான் 4–ம் பாவமான கடகத்தில் வலுவுடன் இருப்பதால் ஃபேன்சி ஸ்டோர், ஜவுளிக்கடை, அழகு நிலையம் நடத்துபவர்களுக்கும் சினிமாத் துறை, சின்னத் திரையில் உள்ளவர்களுக்கும், ஆன்லைனில் வியாபாரம் செய்பவர்களுக்கும் தனவரவு அதிகரிக்கும். கூல்ட்ரிங்ஸ், அரிசி, பால், தயிர் விற்பனை செய்பவர்களுக்கு வருமானம் பெருகும். ஹோட்டல், கேட்டரிங் போன்ற தொழில்கள் இம்மாதம் 17–ம் தேதிக்கு பிறகு லாபகரமாக நடக்கும். பங்கு வர்த்தகம் செய்பவர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். வீட்டிலிருந்து மென்பொருள் சம்பந்தமான வேலை செய்பவர் களுக்கு மாதத்தின் பிற்பகுதி அதிர்ஷ்டம் நிறைந்ததாக இருக்கும். மாத முற்பகுதியில் வெளியூருக்குப் போக வேண்டிய சூழ்நிலை இருப்பதால் கவனமுடன் சென்று வரவும். அதிசார குருவின் பார்வை 5–ம் இடத்தில் விழுவதால் குழந்தைகளின் ஆரோக்கியம் சீராகும். தங்களின் ராசியாதிபதி செவ்வாய் இம்மாதம் 20–ம் தேதி வரை வலுக் குறைந்து இருப்பதால் உடல்நிலையில் சற்று கவனம் தேவை. 20–ம் தேதிக்குப் பிறகு ராசியாதிபதி செவ்வாய் சிம்மத்திற்கு பெயர்ந்து அதிசார குருவின் பார்வையைப் பெறுவதால் தங்களின் ஆரோக்கியம் சீராகும்.

அதிர்ஷ்ட நாள்கள் – ஜூலை 2,3,7,8,15,16,18,24,25, 28,29,30.

சந்திராஷ்டமம் – 19.7.2021 முதல் 21.7.2021 வரை கவனம் தேவை.

வணங்க வேண்டிய தெய்வம் – மஹா விஷ்ணு, பராசக்தி.



ரிஷபம்

(கார்த்திகை 2,3,4–ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1,2–ம் பாதம்)

தங்களின் ராசிநாதன் சுக்கிர பகவான் மாத முற்பகுதியில் தைரிய ஸ்தானத்தில் வலுப் பெற்றுள்ளதால் தங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இம்மாத பிற்பகுதியில் சிம்மத்தில் நிற்கும் சுக்கிரன் அதிசார குருவின் பார்வையைப் பெறுவதால் ஃபேஷன் ஜுவல்லரி தொழில் செய்பவர்களுக்கும், சின்னத்திரை, சினிமாத் துறையில் உள்ளவர்களுக்கும் வருமானம் அதிகரிக்கும் 2–ம் இடத்தில் 7–ம் தேதி வரை புதன் வலுப்பெறுவதால் மகிழ்ச்சிக்கும் நகைச்சு வைக்கும் பஞ்சம் இருக்காது. வீட்டிலேயே கடை வைத்திருப்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பொருளாதாரம் சிறக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

தன ஸ்தானாதிபதி புதன் 7–ம் தேதி வரை தங்களின் ராசியிலும் 25–ம் தேதி வரை 2–ம் ஸ்தானமான மிதுன ராசியிலும் பலம் பெறுவதால் தனவரவு அதிகரிக்கும். வியாபாரம் பெருகும். சிறிய அளவில் மளிகைக் கடை, பூக்கடை, பழக்கடை நடத்துபவர்களுக்கு அதிர்ஷ்டமான நேரம். இதுவரை நடக்கவில்லையே என்று நீங்கள் ஏங்கித் தவித்த விஷயம் இப்பொழுது நிறைவேறும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமணம் நடைபெறும். இனி நடக்காது என்று முடிவு செய்த திருமணம்கூட மனம் போல கைகூடும்.

கடன் அடைபடும். பணவரவு அதிகரிக்கும். தாயாரின் உடல்நிலை சீராகும். வெளிநாட்டி லிருந்து சுபச் செய்திகள் வரும் .வீட்டில் பெண்களின் ஆதிக்கம் நிறைந்து காணப்படும். இம்மாதம் 20–ம் தேதிக்கு மேல் கேட்டரிங், ஹோட்டல், பேக்கரி, கட்டடத் தொழில் செய்பவர் களுக்கு தனவரவு அதிகரிக்கும். கணவன் – மனைவி இருவரும் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

அதிர்ஷ்ட நாள் –2,5,7,8,10,12,13,15,18,20,24 ,25,28, 29,31

சந்திராஷ்டமம் – 21.7.2021 முதல் 23.7.2021 வரை கவனம் தேவை.

வணங்க வேண்டிய தெய்வம் – துர்கை, விநாயகர்.

ஜூலை மாத ராசிபலன் - 2021



மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் ஜோதிடர் **பூமணி நாராயணன்,**
B.A. (Tamil) M.Sc (Astrology) ஜோதிடக் கலை பயிற்றுநர்



மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்)

தங்கள் ராசிநாதனும் சுக ஸ்தானாதிபதியுமான புத பகவான், தைரிய ஸ்தானாதிபதியான சூரியனுடன் சேர்ந்து உங்கள் ஜன்ம ராசியிலேயே சஞ்சரிப்பதால் மிகவும் துணிச்சலுடன் காணப்படுவீர்கள் முக்கியமாக இந்த ராசியைச் சேர்ந்த மருத்துவர்கள் அதிசார குருவின் பார்வையினால் ஆரோக்கியத் துடன் காணப்படுவார்கள். மரியாதையாக நடத்தப் படுவார்கள். பெண் குழந்தைகளுக்கு சுப நிகழ்ச்சி வீட்டில் நடைபெறும். குடும்பத்தில் சுபச் செலவு களும் மற்ற செலவுகளும் அதிகரித்தாலும் அதிசார குருவின் பார்வையினால் வருமானம் அதிகரித்து சமாளிப்பீர்கள். அதிசார குருவின் பார்வை தங்களுக்கும், இளைய உடன்பிறப்புகளுக்கும், குழந்தைகளுக்கும் கிடைப்பதால் அனைவரின் உடல் நலமும் மேம்படும். இளைய உடன்பிறப்பு களிடம் பேசும்போது பேச்சில் கவனம் தேவை.

வீட்டிலிருந்து ஐ.டி. சார்ந்த துறையில் வேலை பார்ப்பவர்கள் தினமும் உடற்பயிற்சியும் அவ்வப் பொழுது சிறிது ஓய்வும் எடுத்துக்கொண்டால், கழுத்து மற்றும் இடுப்புப் பகுதியில் வரும் வலிகளைத் தவிர்க்கலாம். கொடுத்த பணம் ஜூலை 20-ம் தேதிக்கு மேல் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகளை, நீண்டதூர பயணங்களை, உறவினர்கள், நண்பர்களுக்கு பணம் கடனாக கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

இந்த மாதம் 7, 8, 9, 10, 11-ம் தேதிகளில் தாயாருக்கும் உங்களுக்குமான பாசப்பிணைப்பு அதிகரிக்கும். காரசாரமான பேச்சுகளை குடும்பத்தில் தவிர்த்தல் நலம். வக்ர சனி பகவானின் பார்வையை குடும்ப ஸ்தானத்தில் உள்ள வலுவிழந்த செவ்வாய் பெறுவதால் உடன் பிறந்தோருடன் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். ஜூலை 20-ம் தேதிக்கு பிறகு வருமானம் அதிகரிப் பதால் லாபம் அதிகரிக்கும். பெண்கள், பெண் குழந்தைகளுக்கு இது மிகவும் அதிர்ஷ்டமான நேரமாக அமையும்.

அதிர்ஷ்டமான நாட்கள் – 7, 8, 9, 10, 11, 12, 18, 19, 26, 27, 30, 31

சந்திராஷ்டமம் – 23.7.2021 முதல் 25.7.2021 வரை

வணங்க வேண்டிய தெய்வம் – லட்சுமி நரசிம்மர், முருகன்.



கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

உங்கள் ராசிநாதன் சந்திரபகவான் இந்த ஜூலை மாதத்தில் பெரும்பான்மையான நாள்களில் மிகவும் வலுவுடன் காணப்படுவதால் தங்களின் தேக ஆரோக்கியம் மிகவும் சிறந்து காணப்படும். 6,7 தேதிகளில் மிகுந்த பண வரவை எதிர்பார்க்கலாம். 13, 14, 15 தேதிகளில் பொருளாதார ஏற்றம் காணப்படும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். அதிசார குருவின் பார்வையை தன ஸ்தானமும் குடும்ப ஸ்தானமும் பெறுவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீடு, கடை வாடகை வசூலாகும். பெற்றோரின் உடல்நிலையில் கவனம் தேவை. தன ஸ்தானாதிபதி சூரியன் விரயஸ்தானத்தில் இம்மாதம் 17-ம் தேதி வரை இருந்து சுப விரயங்களை கொடுத்தாலும், அதிசார குருவின் பார்வை இரண்டாம் பாவத்திற்குக் கிடைப்பதால் செலவுகளை சமாளித்து விடுவீர்கள். தங்கள் ராசிக்கு யோகாதிபதியான செவ்வாய் இம்மாதம் ஜூலை 20- க்குப் பிறகு தன ஸ்தானத்திற்கு நகர்ந்து விடுவதால் பொருளாதார ஏற்றம் ஏற்பட்டு எதிலுமே வெற்றிதான்.

நீங்கள் கொடுத்த பணம் எதிர்பாராத விதத்தில் திரும்பக் கிடைக்கும். கடன்கள் வசூலாகும். இருபதாம் தேதிக்குப் பிறகு நிலம் ,வீடு சம்பந்தமான விஷயங்களில் லாபங்களைப் பெறுவீர்கள். திருமணத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப் பவர்களுக்கு திருமணம் நிச்சயமாகும். மாதத்தின் முற்பகுதியில் வேலை, தொழில் சம்பந்தமாக சிலருக்கு மன அழுத்தங்கள் இருந்தாலும் மாதத்தின் பிற்பகுதியில் சரியாகிவிடும். இந்தக் கண்டச்சனி நேரத்திலும், கோவிட் நேரத்திலும் பார்த்துக் கொண்டிருக்கின்ற வேலையை தக்க வைத்துக் கொள்ளவும்.

பிறருக்காக ஜாமீன் கையெழுத்து போடுவதையும், பணம் கடனாகவோ, கைமாற்றா கவோ கொடுப்பதையும், நகை அடகு வைக்க கொடுப்பதையும் தவிர்த்தால் குடும்பத்தில் பிரச்னைகளை சமாளிக்கலாம்.

அதிர்ஷ்டமான நாள் – 2,4,5,8,9,11,16, 17,20,21,29,31

சந்திராஷ்டமம் – 25.7.2021 முதல் 28.7.2021 வரை நிதானம் தேவை.

வணங்க வேண்டிய தெய்வம் – குரு பகவான்,கால பைரவர்



(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

உங்கள் ராசியாதிபதி சூரிய பகவான், அதிசார குருவின் 5 ம் பார்வையுடன் இந்த மாதம் 17–ம் தேதி வரை லாப ஸ்தானமான மிதுனத்தில் சஞ்சரிப்பதால் வளமான ஏற்றமான வாழ்வை எதிர்பார்க்கலாம். குருவின் பார்வை உங்கள் ராசிக்கும் ராசி அதிபதிக்கும் கிடைப்பதால் உங்களின் ஆரோக்கியம் சிறக்கும். தன ஸ்தானாதிபதியும் லாப ஸ்தானாதிபதியுமான புதன் பகவான் உங்கள் ராசி அதிபதியான சூரியனுடன் இம்மாதம் 7–ம் தேதியிலிருந்து 25–ம் தேதி வரை அதிசார குருவின் பார்வையுடன் சஞ்சரிப்பது பலவிதமான லாபங்களை அள்ளித்தரும். பணம் கொட்டோ கொட்டென்று கொட்டப் போகிறது. இத்தனை நாள் கனவு கண்ட எல்லா அத்தியாவசிய விஷயங்களையும் அதீத பண வரவினால், நிறைவேற்றிக் கொள்ளப் போகும் மிக அதிஷ்டமான நேரம் இது.

பத்திரிகைத் துறை, தொலைத் தொடர்புத் துறையில் பணிபுரிபவர்கள், மாணவர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு மிகவும் ஏற்றமான சூழ்நிலை அமையும். கலைஞர்கள் இம்மாதத்தின் பிற்பகுதியில் நல்ல செய்திகளைப் பெறுவார்கள். புதிய வேலைக்கான உத்தரவில் கையெழுத்து இடுவீர்கள். உடல் நிலையில் சற்று கவனம் தேவை. சாப்பாடு விஷயத்தில் நேரம் தவறாமையை கடைப் பிடிக்கவும். மாதத்தின் பிற்பகுதியில் அரசு வேலை பார்ப்பவர்களுக்கு சாதகமான சூழ்நிலை நிலவும். வீடு, மனை வாங்க வேண்டும் என்று நீங்கள் நினைத்திருந்த நெடுநாள் கனவு இம் மாதத்தின் பிற்பகுதியில் 20–ம்தேதிக்குப் பிறகு நிறைவேறும். மென்பொருள்துறை, சினிமாத் துறையில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

வீடு மற்றும் அலுவலகங்களில் பெண்களிடம் பேசும்போது எச்சரிக்கை தேவை. வியாபாரிகளுக்கு பணவரவு அதிகரித்து பொருளாதாரம் சிறந்து காணப்படும். வழக்கறிஞர்கள், ஆசிரியப் பணியில் இருப்பவர்கள் அவர்களுடைய தொழிலில் சிறிது கவனமுடன் இருப்பது நல்லது.

அதிர்ஷ்டமான நாள் –3,4,5,6,8,9,10,12,14,17, 19,20,23,24,25,31

சந்திராஷ்டமம் – 1.7.2021 முதல் 2.7.2021 மற்றும் 28.7.2021 முதல் 30.7.2021 வரை

வணங்க வேண்டிய - தெய்வம் – தட்சிணாமூர்த்தி, சுப்ரமண்யர்



(உத்திரம் 2,3,4 -ம் பாதம் ஹஸ்தம், சித்திரை 1,2–ம் பாதம்)

உங்கள் ராசிநாதனும் பத்தாம் அதிபதியுமான புதன் பகவான் இம்மாதம் முழுவதும் உச்ச கேந்திரத்திலும், உச்ச திரிகோணத்திலும் மிகவும் வலுவுடன் காணப்படுவதால் வேலை தொழில் சம்பந்த மான தங்களின் விருப்பங்கள் நிறைவேறும். அதிசார குருவின் பார்வையை தங்கள் ராசியின் 10, 12, 2–ம் பாவங்கள் பெறுவதால் தொழிலாளர்களும், மருத்துவமனையில் வேலை பார்ப்பவர்களும் மன அழுத்தம் நீங்கி உற்சாகம் பெறுவார்கள். தாங்கள் எதிர்பார்த்த புதிய வேலை வாய்ப்பு உருவாகும். மாதத்தின் பிற்பகுதி கலைஞர்களுக்கு மிகவும் முன்னேற்றம் தருவதாக இருக்கும். மாத்ரு ஸ்தானம் வக்ர சனி பகவானின் பார்வையில் இருப்பதால், தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. மாதத்தின் பிற்பகுதியில் பணவரவு அதிகரிக்கும். ஜூலை 20–க்குப் பிறகு இளைய உடன்பிறப்புகளுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமையுடன் இருப்பீர்கள்.

குழந்தைகள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. 5, 6, 7, 12 தேதிகளில் பணவரவு அதிகரிக்கும். தண்ணீர், கூல்ட்ரிங்ஸ் போன்ற தொழிலில் உள்ளவர்களுக்கும், தொலைத்தொடர்புத் துறை பத்திரிகைத் துறையில் உள்ளவர்களுக்கும் முன்னேற்றமான நேரமாக இருக்கும். நகை, பணம் போன்ற விஷயங்களில் பாதுகாப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பது நன்மை பயக்கும். வீட்டிலும் அலுவலகத்திலும் உங்களிடம் வேலை பார்ப்பவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

3–ம் இடத்தில் உள்ள கேது பகவான் தங்களுக்கு மிகுந்த தைரியத்தை அளிப்பார். மகரத்தில் உள்ள சனி பகவான் தங்கள் 4–ம் பாவத்தை வக்ரமாகப் பார்ப்பதால்,வண்டி வாகனங்களில் செல் வோர் சற்று கவனத்துடனும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நீண்ட நாளாக ஏதேனும் ஒரு வண்டி வாங்க வேண்டும் என நினைத்திருப்பவர்கள் இன்னும் 4 மாதம் கழித்து வாங்குவது நல்லது.

அதிர்ஷ்டமான நாட்கள் – 2,6,7,11,12,15,16,17, 18,19,23,24,25,27,29

சந்திராஷ்டமம் – 3.7.2021 முதல் 5.7.2021 வரை மற்றும் 31.7.2021

வணங்க வேண்டிய தெய்வம் –குபேரன், மாரியம்மன்

துலாம்

(சித்திரை 3,4 ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்)

உங்கள் ராசிநாதனான சுக்கிர பகவான் மாத முற்பகுதியில் உச்ச கேந்திரமான கடக ராசியிலும் பிற்பகுதியில் லாப ஸ்தானத்திலும் வலுவுடன் காணப்படுவதால் தங்களின் ஆரோக்கியம் சிறந்து விளங்கும். குடும்பத்தில் பொருளாதாரம் பெருகும். கலைஞர்களுக்கு மிகவும் நல்ல நேரமாக திகழும். இம்மாதம் 17–ம் தேதி வரை வலுவாக உள்ள சூரியன், தந்தைக்கு நல்ல ஆரோக்கியத்தையும், தங்களுக்கு நல்ல லாபத்தையும் கொடுக்கும். 7–ம் தேதிக்குப் பிறகு கடகத்தில் உள்ள சுக்கிரனோடு சேரும் புதன் பகவான் தாங்கள் பார்க்கும் வேலை, தொழில், வியாபாரத்தில் மிகுந்த யோகத்தையும், ஏற்றத்தையும் தருவார்.

குருவின் அதிசார பார்வை மிதுனம், சிம்மம், மற்றும் தங்கள் ராசியின் மீதும் பதிவதால், தங்களின் தேக ஆரோக்கியம் சிறக்கும். ஹோட்டல், பேக்கரி, கேட்டரிங் தொழில் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதி முன்னேற்றத்தையும் லாபத்தையும் கொடுக்கும். பணவரவிற்கு குறைவிருக்காது. சினிமாத் துறை, சின்னத்திரையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். தாயார் உடல்நிலையிலும், தங்களின் வலது கண் விஷயத்திலும் சற்று கவனம் தேவை. கண்டிப்பும் கறாருமாகப் பேசுவதைத் தவிர்த்தால் குடும்பத்திலும், பண விஷயத்திலும் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். குழந்தைகள் மற்றும் தாயார் உடல் நலனில் கவனம் தேவை.

சிலருக்கு நெடுநாள்களாகக் காத்திருந்த பண உதவி விஷயமாக அரசாங்கத்தில் இருந்து நல்ல தகவல் வரும்.அரசியலில் உள்ள இந்த ராசியினருக்கு திடீர் அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது. கணவன் மனைவி உறவில் சந்தோஷம் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டமான நாட்கள் – 3,4,9,10,11,13,18,19,23,25,27,29

சந்திராஷ்டமம் – 6.7.2021 முதல் 8.7.2021 வரை

வணங்க வேண்டியதெய்வம் –லட்சுமி நரசிம்மன், ஐயப்பன்

விருச்சிகம்

(விசாகம் 4 ம் பாதம், அனுஷம், கேட்டை)

மாதத்தின் பிற்பகுதியில் அதிசார குருவின் பார்வை 10–ம் இடத்தில் உள்ள செவ்வாய்க்கு விழுவதால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நலமுடன் காணப்படுவீர்கள். வேலை சார்ந்த விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும்.கட்டடத் தொழிலாளி, கான்ட்ராக்டர் போன்றோருக்கு புதிய வேலை வாய்ப்பு ஏற்பட்டு, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். வீடு, மனை, அப்பார்ட்மென்ட் வாங்க வேண்டும் என்று நெடுநாளைய கனவில் இருந்தவர்கள் தற்போது அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். ஆராய்ச்சி சார்ந்த படிப்புத்துறை இருப்பவர்களுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும்.

அதிசார குருவின் பார்வை 8, 10, 12–ம் ஸ்தானத்திற்கு விழுவதால் அலுவலகத்தில் வேலை சம்பந்தமாக ஏற்பட்ட அவமானம் ஓரளவு குறையும் அல்லது மறையும். சிலருக்கு இம்மாதம் 20–ம் தேதிக்குப் பிறகு புதிய வேலைக்கான வாய்ப்புகள் உருவாகலாம். தந்தையின் உடல்நலனில் கவனம் தேவை. இரண்டாம் ஸ்தானத்தை மகரத்தில் இருந்து வக்ர சனி பார்வையிடுவதால் பேச்சுவார்த்தையிலும், சாப்பிடும் உணவிலும் கவனம் தேவை. லக்கினத்தில் கேது, 7–ல் ராகு பகவான் இருப்பதாலும், ராசியாதிபதி செவ்வாய் ஜூலை 20 வரை வலுவிழந்து காணப்படுவதாலும் உடல் நலனில் சற்று கவனம் தேவை. மகரத்தில் உள்ள வக்ர சனி பகவான் தங்கள் ராசியின் தன ஸ்தானத்தை பார்வை இடுவதால், செலவுகள் அதிகரித்தாலும், அதிசார குருவின் பார்வையை 10, 12 –ம் இடங்கள் பெறுவதால் பணவரவு அதிகமாகி விரயங்கள் குறையும்.

இன்னும் சில மாதங்கள் அநாவசிய பேச்சுக்களை தவிர்த்தால் வீண் பிரச்னையிலிருந்து தப்பிக்கலாம். ஏற்றுமதி வியாபாரிகள் மிகுந்த லாபத்தை அடைவார்கள். எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ் தொழிலில் உள்ளவர்களுக்கு மாதப் பிற்பகுதியில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பெண் குழந்தைகள் அதிர்ஷ்டத்தை பெறுவார்கள்.

அதிர்ஷ்டமான நாட்கள் – 5,6,7,12,13,14,15,16,17,22,23,24,25,26,27,29,30

சந்திராஷ்டமம் – 8.7.2021 முதல் 10.7.2021 வரை

வணங்க வேண்டிய தெய்வம் –சனீஸ்வர பகவான், தக்ஷிணாமூர்த்தி



தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்)

தங்கள் ராசியின் 5–ம் அதிபதி செவ்வாய் மாதத்தின் பிற்பகுதியில் 9–ம் ஸ்தானத்தில் வலுப்பெறுவதால் தந்தை வாயிலாகவும், குழந்தைகள் வாயிலாகவும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். வீட்டிலேயே குலதெய்வ வழிபாடு செய்யவும். ராசியாதிபதி குரு பகவான் தைரிய ஸ்தானமான கும்பத்தில் அதிசாரமாக நிற்பதாலும், தன ஸ்தானாதிபதி சனீஸ்வர பகவான் மகரத்தில் வக்ரமாக நின்று உங்கள் ராசியைப் பார்ப்பதாலும் பண வரவில் சிறு தடங்கல் ஏற்பட்டு பின்பு சரியாகலாம். அரசாங்க வழியில் இருந்த தடைகள் மாதத்தின் பிற்பகுதியில் விலகும். பேச்சில், உணவில் கவனம் தேவை.

அதிசார குரு தனது 9–ம் பார்வையால் லாப ஸ்தானத்தைப் பார்ப்பதாலும், ஜூலை 17–க்கு பிறகு லாப ஸ்தானாதிபதி சுக்கிரனையும் லாப ஸ்தானத்தையும் அதிசார குரு தனது 9,11–ம் பார்வையால் பார்வையிடுவதாலும், தாங்கள் எதிர்பார்த்த பணவரவு ஏற்படும். மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து மூன்றாவது வாரம் வரை வியாபாரம் செழிக்கும். இந்த கோவிட் சமயத்தில் ஏதேனும் வேலை கிடைத்தால் போதும் என்று நினைத்தவர்களுக்கு தங்களின் விடாமுயற்சியின் பேரில் ஆன்லைனில் ஏதேனும் ஒரு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வீடு கட்டுவதை பாதியில் நிறுத்தியவர்கள் மாதத்தின் பிற்பகுதியில் அதனை மறுபடி கட்டத் தொடங்கலாம்.

ஏழரைச் சனியினால் ஏற்பட்ட பெரும்பான்மையான கஷ்டங்களை கடந்து வந்திருப்பீர்கள். பல், ஈறு சம்பந்தப்பட்ட விஷங்களில் கவனம் தேவை. மென்பொருள் துறையில் வேலை பார்ப்பவர்கள் இடமாற்றம் பெற இன்னும் சிறிது காலம் பொறுத்திருங்கள். மாணவர்கள் கண்களுக்கு ஓய்வு கொடுங்கள். மாதத்தின் பிற்பகுதி வரை உங்கள் முதுகுக்குப் பின்னால் பேசுபவர்களிடம் கவனமாக இருங்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை.

அதிர்ஷ்டமான நாட்கள்– 5,6,7,20,21,23, 25,27,28,30,31

சந்திராஷ்டமம் – 10.7.2021 முதல் 13.7.2021 வரை கவனம் தேவை.

வணங்க வேண்டிய தெய்வம்–புவனேஸ்வரி அம்மன், மஹாலக்ஷ்மி



மகரம்

(உத்திராடம் 2,3,4–ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2–ம் பாதம்)

தங்கள் பாக்கிய ஸ்தானாதிபதி புதன் பகவான் வலுவுடன் அமர்ந்திருப்பதால் தங்கள் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் யாரும் தடுக்க முடியாது. கௌரவமாக நடத்தப்படுவீர்கள். 7–ம் தேதிக்குப் பிறகு அதிசார குருவின் பார்வை 6–ம் இடத்திற்கு விழுவதால் தாய் மாமனுடன் நல்லுறவு நீடிக்கும். கடன்களால் பிரச்னைகள் இருக்காது. ஒரு சில கடன்கள் தீரும். நோய்கள் நீங்கும்.

ஜன்மச் சனி நடக்கிறது என்று கவலை கொள்ளவேண்டாம். அதிசார குருவின் 8,10–ம் இட பார்வையால் எல்லா பிரச்னைகளும் நீங்கி தொழில் வளம் சிறந்து மேலோங்கி வருவீர்கள். வேலைப்பளுவினால் மன அழுத்தத்தில் இருந்தாலும் அதிசார குருவின் 10 –ம் இடப்பார்வை அதனைச் சரிசெய்துவிடும். தங்களின், மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாதத்தின் பிற்பகுதியில் தாயின் உடல்நலம் மேம்படும். வாழ்க்கைத்துணையிடமிருந்து சாதகமான பதிலோ உதவியோ இம்மாதம் 5, 12 ,18, 19 தேதிகளில் கிடைக்கும். ஐ.டி. துறை, சினிமாத் துறையில் உள்ளவர்களுக்கு தாங்கள் எதிர்பார்த்த புதிய வாய்ப்புகள் கிடைக்கும் செலவு செய்யும் விஷயத்தில் சிக்கனமாக இருப்பது நல்லது.

தொழிலில் சிறிது தொய்வு இருப்பினும் ,இதர வருமானங்களால் அதனை சமாளித்து விடுவீர்கள். மீடியாவில் உள்ளவர்களுக்கு புதியதொரு வாய்ப்பு உருவாகும். 20–ம் தேதிக்குப் பிறகு பெற்றோரிடமிருந்து நீங்கள் நினைத்த உதவி கிடைக்கும். வேலையிலோ தொழிலிலோ சிலரால் இடைஞ்சல்கள், தடங்கல்கள் வந்தாலும், அதிசார குருவின் பார்வையினால் அதையெல்லாம் சமாளித்து வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். இந்த ராசியினரின் விடாமுயற்சியினால் ஆன்லைன் வேலையோ நிரந்தரமான வேலையோ நிச்சயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. முயற்சியைக் கை விடாதீர்கள்.

அதிர்ஷ்டமான நாட்கள் – 2,4,5,7,8,10,12,,16, 18,19,20,22,24,26,28,29,30

சந்திராஷ்டமம் – 13.7.2021 முதல் 15.7.2021 வரை

வணங்க வேண்டிய தெய்வம் – பராசக்தி,சிவன்.



(அவிட்டம் 3,4–ம் பாதம், சதயம், புரட்டாதி 1,2,3–ம் பாதம்)

தங்கள் பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி புதன் 5–ம் இடத்தில் மிகவும் வலுவுடன் காணப்படுவதால் தாங்கள் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும். அதிசார குருவின் பார்வை 5, 7, 9–ம் இடத்திற்குக் கிடைப்பதால், குழந்தைகள் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும். மனைவி குழந்தைகள் ஆரோக்கியத்துடன் திகழ்வார்கள். தங்களின் ராசியாதிபதி சனி பகவான் விரய ஸ்தானத்தில் வக்ரமாக நின்று லாப ஸ்தானத்தை பார்வையிடுவதால் அதிகமான செலவுகள் ஏற்பட்டாலும் 2,11–ம் அதிபதி குரு பகவான் அதிசாரமாக உங்கள் ஜன்ம ராசியில் நின்று தன் பார்வையால் வருமானத்தை அதிகப்படுத்துவதால் செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். பேச்சில் கவனம் தேவை உடல் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளுங்கள். அனாவசியமாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. வீடு, கடை வாடகை வசூலாகும். டிராவல்ஸ் வைத்திருப்பவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

ஃபேஷன் ஜுவல்லரி, ஜவுளிக்கடை, அழகுச் சாதன பொருள்கள் வகையில் பணலாபம் அதிகரிக் கும். இம்மாதப் பிற்பகுதியில் அரசாங்கத்திடம் இருந்து ஒரு நல்ல செய்தி வந்து சேரும். 17–ம் தேதிக்கு பிறகு வீட்டு தரகருக்கு பணவரவு ஏற்படும். 20–ம் தேதி வரை தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அதன் பிறகு நல்ல முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டில் இருப்பவர்களுக்கு உடல்நலம் ரீதியாகவும், பணம் ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் சில அசௌகரியங்கள் நடந்தாலும், சில நாள்களிலேயே சரியாகிவிடும். குடும்பத்திலோ, மூத்த உடன்பிறப்புகளுடனோ அநாவசிய விவாதங்களைத் தவிர்த்தால் குடும்பத்தில் நிம்மதி நிலவும். வழக்கறிஞர்கள், வட்டித் தொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலில் கவனமுடன் இருப்பது நல்லது.

அதிர்ஷ்டமான நாட்கள் – 2,4,5,7,9,11,12,21, 24,25,28,29,30

சந்திராஷ்டமம் – 15 .7.2021 முதல் 17.7.2021 வரை

வணங்க வேண்டிய தெய்வம் – ஷீரடி சாய்பாபா, பார்வதி தேவி



(பூரட்டாதி 4 – ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

தங்கள் ராசியாதிபதியும், பத்தாம் அதிபதியுமான குரு பகவான், அதிசாரமாக விரய ஸ்தானத்தில் நின்றாலும், அதிசார குருவின் பார்வை 4,6,8–ம் பாவங்களில் பதிவதால் தங்கள் குடும்பம் செழிப்புடன் காணப்படும். தாங்கள் ஆரோக்கியமுடன் காணப்படுவீர்கள் கடன்களை அடைக்க வழி ஏற்படும் .கடன்கள் கட்டுக்குள் இருக்கும். வேலையில் இருந்த அசௌகரியங்கள் குறைய ஆரம்பிக்கும். நீங்கள் மிகவும் தைரியமான நபர். துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் எல்லா விஷயங்களையும் செய்து வெற்றி பெறுவீர்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பத்திரிகைத் துறை, பிரஸ் முதலியவற்றில் சிலருக்கு வேலை கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். எவ்வளவுதான் செலவுகள் ஏற்பட்டாலும் தங்களின் சாமர்த்தியத்தாலும், திடீர் பணவரவினாலும் சமாளித்து விடுவீர்கள். உடல் நலனில் சற்று கவனம் தேவை. குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும்.

வீட்டு வாடகை வசூல் ஆகும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும் வட்டித் தொழில் செய்ப வர்களுக்கு பணவரவு அதிகரிக்கும். மாதத்தின் பிற்பகுதியில் குழந்தைகள் ஆரோக்கியம் அதிகரிக்கும். இந்த ராசிக்காரர்கள் தற்போது பங்குச் சந்தையில் முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. வேலை பார்க்கும் இடத்தில் யாருக்காகவும் முன்ஜாமீன் போடுவதைத் தவிர்ப்பது நல்லது.

இம்மாதம் 20–ம் தேதி வரை பணப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், அதன் பின் பணவரவு அதிகரிக்கும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கவும். மாதத்தின் முற்பகுதியில் குழந்தைகள் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். மாதத்தின் பிற்பகுதி ஏற்றம் தரும். புதிதாக அறிமுகமாகும் அந்நிய நபரை நம்பி ஏமாற வேண்டாம்.

அதிர்ஷ்டமான நாட்கள் – 1,2,3,4,5,6,7,12,15,, 22,23,24,25,27,29,30

சந்திராஷ்டமம். – 17.7.2021 முதல் 19.7.2021 வரை கவனமும் பொறுமையும் தேவை.


வணங்க வேண்டிய தெய்வம் –கருமாரியம்மன், வேங்கடாசலபதி

படக்கதை

கதை: **புவனா தியாகராஜன்** படங்கள்: **ரமணன்**

கண்ணன் காட்டிய நல்வழி!




ஆனாலும், தற்கொலை ஒரு பாவகரமான செயல் என்பதால், தற்கொலை செய்து கொள்வதற்காக தந்தை ஸ்ரீகிருஷ்ணரின் அனுமதியைக் கேட்கச் சென்றான்.
அன்பு மகனின் மனநிலையை நன்கு உணர்ந்த கிருஷ்ணர், அவனை சமாதானப்படுத்தியதுடன், 'பாவச் செயலில் ஈடுபடுவதைக் காட்டிலும் இறைவனை தியானிப்பதில் ஈடுபடுத்தினால் முனிவரின் சாபம் நீங்கி இன்பம் உண்டாகும்' என்று கூறினார்
அவரே தொடர்ந்து, 'கண்கண்ட தெய்வம் என்ற புகழுக்கு உரிய சூரியபகவானை வழிபட்டால், தொழுநோயால் மங்கிவிட்ட உன் உடல், நோய் நீங்கி பிரகாசமான ஒளி பெறும். எனவே, மனம் தளராமல் நம்பிக்கையுடன் சூரியனை தியானித்து வா' என்றார்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை அல்லவா? எனவே, கிருஷ்ணர் கூறியபடியே சாம்பன் சூரியதேவனை தியானித்து கடும் தவத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டான்


சாம்பனின் தவத்துக்கு இரங்கிய சூரியபகவான், அவன் முன் தோன்றி, 'சாம்பனே, உன் தவத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். என்னுடைய ஆயிரம் திருநாமங்களை பக்திபூர்வமாக உச்சரித்த நீ, உன்னைப் பீடித்திருக்கும் தொழுநோயிலிருந்து விடுபட்டு முன்பை விடவும் அதிக அழகுடன் விளங்குவாய்' என்று வரம் கொடுத்தார்.
தன்னுடைய அருளால் தொழுநோய் நீங்கப் பெற்று தன்னைப் பலவாறாகப் போற்றித் துதித்த சாம்பனிடம் மேலும் கருணை கொண்ட சூரிய பகவான், 'இன்னும் ஏதேனும் ஒரு வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள் சாம்பா' என்று கூறினார்.
கண்கண்ட தெய்வமாக விளங்கி இந்த உலகை இயங்கச் செய்பவரே! என்றும் தங்களிடம் மாறாத பக்தி இருக்கவேண்டும். தங்களை காலையிலும் மாலையிலும் தவறாமல் வழிபடுபவர் களுக்கு தங்களின் அருள் பூரணமாகக் கிடைக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தான்.
அப்படியே வரம் கொடுத்த சூரியபகவானுக்கு, தான் தவமிருந்த சந்திரபாகா கடற்கரையில் சூரிய தேவனுக்கு ஓர் ஆலயம் எழுப்பியதுடன், அங்கே சூரியதேவனின் திருவுருவத் தையும் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தான். அந்த ஆலயமே கோனார்க் சூரியதேவன் ஆலயமாகும்.



Godrej interio®
N.MAHALINGAM & COMPANY
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand Coimbatore - 641 018.
Email : homeappliances@nmanco.com, godrej@nmandco.com
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811, Mob : +91 98438 40000



சிலைகள் உளியை வெறுப்பதில்லை

விட்டில்கள் வெளிச்சத்தைத் தேடி வரும்
விடிந்ததும் எல்லாம் ஓடிவிடும்
விட்டிலாய் என்னையும் நினைக்காதீர் - அந்தப்
பட்டியலில் என்னையும் சேர்க்காதீர்

முடிவில்லா உலகம் இனிப்பதில்லை
பிரிவில்லா உறவு நிலைப்பதில்லை
உறையினுள் வாள் இருப்பதனால்
உணர்வுகள் இல்லையென அர்த்தமில்லை

காலம் வரும்வரை காத்திருங்கள்
ஞாலம் போற்றும் பார்த்திருங்கள் - உறவுப்
பாலம் என்றும் நிலைத்திடவே
நாளும் இறைவனைப் போற்றிடுங்கள்

கனிவாய் பேசிய வார்த்தையெல்லாம்
மலிவாய் வாங்கிய வார்த்தையில்லை
பனியாய் இங்கு உறைந்ததனால்
பாசம் இல்லையென அர்த்தமில்லை

விழிகள் இமையை மறப்பதில்லை
சிலைகள் உளியை வெறுப்பதில்லை
உளியாய் உங்களை நினைக்கின்றேன்
சிலைநான் உங்களைப் பணிகின்றேன்

மெழுகாய் நீங்கள் இருப்பதனால்
திரியாய் நானும் எரிகின்றேன்
மழையாய் கண்ணீர் வடித்ததனால் - இந்த
மடலால் அணைக்க வருகின்றேன்

-ஸ்ரீராம் ரெட்டி, பெங்களூரு
(ஓம் சக்தி வாசகர்)



தாய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
MILK
SUPREME
SELECT
SPECIAL
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

நித்யா

உயரிய தத்துவங்களை எளிய மக்களிடையே கொண்டு சேர்த்தவர்!

பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த சுவாமிகள்



ஒவ்வோர் உயிரின் இறுதி இலக்கு வீடுபேறுதான். வீடுபேறு அடையத் தேவை ஞானம். ஞானம் பெறத் தேவை நல்ல குரு. அந்த குருவின் உயர்வைப் பற்றி நம்முடைய சாஸ்திரங்கள் பலவாறாகச் சொல்லியிருக்கின்றன. ஒவ்வொரு விதமான பயிற்சிக்கும் ஒரு குரு இருப்பார். அந்த குருவை நாம் நம் வாழ்க்கையில் அடையாளம் கண்டுகொண்டிருக்கிறோம். இதற்குச் சிறப்புப் பயிற்சி தேவையில்லை. சிறப்புக் கண்கள் தேவையில்லை. ஆனால், சாஸ்திரங்கள் சொல்லக்கூடிய 'குரு' என்ற வார்த்தையின் பொருள் வேறு விதமானது. சாஸ்திர நூல்கள் பெருக்கெடுத்து ஓடி கடலில் சங்கமிக்கும் ஆற்றைப் போன்றது. அந்த ஆற்றில் நாம் குளிக்க உதவும் படித்துறையைப் போன்றவர்தான் குரு.

ஒரு செல்வந்தர். அவருடைய மனைவிக்கு குழந்தைகளுடன் சுற்றுப்பயணம் செல்ல ஆசை. ஆனால், அந்த செல்வந்தருக்கு அதற்கான கால அவகாசம் இல்லை. அதனால், பெரும் பொருள் செலவு செய்து மனைவி, குழந்தைகளை கப்பலில் அனுப்பி வைக்கிறார். சில நாள்கள் சென்றதும் பணியாள் ஒருவன் ஓடி வருகிறான். 'ஐயா, தெரியுமா சேதி?' என்று கேட்கிறான். செல்வந்தர், 'என்ன?' என்று கேட்கிறார். அதற்கு அந்தப் பணியாள், 'ஐயா, நீங்கள் உங்கள் மனைவி, குழந்தைகள் அனைவரையும் இழந்துவிட்டீர்கள்' என்றான். அதைக் கேட்ட செல்வந்தர், 'அதனால் என்ன?' என்று கேட்கிறார். இந்தக் கேள்வி அவருடைய பக்குவ நிலையைக் காட்டுகிறது. அவருடைய 'என்ன' என்ற முதல் கேள்விக்கும், 'அதனால் என்ன' என்ற இரண்டாவது கேள்விக்கும் இடைப்பட்ட நேரம்தான் அவர் தன் மனதை பக்குவப்படுத்திக்கொள்ள எடுத்துக்கொண்ட நேரம். ஆனால், இந்த பக்குவ நிலை எல்லோருக்கும் வாய்க்காது. அப்படி ஒரு பக்குவ நிலை நமக்கு வாய்க்க நல்ல ஒரு குரு தேவை. மனிதன் பிறக்கிறான்; வாழ்கிறான்; எல்லாவற்றையும் தான் சாதித்துவிட்டதாக நினைக்கிறான்.

ஒரு கட்டத்தில் துன்பங்கள் அவனைச் சூழும்போது அவனுக்கு ஒரு சலிப்பு வருகிறது. அப்போதுதான் தான் யார், தன்னுடைய தகுதி என்ன என்கிற விஷயங்கள் அவனுக்குத் தெரிய வருகிறது. அந்த நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றி கரை சேர்க்கும் படகு போன்றவர் தான் குரு. இதே நிலைதான் அர்ஜுனனுக்கும் ஏற்பட்டது. மிகச் சிறந்த வில்லாளியான அவன், யுத்தகளத்தில் ஆசார்யர்களையும் பெரியோர்களையும் பார்த்தபோது துவண்டுவிடுகிறான். அப்போது அவனுடைய கலக்கத்தைப் போக்கியவர் கிருஷ்ண பரமாத்மா. அதே நிலைமையில் தான் நாம் எல்லோரும் இருக்கிறோம். அப்படிப்பட்ட சவால்களை நாம் எதிர்கொள்ளும்போது நமக்கு குரு ஒருவர் வாய்த்துவிட்டால் அதைவிட வேறு பெரிய பாக்கியம் எதுவுமில்லை. அப்படிப்பட்ட பாக்கியம் செய்தவர்கள்தான் நாம். அதனால்தான் அருட்பிரகாச வள்ளலார்,



பகவான் ரமணர், சுவாமி தயானந்த சரஸ்வதி, காஞ்சி மகான், ஓம்காராநந்த சுவாமிகள் போன்ற மகான்கள் நமக்கு ஞானம் போதிக்கும் குருமார்களாக வாய்த்திருக்கிறார்கள்.

தேனி வேதபுரீ ஸ்ரீசித்பவானந்த ஆஸ்ரமத்தின் பீடாதிபதியும் தர்ம ரட்சண சமிதியின் மாநிலத் தலைவருமான பூஜ்ய ஸ்ரீ ஓங்காராநந்த சுவாமிகள் ஆற்றிய இறைப்பணிகள் ஏராளம்.

சுவாமிகளின் பூர்வாஸ்ரமப் பெயர் மனோகரன் கோட்டீஸ்வர சர்மா. சிறுவயதுமுதலே வேதம் சொல்லும் வாழ்வியலைப் பின்பற்றி வந்தவர். திருப்பராய்த் துறை ஸ்ரீ ராமகிருஷ்ணா தபோவனத்தின் நிறுவனர் பூஜ்யஸ்ரீசுவாமி சித்பவானந்தரிடம் கல்வி பயின்று அவர் திருக்கரங் களால் ஸ்ரீ ஓங்காராநந்தா சுவாமிகள் என்னும் திருநாமம் பூண்டு சந்நியாச தீட்சையும் பெற்றுக்கொண்டார். பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான பூஜ்யஸ்ரீ சுவாமி பரமார்த்தானந்தாவிடம் வேதாந்தங் களைக் கற்றுத் தேர்ந்தார். இவரது சொற்பொழிவுகள் பகவத் கீதையையும் உபநிடதங்களையும் எளிய மக்களிடையேயும் கொண்டு சேர்த்தன. தமிழ் வேதங்கள் என்று போற்றத்தக்க தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்றவற்றின் பெருமைகளைக் காலமெல்லாம் எடுத்துரைத்தவர் சுவாமிகள். மேலும், திருக்குறள், தாயுமானவரின் பாடல்கள், பாரதியாரின் பாடல்கள் போன்றவை குறித்த சுவாமிகளின் விளக்கங்கள் மிகவும் அற்புதமானவை. வேதாந்த சாஸ்திர பிரசார அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சேவா சமிதி என்னும் அறக்கட்டளை களை ஏற்படுத்தி ஆன்மிக விழிப்புணர்வும் சமூக சேவையும் தொடர்ந்து நடந்திட வழி வகுத்தார். தேனியில் வேதபுரி என்ற பெயரில் ஸ்ரீ சுவாமி சித்பவானந்த ஆசிரமத்தை நிறுவினார். சென்னையிலும் 'சத்குரு சாந்தானந்த சத்சங்கம்' என்னும் அறக்கட்டளையை நிறுவி மக்கள் பணி செய்திடப் பணித்தார். வேதம், உபநிடதம், தமிழ்மறைகள், நீதி நூல்கள், பாரதியார் கவிதைகள் என அனைத் தையும் எளியோரும் அறியும் வண்ணம் பொருள்கூறிப் பல லட்சக்கணக்கான பக்தர்களை ஆன் மிக வழியில் நடத்தியவர். அந்த வகையில் பூஜ்யஸ்ரீ ஓம்காராநந்த சுவாமிகளின் வாழ்வும், வாக்கும், பணிகளும் நம்மைப் பெரிதும் பிரமிக்க வைக்கின்றன. ●


மரிய பெல்சின்

அஞ்சறை பெட்டி

அஞ்சறைப்பெட்டில இருந்து நாம தினமும் சாப்பிடுற பழம், காய்கறின்னு எல்லாத்துக்கும் மருத்துவக் குணம் இருக்குங்கற உண்மையை முதல்ல புரிஞ்சுக்கணும். முதல்ல நம்பிக்கை வைக்கணும், அதேநேரத்துல தொடர்ந்து செஞ்சிட்டு வந்தா நிச்சயமா பலன் கிடைக்கும்.

தொண்டைல புண் வந்தா என்ன செய்றதுனு தெரியாம பலபேர் தவியாத் தவிப்பாங்க. இதுக்கு மாசிக்காயை உடைச்சி பாக்கை வாயில ஒதுக்குற மாதிரி ஒதுக்குங்க. கொஞ்சம் கொஞ்சமா உமிழ்நீரோட கலந்து மாசிக்காய் சாற்றை விழுங்குங்க. மணத்தக்காளி கீரை இல்லன்னா மணத்தக்காளிப் பழத்தை வாய்ல போட்டு மென்னு சாறை விழுங்குனாலும் தொண்டைப்புண் சரியாகும். இந்த மாதிரி நேரங்கள்ல அகத்திக்கீரை சாப்பிடுறது ரொம்ப நல்லது. அகத்திக்கீரையை தொடர்ந்து சாப்பிடக்கூடாது. ஆனா, பிரச்சினை உள்ள நேரங்கள்ல ரெண்டு, மூணு நாள் மட்டும் தொடர்ந்து சாப்பிட்டு பிறகு 15 நாளைக்கு ஒருதடவை சாப்பிட்டா போதும்.

தொண்டைல புண் வந்தா எச்சிலை விழுங்க முடியாம ரொம்ப கஷ்டப்படுவாங்க. இந்த மாதிரி நேரங்கள்ல அன்னாசிப்பழத் துண்டை லேசாக கடிச்சி அதோட சாறை கொஞ்சம் கொஞ்சமா விழுங்கலாம். இல்லைன்னா அன்னாசிப்பழ ஜூஸை தொண்டைல வச்சிருந்து கொப்புளித்து துப்பலாம். சளி பிடிக்காம வேற காரணங்களால தொண்டைல புண் வந்தா தேங்காய்ப்பாலை தொண்டைல வச்சிருந்து மெதுவா விழுங்கலாம். சளி பிடிச்சி இருமுறதால தொண்டைல புண் வந்தா மணத்தக்காளி கீரை, அகத்திக்கீரை, தேங்காய்ப்பால் எல்லாம் சாப்பிடக்கூடாது. அதுக்கு வேற வைத்தியம் செய்யணும். வெதுவெதுப்பான தண்ணியில கல் உப்பு போட்டுக் கரைச்சி தொண்டைல படும்படி வச்சிருந்து துப்பலாம்.




லவங்கப்பட்டை, கிராம்பு இல்லன்னா ஏலக்காயை தண்ணில போட்டு கொதிக்க வச்சி தொண்டைல வச்சிருந்து வாய் கொப்புளிக்கலாம்; உள்ளுக்கும் எடுத்துக்கலாம். துளசி, தூதுவளை, கற்பூரவள்ளி இலைகளை தண்ணி விட்டு கொதிக்க வச்சி வெதுவெதுப்பான சூட்டுல தொண்டையை நனைக்கலாம். அதை அப்பிடியே விழுங்கலாம். இந்த மாதிரி செஞ்சிட்டு வந்தா தொண்டைப்புண் சரியாகும்.

அடுத்ததா வயித்துப்புண்ணால அவதிப்படுறவங்க தேங்காய்ப்பாலோட தேன் சேர்த்துக் குடிக்கலாம். அகத்திக்கீரைல பொரியல், கூட்டு செஞ்சி சாப்பிடலாம். அகத்திக்கீரைல சூப் செஞ்சும் குடிக்கலாம். மணத்தக்காளி கீரையை பருப்பு போட்டு மசித்துச் சாப்பிடலாம். மாசிக்காய் சாப்பிடலாம். கல்யாணப் பூசணிக்காய்ல ஜூஸ் செஞ்சி குடிக்கலாம். ரெண்டு வல்லாரை இலையை வாய்ல போட்டு மென்னு சாப்பிடலாம். புதினா இலையை

மென்னு சாப்பிடலாம். புதினா ஜூஸ் இல்லைன்னா புதினா துவையல் சாப்பிட்டாலும் வயித்துப்புண் சரியாகும்.



சிலபேருக்கு சிறுநீர் கழிக்கிற இடத்துல புண் வந்து ரொம்ப சிரமப்படுவாங்க. சாப்பாடு. சுற்றுச்சூழல், அலர்ஜி காரணமா இந்தப்புண் வந்திருக்கலாம். என்ன காரணமா இருந்தாலும் நன்னாரி வேரை தட்டிப் போட்டு கொதிக்க வச்சி சூடு ஆறுனதும் அதோட கொஞ்சம் எலுமிச்சைச்சாறு, தேன், சர்க்கரை சேர்த்துக் குடிச்சா எரிச்சல் அடங்குறதோட புண்ணும் ஆறும். மண்பானைல தண்ணி ஊத்தி நன்னாரி வேரோட வெட்டி வேரையும் சேர்த்து ஊற வச்சி குடிக்கலாம். நன்னாரி, வெட்டி வேர் ஊறுன தண்ணியோட கொஞ்சம் சப்ஜா விதையும் சர்க்கரையும் சேர்த்துக் குடிச்சா இதமா இருக்கும், தாகம் அடங்கும். நீர்க்கடுப்பு, எரிச்சல், புண் எல்லாம் ஆறிடும். அகர் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா. கடல்பாசியில ஒருவகை இது. பெரிய மளிகைக்கடைகள்ல கிடைக்கும். இல்லன்னா டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள்ல கிடைக்கும். அதை தண்ணியில ஊற வச்சி சர்க்கரை சேர்த்துக் குடிச்சா சிறுநீர் கழிக்கிற இடத்துல வரக்கூடிய எல்லாப் பிரச்சினைகளும் சரியாயிரும்.



கரும்புச்சாறோட இஞ்சிச்சாறு சேர்த்துக் குடிக்கலாம். அடிவயிறு, தொப்புள்ல விளக்கெண்ணெய் வைக்கலாம். காலைல குளிக்கும்போது தலைக்கு நல்லெண்ணெய் வச்சிக் குளிக்கலாம். நெல்லிக்காய் ஊறுன தண்ணி குடிச்சாலும் சிறுநீர் கழிக்கிற இடத்துல வரக்கூடிய பிரச்சினைகள் சரியாகும். நெருஞ்சிச் செடி இல்லைன்னா நெருஞ்சி முள்ளை தண்ணி விட்டு கொதிக்க வச்சிக் குடிச்சாலும் நீர்க்கடுப்பு சரியாகும். லவங்கப்பட்டை, ஏலக்காயை தண்ணி விட்டு கொதிக்க வச்சிக் குடிச்சாலும் சிறுநீர் கழிக்குற இடத்துல வரக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் சரியாயிரும்.

இதேமாதிரி ஆசன வாயில புண் வந்து சிலபேர் ரொம்ப அவதிப்படுவாங்க. இந்த மாதிரி பிரச்னைக்கு மாசிக்காயும், கடுக்காயும் போதும். மாசிக்காயை தண்ணி விட்டு உரசி புண் வந்த இடத்துல தடவிட்டு வந்தாலே சரியாயிரும். இல்லன்னா கடுக்காயை தட்டிப்போட்டு தண்ணி விட்டு கொதிக்க வச்சி சூடு ஆறுனதும் கழுவிட்டு வந்தா புண் ஆறிடும். அந்த இடத்துல தேன் தடவலாம். கத்தாழை ஜெல்லை தடவலாம்.

உருளைக்கிழங்கை மையா அரைச்சி புண்மேல பத்து போடலாம். மூல நோய் உள்ளவங்களுக்கு இந்தப் பிரச்னை வரலாம். அதனால காரம் அதிகமானதை சாப்பிடாம பழங்கள், பச்சைக்காய்கறிகள், கீரைகள்னு சாப்பாட்டுல அதிகமா சேர்த்துட்டு வந்தா ஆசனவாயில வரக்கூடிய பிரச்னைகள் எல்லாம் சரியாயிரும். அந்த இடத்துலன்னு இல்ல எந்த இடத்துல புண் வந்தாலும் கானாவாழைனு ஒரு மூலிகை இருக்கு, அதைப் பூசலாம். நீர்ச்செழிப்புள்ள இடங்கள்ல வளரக்கூடிய இந்த மூலிகையை தண்ணி விடாம அரைச்சி புண் உள்ள இடங்கள்ல பத்து போட்டுட்டு வந்தா எந்த மாதிரி புண்ணும் சரியாயிரும். படுக்கைப்புண்ணுக்கும், சர்க்கரை நோயாளிகளுக்கு வரக்கூடிய புண்ணுக்கும்கூட இந்த மூலிகையை அரைச்சிப் பூசலாம்.

வெட்டுக்காயப்பூண்டுன்னு ஒரு மூலிகை இருக்கு. இதுக்கு கிணத்துப்பாசான்னு வேற ஒரு பெயரும் இருக்கு. அடிபட்ட இடத்துல இந்த மூலிகையை கசக்கி சாறு பிழிஞ்சி விட்டா ரத்தம் வழியுறது நிக்கிறதோட புண் உண்டாகாமலும் பார்த்துக்கிடும்.

இதுமட்டுமில்ல இன்னும் நிறைய எளிமையான வழிகள் இருக்கு. தொடர்ந்து பார்ப்போம்.

●

ஓவியம்: பிரபா

சிறுகதை

வேதகிரி முதலியார் தபால் பார்த்து வருவதற்காக பஸ்ஸை எதிர்நோக்கிப் போகிறார். காலை வெயில் சுரீர் என்று அடிக்கிறது. வீதியில் ஒரு நிழல் இல்லை. இன்னும் கொஞ்ச நாழியில் தெரு மண் பழுக்கிற மாதிரி காய ஆரம்பித்துவிடும். இது ஒன்றும் கோடை இல்லை. என்றாலும் அப்படி ஒரு வெயில். தெருவில் ஒரு பக்கம் மட்டும் ஓர் ஆள் ஒண்டி நடக்கிற அகலத்துக்கு நிழல். சில உயரமான வீடுகளின் ஓரத்தில் கொஞ்சம் நின்று இன்னொருவரோடு பேசுவதற்கு ஏற்ற அகலமான நிழல். சில வீட்டின் முன்னால் எச்சில் இலை கிடக்கிறது. தெருவில் நடமாட்டமே இல்லை. பகலிலேயே இந்த அமைதி. தூரத்தில் செக்கு ஆடுகிற சத்தம் 'ஙொய்' யென்று ரீங்காரம் செய்தாலும் கிராமத்து



அமைதிக்கு அது சுருதியே தவிர பங்கம் இல்லை. அதே மாதிரி குடியானத் தெருவில் 'மாக்கு மாக்' கென்று நெல்லோ மாவோ இடிக்கிற சத்தம் பூமி அதிர்கிற மாதிரிக் கேட்கிறது. அதிலும் அமைதி கெடவில்லை.

எதிரே ஆள் வராவிட்டாலும் இந்த நிழலில் போட்டிக்கு ஒரு நாய் வருகிறது. சாதாரண கிராமத்து நாட்டு நாய்தான். ஊர் வழக்கப்படி அதைச் சொன்னால் இப்போதெல்லாம் சண்டைக்கு வந்துவிடுகிறார்கள். 'பறை, பள்ளு' என்கிற வார்த்தைகள் மனசால் கூடத் தீண்டப்படாததாக மாறிவிட்ட பிறகு நாயைக்கூட அப்படிப் பட்டம் கட்டி அழைக்க முடிவதில்லை. ஆனால், இது சரியான ஹரிஜனப் பகுதி நாய்தான். நிழலை மறித்துக்



டீக்கடை சாமியாரும் டிராக்டர் சாமியாரும்

ஜெயகாந்தன்

கொண்டு அது நிற்கிறது. அது நிச்சயம் வழிவிட்டு விலகாது. விலகப் போவதில்லை என்கிற தீர்மானம் அதன் திடீரென உயர்ந்த காதுகளிலும் ’உம்’ மென்று வயிற்றுக்குள் அடங்கி ஒலிக்கும் பொருமலிலும் தெரிகிறது. காரணம், நடுவில் இலை கிடப்பதுதான்.

அப்போதுதான் நினைத்தார் வேதகிரி முதலியார்: பொறப்படும் போதே அந்தக் கெழம் - அம்மாதான் - சொல்லிச்சு, ’குடையை எடுத்துக்கிட்டுப் போடா, வெயில் கொளுத்துது’ன்னு...

பட்டணத்திலிருந்து கிராமத்துக்கு வந்திருக்கும் இந்த மூன்று மாத காலமாக வேதகிரி முதலியார் வெளியே போவதற்குப் புறப்படுகிற போதெல்லாம் அவரது தாயார் செல்லத்தம்மாள் குடை எடுத்துச் செல்லுமாறும் வெயிலின் கொடுமை குறித்தும் ஒரு பாட்டுப் பாடாமலிருப்பதே இல்லை. சில சமயங்களில் அவளே கொண்டு வந்து அவரிடம் கொடுப்பாள். இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்பு திருக்கோவிலூருக்கு திருவிழாவுக்குப் போனபோது ஆறு ரூபாய்க்கு அந்தக் குடையை வாங்கினதையும், அதற்குப் பிறகு ஐந்து வருஷத்துக்கு முன்னால் ஒரு கம்பியும் புதிசாக மேலே வெள்ளைத் துணியும் போட்டுத் தைப்பதற்குத் தான் மூணு ரூபாய் செலவழித்ததையும் குறைந்தது ஒரு பத்து தடவையாவது இதுவரை சொல்லி இருப்பாள்.

சரி, நாய்க்கு பயந்து எத்தனை நாழி இப்படியே நிற்பது? ஒன்று இவர் வெயிலைப் பொருட்படுத்தாமல் ஒதுங்கிப் போக வேண்டும், அல்லது அதை விரட்டி விட்டு இவர் தன் வழியே தொடர்ந்து நடக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் இவர் நின்றிருந்தால் அதுவும் நின்றிருக்குமா என்ன? அதுவோ நாய், அதுவும் காய்ந்து வறண்ட சேரி நாய். எதிரே இலை, இவர் விரட்டமாட்டார், தயங்குகிறார், பயப்படுகிறார் - என்று தெரிந்ததும் அது இவரை விரட்டுகிற தோரணையில் கொஞ்சம் குரலெடுத்து லேசாகப் பற்களை வெளிக்காட்டி ’உர்’ரென்கிறது.

வேதகிரி முதலியாருக்கு நிஜமாகவே உதறல். மிகுந்த மரியாதையோடு பத்து அடி நிழலிலிருந்து விலகி வீதியின் நடுவே வெயிலில் வந்து அரைவட்டமாக ஒதுங்கி நாயைக் கடந்து மீண்டும் நிழலில் ஏறி நடந்தார். தான் நாய்க்கு பயந்து இப்படி வந்ததை யாரும் பார்த்திருப்பார்களோ என்று திரும்பிப் பார்த்தார். ம்ஹூம் யாருமில்லை. அந்த நாய்கூடப் பார்க்கவில்லை. பார்த்தால் என்ன? ’பட்டணத்துக்காரன் நாயைக் கண்டு பயப்படறான்’ என்று பரிகாசம் பண்ணுவார்களே என்கிற பயம் வேதகிரி முதலியாருக்கு.



அதிலும் அந்த சுப்பராம ஐயர் இருக்கிறாரே, சமயத்தில் அவர் பண்ணுகிற பரிகாசத்தில் முதலியாருக்குக் கோபம் கூட வந்துவிடுகிறது. கோபத்தைக் காட்டிக் கொண்டால் இன்னும் மானக்கேடாகப் போகும். அவரோடு சேர்ந்துகொண்டு முதலியாரின் தாயாரும் சிரிக்கிறாள். யோசித்துப் பார்த்தால் கிராமத்து மனிதர்கள் பார்த்துச் சிரிக்கிற மாதிரிதான் இருக்கிறது பட்டணத்துப் பழக்கங்கள் என்று முதலியாரின் மனசுக்குப் புரிகிறது. இருந்தாலும், பழக்கம் எளிதில் போகிறதா?

கிராமத்துக்கு வந்து இந்த மூன்று மாதமாக முதலியார் சட்டையே போடவில்லை. அவருடைய ’புஷ்’ ஷர்ட்டுகளும், ஸ்லாக்குகளும் கிராமத்துப் பெரிய மனிதர்கள் - கொஞ்சம் மரியாதையை எதிர்பார்க்கிற வயதுடையவர்கள் - போடுகிற பாஷனாக இல்லை. அதுமட்டுமில்லாமல் ஷர்ட் போட வேண்டிய அவசியமும் அவருக்கு இங்கே நேரவில்லை. காலையில் எழுந்து குளத்திலோ, கிணற்றடியிலோ குளிக்கிறபோது, இவர் பிரஷால் பல் விளக்குவதையே பக்கத்து வீட்டு வேலியோரமாய் நின்று குழந்தைகள் வேடிக்கை பார்க்கிறார்கள். அந்த ஒரு பழக்கத்தை மட்டும் இவரால் விட முடியவில்லை. ஒருநாள் பல்பொடி போட்டு விரலால் தேய்த்து ஏற்பட்ட கொப்புளம் ஆறித் தோல் உறிந்த வடு இப்போதும் தெரிகிறது. வெட்கக்கேட்டை எங்கே போய்ச் சொல்வது?

வந்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் பட்டணத்திலிருந்து அவர் வருகையைக் கோரி

வரும் தனது மகனின் கடிதத்துக்காகத்தான் தினசரி வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கிராமத்துக்கு வடக்கே உள்ள டிரங்க்ரோடு வரை நடந்து வந்து காத்திருக்கிறார் முதலியார். அங்கேதான் பஸ் வரும். ஒரு டீக்கடை இருக்கிறது. பெரிய திண்ணை. பஸ்ஸில் தபாலும் பத்திரிகையும் வரும். நாள்தோறும் முதலியாருக்கு ஆங்கில தினசரியும் மகனிடமிருந்து ஒரு கடிதமும் வரும்.

அவருக்கு தினசரி கடிதம் வருவதை டீக்கடைச் சாமியாரும், தபால் ரங்கசாமியும் கேலியாகப் புகழ்வார்கள். நல்லவேளை, கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்படுவதால் இவர் இங்கே வந்து சிக்கிக் கொண்டிருப்பதற்கான ரகசியம் இன்றுவரை அவர்கள் அறியாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இன்னொருவருக்கு வருகிற கடிதமாயிற்றே அதை நாம் படிக்கலாகாது, 'என்ன எழுதியிருக்கிறது கடிதத்தில்?' என்று அநாவசியமாக துளைக்கக் கூடாது என்கிற 'பட்டணத்து மிதப்பு' எல்லாம் இவர்களுக்குத் தெரியாது.

ஒவ்வொரு நாளும் ஏதாவது கற்பனையான சமாசாரங்களைக் கடிதத்திலிருந்து 'மொழி பெயர்த்து' அவர்களை ஏமாற்றுவதற்குள் முதலியாருக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

அவரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். 'ஒண்ணும் முக்கியமான சமாசாரம் இல்லீங்க. நான் வரும்போது பையன்கிட்டே சொல்லிட்டு வந்தேன், தினம் எனக்கு ஒரு கடுதாசி எழுதிப் போட்டுக்கிட்டு இருன்னு. அதான் வேற ஒண்ணும் இல்லீங்க."

ஆனால், அவர்கள் இவரை அவ்வளவு சுளுவில் விடுவதில்லை. "இருக்கட்டும் முதலியாரே – முக்கியமான விஷயமா இருந்துதான் தெரிஞ்சி நாங்க என்ன செய்யப் போகிறோம். என்னதான் எழுதி இருக்குதுன்னு சொல்லுங்க."



அதிலும் டீக்கடைச் சாமியார் இருக்கிறாரே – அவர் தான் மட்டுமில்லாமல் போகிற வருகிற ஆள்களையெல்லாம் கூப்பிட்டுக் கூட்டமும் சேர்த்துக் கொள்ளுவார். சாமியார் தஞ்சாவூர்ப் பக்கம். அவர் பேசுவதே பரிகாசம் போல் இருக்கும். "ஏலே, நின்னு கேட்டுட்டுப் போலே... பட்டணத்துச் சமாசாரம்... நீங்க படிங்க மொதலியாரே... அவுங்க அப்படித்தான்... பேசிக்கிறதே இங்கிலீசுதான்... ஏங்க – தம்பி பி.ஏ. வா? எம்.ஏ. வா?"

அப்போது மட்டும் வேதகிரி முதலியாருக்கு ஏகப் பெருமையா இருக்கும்.

"பி.ஏ.!" என்பார்.

சாமியார் குரலை அடக்கிக் கேட்பார்:

"மொதலியாரே எது பெரிசு? எம்.ஏ. வா? பி.ஏ. வா?"

"பெரிசு என்ன, பெரிசு! எல்லாம் ஒரு கழுதைதான். வேலை கெடச்சா மதிப்பு, இந்த படிப்புக்கு... நான் அந்தக் காலத்து இன்டர்தான். இப்ப பி.ஏ. படிச்சுட்டு எத்தினி பேர் நம்மகிட்ட கிளார்க்காயிருக்கான்! அதுகூடக் கிடைக்காமல் பாவம், எத்தினி புள்ளைங்க கண்டக்டர் வேலை செய்யுதுங்க..." என்பார் முதலியார்.

"மொதலியாருக்குப் பட்டணத்திலே என்னாங்க உத்தியோகம்?"

"ஒரு வெள்ளைக்கார கம்பெனியிலே மானேஜர் உத்தியோகம்."

"இப்பவும் வெள்ளைக்காரங்க இருக்கிறாங்களா?"

"கம்பெனிங்க இருக்குது."

"என்னா சம்பளங்க?"

இதெல்லாம் கேட்பது நாகரிகக் குறைச்சல் என்று அவர்களுக்குத் தெரியாது. டீக்கடைச் சாமியாருக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது.

"எல்லாம் சேத்து ஆயிரத்து இருநூறு ரூபா..."

ஆனால், அவர்கள் இவரை அவ்வளவு சுளுவில் விடுவதில்லை. "இருக்கட்டும் முதலியாரே – முக்கியமான விஷயமா இருந்துதான் தெரிஞ்சி நாங்க என்ன செய்யப் போகிறோம். என்னதான் எழுதி இருக்குதுன்னு சொல்லுங்க.

"அடி சக்கைன்னானாம்" என்று சாமியார் நாக்கைக் கடித்துத் துள்ளிக் குதிப்பார். அதன் பிறகு, முதலியார் இல்லாத சமயத்திலும் மற்றவர்களிடமும் பெருமையாகச் சொல்லுவார்: "இங்க வந்து நம்ம கடைத் திண்ணையிலே உக்காந்து டீ குடிச்சிட்டு பேப்பர் படிச்சிக்கிட்டு இருந்தாரே, மொதலியாரு... சாதாரண ஆளுன்னு நெனச்சிக்காதே; பட்டணத்திலே பெரிய ஆபிசரு. பங்களா என்னா, காரு என்னா... பையன்களும் அதே மாதிரிப் பெரிய பெரிய படிப்புப் படிச்சவங்க. வீடே வெள்ளைக்காரங்க பாஷன்லேதான். சும்மா – சொந்த கிராமங்கிற பாசம் – இப்படி வந்து சொக்காக்கூட போட்டுக்காம நம்ம டீக்கடையிலே உக்காந்து இருக்கறதிலே ஒரு சந்தோஷம் மொதலியாருக்கு. அவருக்கு எம்மாம் சம்பளம் தெரியுமா? சொல்லேன் பாப்பம்" என்று தாடியை நிமிண்டிக் கொள்வார்.

"ஐந்நூறு ரூபா இருக்குங்குளா – சாமி?" என்று பெருந்தொகையாகக் கேட்பான் ஒருவன்.

சாமியார் 'ஓ'வென்று சிரித்து அவனை முட்டாளாக்குவார்! "அடபோடா, அறிவு கெட்ட இவனே... ஆயிரம் ரூபாடா... ஆயிரம் ரூபா மாசம் மாசம் – கால் காணி நெலம் வாங்கலாம். என்னலே, வாயைப் பொளக்கறே; ஆயிர ரூபா பார்த்திருக்கியா, நீ? கலப்பெதான் பாத்திருப்பே. கலப்பே!" என்று சம்பந்தமில்லாமல் யாரையாவது சாக்கு வைத்துத் தன்னைத்தானே திட்டிக் கொள்வார் சாமியார்.

"உத்தியோகத்துக்கும் சம்பாதனைக்கும் தான் சாமியார் கிட்டேகூட மதிப்புபோல இருக்கு" என்பார் முதலியார்.

"பின்ன என்னங்க? இந்த சாமியார் பொழப்பு ஒரு பொழப்பா? உத்தியோகம் சம்பாதனை எதுவுமில்லாததாலேதான் ஊருக்குக் கெவுருவமா இந்த தாடி, நம்ம மூஞ்சியெக் காப்பாத்துது. தாடி வெச்சவனுக்கு உங்க பட்டணக் கரையிலே பிச்சைக்காரன்னு பேரு. இங்கே சாமியாருன்னு பேரு. வவுறுன்னு ஒண்ணு இருக்குதுங்குளே. சாமியார்னு பேரு வெச்சிக்கினு காட்டுக்கா பூட்டோம்? நமக்கும் அஸ்கா போட்ட டீ வேணும்னுதே! டீ சாப்பிடுங்க" என்று பேசிக்கொண்டே கண்ணாடி கிளாஸ்களில் டீயை ஊற்றி எல்லோருக்கும் தந்து – முதலியாருக்கு மட்டும் 'தகதக'வென்று விளக்கிய வட்டா செட்டில் டீ கொண்டு வந்து வைப்பார்.

"ஆமா, மொதலியாரே, ஆயிரமும் இரண்டாயிரமுமா சம்பாதிச்சுக்கிட்டு மகன் நீங்க இருக்கிறீங்க... வயசான காலத்திலே உங்கள் தாயார் மட்டும் ஏன் இங்கே கெடந்து அவதிப்படணும்? இப்ப பாத்துக்கற சுப்பராம ஐயரு – அப்ப மட்டும் வெவசாயத்தைப் பாத்துக்க மாட்டாரா?" – இதுமாதிரி சில நாள்களுக்கு முன் சாமியார் ஏதோ சொல்லும் போது பக்கத்தில் நின்றிருந்த சுப்பராம ஐயர் திடீர் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"ஓய் சாமியாரே! நான் மட்டும் எவ்வளவு நாளைக்கு ஐயா காட்டையும் மேட்டையும் கட்டிண்டு நிப்பேன். என் பையன், அவளையும் அழைச்சுண்டு டில்லிக்கே வந்துடச் சொல்லி ஒவ்வொரு தடவையும் எழுதறான். நம்ப கோரை வாய்க்கால் கரை நஞ்சைக்கும் – நல்லாந்தோப்புக்கும் யாராவது நல்ல விலை குடுத்தா நாளை ரயிலுக்கே ஏறிடுவேன்... நீர்தான் பாருமே – இருபதினாயிர ரூபா – ஜாடா எல்லா அய்ட்டத்தையும் இப்பவே குடுத்துடறேன்."

"இந்தாங்க ஐயரே, யாரும் ஆளு இல்லேன்னு நீங்க பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறீங்களே... நானே இருபதினாயிரத்துக்கு உங்க சொத்துக்களையும் வாங்கிட்டுப் பேசாம கிராமத்திலேயே 'டிக்கானா' போட்டாலும் போட்டுடுவேன்..." என்று சொல்லி வைத்தார் முதலியார்.

"நான் இப்பவே ரெடி! சாமியாரே நீர் சாட்சி" என்று கையடித்துச் சொன்னார் சுப்புராம ஐயர்.

"என்னாங்க மொதலியாரே... எதாவது நடக்கிற காரியமா பேசுங்க. ஐயரு வேற யாருக்காவது தன் நிலத்தைக் குடுத்துட்டுப் போனாவே, உங்க நிலத்தெப் பாத்துக்க ஆள் வேணும்... இந்த லட்சணத்திலே அவுரோட நிலத்தெயும் நீங்களே வாங்கிக்கினு ஆயிரரூபா உத்தியோகத்தையும் உட்டுட்டு இந்தக் கிராமத்திலே நெரந்தரமா நீங்க இருக்கப் போறீங்களாக்கும்?" என்று சிரித்தார் சாமியார்.

தான் கிராமத்துக்கு வந்து இந்த மூன்று மாதமாய் அடைந்து கிடக்கிற ரகசியம் தெரியாத சாமியாரை நினைத்து முதலியார் சிரித்துக் கொண்டார்.

விஷயத்தை சொன்னால் சாமியார் மூச்சடைத்துச் செத்துப் போகமாட்டாரோ?

–அடுத்த இதழில்



அன்னை ஸ்ரீசாரதா தேவி

சுவாமி விவேகானந்தர்

எவரேனும் எனக்கு மனமிரங்குவார்களா? யாரும் இல்லை – ஒரே ஒருவரைத் தவிர. அந்த ஒருவருடைய இரக்கவுணர்ச்சி ஆசிகளையும் நம்பிக்கையையும் ஊட்டியது. அவர் ஒரு பெண். பெருந்துறவியாகிய எங்கள் குருதேவருடைய மனைவி அவர். குருதேவர் இளைஞராக இருந்தபோதே அவர் இவரை மணந்துகொண்டார். அப்போது அவர் ஒரு சிறு குழந்தை. இளைஞனாக வளர்ந்து, குருதேவரிடம் ஆன்மிகப் பேருணர்வு தீவிரமாகிய காலத்தில் அவர் கணவரைக் காண வந்தார். திருமணமாகி நீண்ட காலம் ஆகியிருந்தும், வளர்ந்தபின் இருவரும் ஒருவரையொருவர் பார்த்ததில்லை. அவர் தன் மனைவியிடம், ‘இதோ பார், நான் உன் கணவன், இந்த உடலின் மீது உனக்கு முழு உரிமை உண்டு. உன்னை நான் மணந்து கொண்டவன் தான் என்றாலும், என்னால் உடல் உறவு கொண்டு வாழ முடியாது. அதை உன் முடிவிற்கே விடுகிறேன்’ என்றார். இதனைக் கேட்ட அந்தப் பெண்மணி அழுது, ‘இறைவன் தங்களுக்கு அருள்வானாக! அனைத்து ஆசிகளையும் வழங்குவானாக! உங்களைக் கீழ்மைப் படுத்துகின்றவளா நான்? இல்லவே இல்லை. முடியுமானால் உங்களுக்கு உதவவே விரும்புகிறேன். தாங்கள் மேற்கொண்ட செயலைத் தொடர்ந்து செய்யுங்கள்’ என்று மறுமொழி கூறினார்.

அத்தகையவர் அந்தப் பெண்மணி. கணவர் தம் பாதையிலேயே சென்று மாபெரும் துறவியாகத் திகழ்ந்தார். மனைவி எட்ட இருந்தபடியே தம்மால் முடிந்த அளவுக்கு உதவினார். குருதேவர் ஓர் ஆன்மிக குருவாகத் திகழ்ந்தபோது, அவரிடம் வந்த இந்தப் பெண் அவருடைய சிஷ்யை ஆனார். உண்மையில் இவரே அவருடைய முதல் சிஷ்யை, கணவருடைய உடல்நலத்தைப் பேணுவதில் இவர் தமது வாழ்நாள்களைக் கழித்தார். அந்த மகானோ, தாம் வாழ்கிறோமா இல்லையா என்பதுகூட அறியாதவராக இருந்தார். சிலசமயம், பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு, கனன்று எரிகின்ற தணலின்மீது அமர்ந்துவிடுவார். நெருப்பு என்பதையே அறிய மாட்டார். எரிந்து கொண்டிருக்கும் தணல்! அத்தனை நேரமும் உடல்நினைப்பே அற்றவராக


ஓம் சக்தி

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.

– வள்ளலார்

மலர்:39 | **ஜூலை 2021** | **இதழ்:6**

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் - வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ.180/–
ஆயுள் சந்தா ரூ.2500/–
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,** போன்; 0422 4322471, 0422 4322222
வெளியிட்டோர்; **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

இருப்பார்.

எங்கள் குருதேவரின் மனைவியான இந்தப் பெண்மணி மட்டுமே இளைஞர்களாகிய எங்களுக்கு, எங்கள் கருத்துகளுக்கு ஆதரவு காட்டியவர்; அனுதாபப்பட்டவர். ஆனால் அவரோ ஆதரவற்றவராக இருந்தார். எங்களைவிட ஏழையாக இருந்தார்.

அன்னை சாரதா தேவி என்பவர் யார், அவரது வாழ்க்கையின் உட்பொருள் என்ன என்பதை நீங்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை; உங்களுள் யாருமே புரிந்துகொள்ளவில்லை. படிப்படியாகத் தெரிந்துகொள்வீர்கள். சகோதரா, சக்தி இல்லாமல் உலகிற்கு முன்னேற்றம் கிடையாது. நமது நாடு அனைத்து நாடுகளிலும் கடைசியில் இருப்பது ஏன்? பலமிழந்து கிடப்பது ஏன்? நம் நாட்டில் சக்தி அவமதிக்கப்படுவதுதான் காரணம். இந்தியாவில் அந்த மகா சக்தியை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்வதற்கே அன்னை தோன்றியுள்ளார்; அவரை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் கார்க்கிகளும் மைத்ரேயிகளும் உலகில் தோன்றுவார்கள். சகோதரா, தெரிகிறதா? படிப்படியாக எல்லாம் தெரிந்துகொள்வீர்கள்.

எனவேதான் முதன்முதலாக அன்னையின் மடத்தை அமைக்க விரும்புகிறேன். சக்தியின் அருள் இல்லாமல் என்ன சாதிக்க முடியும்? அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் என்ன காண்கிறேன்? சக்தி வழிபாடு, சக்தி வழிபாடு. ஆனால், இவர்கள் தெரியாமல் வழிபடுகின்றனர். அதாவது காமத்தின் மூலம் அதைச் செய்கின்றனர். தூய உணர்வுடன், சாத்வீக முறையில், தாய்மை எண்ணத்துடன் வழிபடுபவர்களுக்கு எந்த நன்மைதான் உண்டாகாது? என் கண்கள் திறக்கின்றன, நாளுக்கு நாள் எல்லாம் தெளிவாகின்றன. எனவே, முதலில் அன்னைக்காக மடம் கட்டியாக வேண்டும். முதலில் அன்னையும் அன்னையின் மகள்களுமே, பிறகுதான் தந்தையும் தந்தையின் பிள்ளைகளும், புரிகிறதா?

எல்லோரும் நல்லவர்களே, எல்லோரையும் ஆசீர்வதியுங்கள், அன்னையின் இடத்தைத் தவிர உலகில் வேறு எல்லா இடங்களிலும் 'உணர்வு வீட்டில் திருட்டு' தான். சகோதரா, கோபம் கொள்ளாதீர்கள் - நீங்கள் யாரும் இப்போதும் அன்னையைப் புரிந்துகொள்ளவில்லை. எனக்கு அன்னையின் அருள், தந்தையின் அருளைவிட லட்சம் மடங்கு பெரியது. அன்னையின் அருள்தான், ஆசிதான் எனக்கு மிகமிகப் பெரியது.. அன்னையின் விஷயத்தில் நான் சற்று வெறிகொண்டவனே; மன்னித்துவிடுங்கள். அன்னை மட்டும் கட்டளை இடுவாரானால்

“

சகோதரா, சக்தி இல்லாமல் உலகிற்கு முன்னேற்றம் கிடையாது. நமது நாடு அனைத்து நாடுகளிலும் கடைசியில் இருப்பது ஏன்? பலமிழந்து கிடப்பது ஏன்? நம் நாட்டில் சக்தி அவமதிக்கப்படுவதுதான் காரணம். இந்தியாவில் அந்த மகா சக்தியை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்வதற்கே அன்னை தோன்றியுள்ளார்; அவரை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் கார்க்கிகளும் மைத்ரேயிகளும் உலகில் தோன்றுவார்கள். சகோதரா, தெரிகிறதா? படிப்படியாக எல்லாம் தெரிந்துகொள்வீர்கள்.

”






வீரபத்திரரும் பூதகணங்களும் எல்லாவற்றையும் செய்து முடித்துவிடுவார்கள்.

சகோதரா, நான் அமெரிக்கா வருமுன் அன்னையின் ஆசியை நாடிக் கடிதமெழுதினேன், அன்னையும் ஆசி தந்தார், ஒரே மூச்சில் கடலைத் தாண்டிவிட்டேன், பார்த்தீர்களா! இந்தக் கடுமையான குளிரில் ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவு செய்கிறேன். எத்தனையோ துன்பங்களுடன் போராடி பணம் சேர்க்கிறேன் – அன்னையின் மடம் வந்தே தீரும். வாழும் துர்கையை விட்டு விட்டு மண்ணால் செய்த துர்கையை வழிபடுகின்ற பாபுராமின் அன்னைக்கு இந்த வயதான காலத்தில் மூளைதான் குழம்பியிருக்க வேண்டும். சகோதரா, நம்பிக்கை ஒரு பெரும் செல்வம். வாழும் துர்கையை வழிபடுவது எப்படி என்பதைக் காட்டிய பின்னர்தான் நான் என் பெயருக்குத் தகுதியுடையவன் ஆவேன்.

ஓர் இடம் வாங்கி வாழும் துர்கையை அங்கே எழுந்தருளச் செய்கின்ற அன்றுதான் நான் நிம்மதிப் பெருமூச்சு விடுவேன். அதற்குமுன்பு நான் இந்தியாவிற்கு வரவில்லை. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அதைச் செய்யுங்கள். பணம் அனுப்ப முடியுமானால் நான் சுமை தீர்ந்தவனாவேன். இந்த எனது துர்கா பூஜையை நடத்திக் காட்டுங்கள் பார்க்கலாம். அன்னையின் வழிபாட்டிற்கு கிரீஷ் ஏராளமாக செலவு செய்கிறார்.

அவர் புண்ணியம் செய்தவர், அவரது குலம் பேறுபெற்றது. சகோதரா, அன்னையின் பெருவாழ்வு என் நினைவில் வரும்போதெல்லாம், ‘ஆமாம், ராமன் யார்?’ என்று எனக்குள் சொல்லிக் கொள்கிறேன். சகோதரா, இந்த விஷயத்தில் நான் சற்று வெறிகொண்டவன் என்று அதனால்தான் சொல்கிறேன். ராமகிருஷ்ண பரமஹம்சரைக் கடவுள் என்றோ மனிதன் என்றோ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால் சகோதரா, யாருக்கு அன்னையிடம் பக்தி இல்லையோ, அவனது வாழ்க்கை வீண் என்று சொல்கிறேன்.

ஓவியங்கள் : எஸ்.இளையராஜா



இளஞ்சிவப்பு நிறத்தில் சேலை கட்டி
இதழ்களால் என்றும்போல் நகை மீட்டி
தனது மனதிற்கும் ஆனந்த களிப்பூட்டி
தன் குழந்தைக்கு தான் கட்டிய பூச்சூட்டி
அலங்கரித்தாள் அவள் ஆசைப்படி
அள்ளிக்கொண்டது வீட்டு வாசற்படி
வலக்கரமோ அம்மாவின் மடி மீது
வைத்த மகள் விழிகளோ வழி மீது
‘எப்பம்மா வருவாரு அப்பா?’
‘இப்பவே வருவாரென்று’ அம்மா
‘பாட்டியின் வீட்டுக்கு எதுக்குப் போறோம்?’
‘பண்டிகையாம் ஊரில் அதுக்குப் போறோம்’
கேள்வி பதில் நிகழ்ச்சி இருவருக்கும்
கேட்டபடி தொடரும் அப்பா வரும்வரைக்கும்.





தங்கமகன்



கார்குழலோ பூவோடு
கைவிரல்கள் நெஞ்சோடு
கருவிழிகள் கனிவோடு
கடவுளிடம் மொழிவதென்ன?

பணிந்தபடி நீ அமர்ந்து
பட்டியலிடும் வேண்டுதல்கள்
நினைந்தபடி நிறைவேற
நீ உருகிக் கேட்கிறாயோ?

உலகெங்கும் நலம் திரும்பி
ஒளிபெருகத் தொழுகிறாயோ?
ஊரடங்கை முடித்து வைக்கும்
உத்தரவுக்கு பிரார்த்தனையோ?

கல்விதரும் கூடங்களின்
கதவு திறக்கச் சொல்கிறாயோ?
உன் மனதில் ஒளித்தபடி நீ
உச்சரிக்கத் தயங்குகின்ற
கொள்ளை விருப்பங்களையும்
கூறாமலேயே அறிந்துகொள்ளும்
பகவானே உன் பக்கம்!
பாவையே! இனி ஏன் துக்கம்?

எஸ்.கண்ணன்கோபாலன்

படம்: மதன் சுந்தர்

அகத்தியர் கேட்ட வரம்!



பொருநைக் கரையில் புனித ஆலயங்கள்! 3

முருகனுக்கும் விநாயகருக்கும் ஆறுபடை வீடுகள் அமைந்திருப்பது போல் சாஸ்தாவுக்கும் சொரிமுத்து ஐயனார், அச்சன்கோயில், ஆரியங்காவு, குளத்துப்புழை, பந்தளம், சபரிமலை என்று ஆறு படைவீடுகள் அமைந்திருக்கின்றன. சாஸ்தாவின் முதல் படைவீடு இதுதான் என்று சொல்லப்படுகிறது. பண்டமாற்றுமுறை நடைமுறையில் இருந்த அந்தக் காலத்தில் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில்தான் சந்தை நடைபெறுவது வழக்கம். அப்போது பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த பொதி மாடு ஒன்றின் காலடி பட்டு ஓரிடத்தில் ரத்தம் பீறிட்டு வந்தது. திடுக்கிட்டு நின்ற வணிகர்கள் கேட்கும்படியாக ஓர் அசரீரி,

'குருதி பெருகும் இடத்தில் இருப்பவர் மகாலிங்க சுவாமி. இனி வரும் காலங்களில் மகாலிங்க சுவாமியை, சொரிமுத்தையன், சங்கிலிமாடன் போன்ற மூர்த்திகள் சூழ ஆலயம் எழுப்பி வழிபட்டு வாருங்கள்' என்று ஒலித்தது. அதன்படியே வணிகர்களும், ஊர் மக்களும் சேர்ந்து கோயில் எழுப்பி, பல சந்நிதிகளை அமைத்து வழிபட்டு வந்தனர். இமயமலையில் பரமேஸ்வரனுக்கும், பார்வதிக்கும் திருக்கல்யாணம் நடந்தது. இந்த தெய்விகக் காட்சியைக் காண்பதற்காக தேவர்கள், முனிவர்கள் என அனைவரும் திருக்கயிலைக்குச் சென்றனர். இதன் காரணமாக வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. சமநிலை தவறிய பூமியைச் சமன்படுத்தத் திருவுள்ளம் கொண்ட சிவபெருமான் அகத்தியரை அழைத்து, 'அகத்தியனே! நீ தென்திசை நோக்கிச் செல். உன்னால்தான் இந்த உலகை சமநிலை பெறச் செய்ய முடியும்' என்றார்.

இறைவனின் ஆணைப்படி நடக்க சித்தம் கொண்ட அகத்தியர், தென்திசை நோக்கி பயணித்து பொதிகை மலையை வந்தடைந்தார். அங்கு தற்போது சொரிமுத்து அய்யனார் சந்நிதி அமைந் திருக்கும் இடத்தில் நீராடி, தனது நித்திய காரியங்களை முடித்துக் கொண்டு யோக நிஷ்டையில் அமர்ந்தார். அப்போது ஜோதி ஒன்று அவரது மனக் கண்ணில் தோன்றியது. அதைக் கண்டு அதிசயித்த அகத்தியர், தம்முடைய ஞானதிருஷ்டியின் மூலம், சாஸ்தாதான், சொரிமுத்து ஐயனாராக சிவபெருமானை பூஜிக்கும் காட்சியே அந்த ஜோதி வடிவம் என்பதைத் தெரிந்துகொண்டார். சொரிமுத்து அய்யனாருடன், பேச்சியம்மன், பிரம்மராட்சசி ஆகியோரும் மகாலிங்க சுவாமியை வழிபட்டனர்.

அந்த திவ்யக் காட்சியை தரிசித்த அகத்திய முனிவர் அளவற்ற ஆனந்தம் அடைந்தார். பின்னர் இறைவனிடம், 'இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை தரிசித்து வழிபடுவோருக்கு எல்லா இன்னல்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் ஆக வேண்டும்' என்றும், 'பக்தர்கள் தனது மக்களுடன் வழி, வழியாய் எல்லாப் பேறுகளும் பெற்று





பெருவாழ்வு வாழ வரம் தர வேண்டும்' என்றும் வேண்டிக்கொண்டார்.

அப்போது சாஸ்தாவானவர் 'மலர் சொரிமுத் தய்யனார்' என்று பெயர் தாங்கி, மகாலிங்கேசுவரர், சங்கிலி பூதத்தார், காத்தவராயர், மேலவாசி பூதத்தார், மேலவாசல் விநாயகர், தட்சிணாமூர்த்தி, கும்பமாமுனி, பெரியசாமி, பேச்சியம்மன், தூண்டில் மாடன், ஜோதிருத்திரன், பட்டவராயர் போன்ற பல தெய்வங்களுடன் ஒருசேர காட்சி கொடுத்து மறைந்தார். அன்று தொடங்கி இத்தலத்தில் மேற்சொன்ன அனைத்து தெய்வங்களுக்கும் சந்நிதி ஏற்படுத்தி வழிபாடு நடைபெற்று வருகிறது.

சொரிமுத்து ஐயனார் கோயிலில் பட்டவராயரும் மிக விசேஷமாக வழிபடப்பெறுகிறார்.

பட்டவராயரின் சிலிர்ப்பூட்டும் வரலாறு...

பண்டமாற்று வியாபாரத்துக்காக பொதிகை மலைக்கு வந்த வியாபாரிகளில் ஒருவர் பட்டவராயன். அவர் ஆசாரமான அந்தணர் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்தவர். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பார். வைரம், வைடூரிய வியாபாரம் செய்யும் குடும்பம் அவர்களுடையது. தாய் மற்றும் சகோதரர்களுடன் வாழ்ந்து வந்தார். வளர்ந்து இளைஞனான பிறகு தானும் தன் சகோதரர்களுடன் வியாபாரம் செய்யப் போவதாகத் தன் தாயிடம் கூறினார். அவர் வியாபாரத்துக்குச் செல்வது தாயாருக்குப் பிடிக்கவில்லை. எனவே, 'மகனே, நீ வியாபாரத்துக்காக கேரளா செல்வது எனக்குப் பிடிக்கவில்லை. இங்கேயே ஏதேனும் தொழில் செய்தாலே போதும். வியாபாரமெல்லாம் உன் அண்ணன்மார்கள் பார்த்துக்கொள்வார்கள்' என்றார். ஆனால், பட்டவராயன், 'நம்முடைய வியாபாரம் விருத்தி அடையவேண்டும் என்றால், நான் வியாபாரத்துக்குப் போய்த்தான் ஆகவேண்டும்' என்று பிடிவாதமாகக் கூறினார். தாயாருக்கு மேலும் மறுத்துப் பேச முடியவில்லை. அரை மனதாக சம்மதம் தெரிவித்தார். தாயிடம் இருந்து விடை பெற்றுக்கொண்டு தனது சகோதரர்களுடன் கேரளா நோக்கி கிளம்பினார். கண்ணீர் மல்க தாயாரும் விடை கொடுத்தார்.

தன் சகோதரர்களுடன் வியாபாரத்துக்குப் புறப்பட்டு விட்டார் பட்டவராயர். அவர்கள் பொதிகை மலைப் பக்கமாக வந்துகொண்டிருந்த போது, தாகம் எடுத்தது. எங்கேனும் சுனை இருக்கிறதா என்று சுற்றுமுற்றும் பார்த்தார்கள். எங்கும் நீர் சுனை காணப்படவில்லை. தூரத்தில் ஒரு குடிசை இருப்பதைக் கண்டனர். அனைவரும் அந்த குடிசைக்கு வந்து தண்ணீர் கேட்டனர். குடிசையில் இருந்த இரண்டு பெண்கள் வெளியில் வந்தனர். கரிய உருவத்துடன் அவலட்சணமாகக் காணப்பட்ட அந்தப் பெண்களைப் பார்த்து சகோதரர்கள் முகம் சுளித்தனர். ஆனாலும், தண்ணீரைப் பழிக்கக்கூடாது என்பதற்காக அவர்கள் கொடுத்த தண்ணீரைப் பருகிவிட்டுத் திரும்பினர். கடைசியாக பட்டவராயருக்குத் தண்ணீர் கொடுத்தபோது எப்படியோ சில சொட்டு நீர்த்துளிகள் சகோதரிகளின் கைகளில் பட்டுவிட்டது. அப்படி நீர்த்துளிகள் பட்ட இடமெல்லாம் பொன்னைப் போல் பளீரிட்டது. அதைக் கண்ட பட்டவராயர், 'இந்தப் பெண்களின் கையின் சிறு பகுதியே இத்தனை அழகாக இருந்தால், இவர்கள் நிச்சயம் பேரழகு கொண்டவர்களாகத்தான் இருக்கவேண்டும்' என்று நினைத்த பட்டவராயர், மேலும் சில தினங்கள் அங்கேயே தங்கியிருந்து அந்தப் பெண்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள முடிவு செய்தார். சகோதரர்கள் எவ்வளவோ வற்புறுத்தி அழைத்தும் செல்ல மறுத்துவிட்டு அங்கேயே தங்கிவிட்டார்.

உண்மையில் அந்த இரண்டு பெண்கள் யார்?

- தொடரும்

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23

Date of Publication
28th Every Month

Regd. No. : CB/016/2021-23
OM SAKTHI - JULY - 2021